அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 31-12-1993


### இயற்கை அனர்த்தங்களால் பேசாலை அகதிகள் அவதி!

மன்னார், மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணப் பகுதிகளில் தொடர்ந்தும் பெருமழை பெய்துவருகின்றது. பத்து வருடத்திற்குப் பின்னர் ஏற்பட்டுள்ள பெருமழை வெள்ளப்பெருக்கால், பெருஞ்சேதம் ஏற்பட்டுள்ளதோடு இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாகி உள்ளனர். இப்பெருமழையால் பேசாலை, தலைமன்னார் பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பேசாலை அகதிமுகாம் வெள்ளத்தால் பாதிப்படைந்துள்ளதால், அங்கிருந்த அகதிகள் மேட்டுப்பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். அத்துடன் சில மாதங்களாக உணவு மற்றும் மருந்துகளுக்கு பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கியிருந்த மடு அகதிமுகாம் மக்களின் நிலைமை தொடர்ந்து பெய்துவரும் மழையால் மேலும் மோசமடைந்துள்ளது. ■

# மீண்டும் இந்தியா: சிறீலங்காவின் புதிய நிலைப்பாடு !

## ☆ சர்வதேச அழுத்தங்களை திசை திருப்பும் முயற்சி

## ☆ பெப்ருவரியில் பெரும் போருக்கு ஏற்பாடுகள்

தமிழின அழிப்பிற்கும், மனித ...ரிமை மீறல்களுக்கும், வன் ...றைகளுக்கும் காரணமாயுள்ள ...லங்கைத்தீவின் தேசிய இனங் ...க்கிடையிலான முரண்பாடு ...ளுக்கு அரசியல் தீர்வைக்கா ...ணும்படி சிறீலங்காவை, சர்வதேசநாடுகள் நெருக்கிவருகின்றன. இச் சர்வதேச அழுத்தங்களால், சிறீலங்காவுக்கு, தான் நினைத்த மாதிரி ஆயுதக் கொள்வனவுகளை நடாத்த முடியாத ...ழ்நிலை ஏற்பட்டுள்ளது. தமி... மக்களின் தேசிய பாதுகாப்...ருப் பொறுப்பான தமிழீழ ...டுதலைப்புலிகளின் பலம் பன்...ங்கு பெருகிவருவதையும் ...து படைகளின் மனோபலம் ...றைவடையும் அதேவேளை, ஆயுதக் கொள்வனவுக்கான நெருக்கடிகள் அதிகரிப்பதையும் ...ணர்ந்த சிறீலங்கா அரசாங்...ம், மீண்டும் இந்தியாவிடம் இராணுவ, அரசியல் சரணாகதி அடைந்தாவது தனது நிலையைத் தக்கவைத்துக் கொள்ள ...யன்று வருகின்றது.

### பிரித்தானியா - அவுஸ்திரேலியா தடை.

...ரித்தானியாவிலிருந்து அதி...வக படகுகளைக் கொள்வனவு ...ய்ய சிறீலங்கா எடுத்த முயற்...ளைப் பிரித்தானிய அரசாங்... தடுத்து நிறுத்தியது. அவ்...று அவுஸ்திரேலியாவிலி... சக்திவாய்ந்த கிரனைட் குண்டுகளைக் கொள்வனவு செய்வதற்கு சிறீலங்கா அரசாங்கம் எடுத்த முயற்சிகள், அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நேரடித் தலையீட்டினால் தடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் ரோபர்ட்ரே "சிறீலங்காப் படைகளுக்கு, 'அவுஸ்திரேலிய டிபென்ஸ் இன்டஸ்ரீஸ்' (A. D. I) கிரனைட்டுக்களை விற்பனை செய்வது தேசிய நலன்களுக்கு எதிரானதாக அமையும்" என அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்தில் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டுள்ளார். இவ்வாறு சிறீலங்கா அரசாங்கத்தால், தான் நினைத்த மாதிரி ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய முடியாத சூழ்நிலை சர்வதேச மட்டத்தில் வலுப்பெற்று வருகின்றது. அதேவேளை சர்வதேச மட்டத்தில் சிறீலங்கா அரசாங்கத்தை, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும்படியான நிர்ப்பந்தங்களும் அதிகரித்து வருகின்றது. சமீபத்தில் சிறீலங்கா ஜனாதிபதியைச் சந்தித்த ஐரோப்பிய சமூகத்தின் 12 தூதுவர்களும், இவ்விடயத்தில் மேலும் அழுத்தத்தைக் கொடுத்துள்ளதாகச் சிறீலங்காவின் தலைநகரான கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் உடனடியாக அரசியல்தீர்வை முன்வைக்காவிடில், இனிமேலும் சிறீலங்காவின் சாக்குப் போக்குகளை யேற்று ஆதரவளிக்கும் நிலையில் சர்வதேச சமூகம் இல்லையென்பது தெளிவாகி வருகின்றது.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....



விடுதலைப் புலிகளின் பலத்தை உலகறியச் செய்த பூநகரிச் சமரில் கைப்பற்றிய T55 ரக தாங்கியுடன் விடுதலைப் புலிகள்

# இந்தியாவின் உள்சதி "மாத்தையா" விசாரணையில் !

இந்திய மத்திய அரசு எவ்வகையிலேனும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்துவிட வேண்டுமெனக் கங்கணம் கட்டி நிற்கிறது. நேரடியாகத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மோதாது, மறைமுகமாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்தால் மட்டுமே, தமிழகத்தில் தமிழ்த் தேசிய விழிப்புணர்வால் ஏற்படக்கூடிய அரசியல் கொந்தளிப்புக்களை சமாளிக்க முடியும் என்பது மத்திய அரசின் கருத்தாகத் தெரிகிறது.

இதன் அடிப்படையில் சிங்கள அரசாங்கத்திற்கு இராணுவ ஆலோசனைகள் -விநியோகம் என்பனவற்றை அதிகரித்தல், பயிற்சி அளித்தல் போன்றவற்றைச் செய்யும் இந்திய அரசு, இதுகாலவரை தமிழ்த்துரோகக் குழுக்களை பயிற்றுவித்தல் ஆயுதமயப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்கலாம் என முயன்று வந்தது. ஆயினும் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுதியையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி -எழுச்சிகளையும் தடுக்க -குலைக்க முடியாது தவித்து வரும் இந்திய அரசு, 'உள்சதி' மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரையும், சில முக்கிய உறுப்பினர்களையும் அழித்தொழிப்பதற்கான சதித்திட்டமொன்றை தயாரித்தது.

### 'மாத்தையா' கருவி

எவ்விதத்திலேனும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்தினை, உள்சதிமூலம் உருக்குலைக்க வேண்டுமெனத் திட்டமிட்ட இந்திய மத்திய அரசு அதன் பொறுப்பை, 'ஆராய்ச்சி பகுப்பாய்வுப் பகுதி' (RAW) எனப்படும் உளவுப்படையிடம் ஒப்படைத்தது. இவ் இந்திய ஆராய்ச்சி பகுப்பாய்வுப் பிரிவினர், தமிழீழத்தில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் மிக உன்னிப்பாக அவதானித்து ஏற்ற சமயம் தேடிக்கொண்டிருந்தனர். இவ்வேளையில் தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவாக இயங்கிவந்த 'தமிழீழ

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# சர்வதேச நிவாரண அமைப்புக்களை செயற்படாது தடுக்கும் சிறீலங்கா

...மீழ மக்களுக்கு நிவாரணப்...கள் செய்து வரும் சர்வதேச ...ப்புக்களின் செயற்பாடுக... தடுக்கும் சிறீலங்கா அர...த்தின் நடவடிக்கைகள் ...ரித்து வருகின்றன. ...லங்கை செஞ்சிலுவைச் சங்...தின் மடுப்பகுதி தலைவர், ...யலாளர் உட்பட நால்வர் ...ாழும்புக்கு அலுவலக ரீதியாக ...யம் செய்த போது, சிறீ...கா அவர்களைக் கைது ...து நீதிமன்றம் எதிலும் ...ர் செய்யாது பல மாதங்க... அடைத்து வைத்துள்ளது.

இதனால் பாதிப்பு அடைந்த ஓமந்தை, கனகராயன்குளம், புளியங்குளம், கிளிநொச்சி ஆகிய பிரதேச மக்களுக்கு அவர்களது பயன்பாட்டுக்கு என இருந்த அம்புலன்ஸ் வண்டியைப் பறிமுதல் செய்ததன் மூலம், மேலும் நெருக்கடியை சிறீலங்கா தோற்றுவித்துள்ளது. வவுனியா -கிளிநொச்சி ஆதார வைத்திய நிலையங்களுக்கிடையே நடைபெற்று வந்த அம்புலன்ஸ் தொடர்பு சேவை முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

இது ஒருபுறமிருக்க, இப் பகுதியில் கடமையாற்றிய செஞ்சிலுவைச் சங்க வெளிநாட்டு அலுவலர் ஒருவரை அவர் தடைசெய்யப்பட்ட பற்றரிகளை வடக்குக்குள் கொண்டு சென்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில், நாட்டைவிட்டு வெளியேற்ற சிறீலங்கா முயற்சித்து வருகிறது. உலக வரலாற்றிலேயே டோர்ச் பற்றரிகள் வைத்திருந்தமை தேசத் துரோகக் குற்றம் எனக் கூறப்பட்டு, ஒரு பொதுநல ஊழியர் நாட்டைவிட்டு வெளி

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



# தமிழீழம் எமதாகும்

"தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இராணுவ -அரசியல் சாதனைகள் படைத்த தளபதி கிட்டுவும், கூடவே ஒன்பது வீரத்தமிழ் வேங்கைகளும், இந்திய அரசின் சர்வதேசக் கடல் எல்லை அத்துமீறலால், தம்முயிரினை தற்கொடையாக்கி சந்தன மேனிகளை செந்தணலாக்கிய அதிர்ச்சியுடன், 1993 பிறந்தது. அந்த 1993 ஜனவரி 16 ஆம் திகதி தமிழீழ வரலாற்றில், இந்திய அரக்கரின் கோரப் பற்கள் பதிக்கப்பட்ட மற்றொரு நாளாக 'எந்நாளும்' நிற்கப் போகிறது. படைபலம் கொண்டும், புறபலம் கொண்டும், இந்திய வல்லாதிக்கம் உள்ளும் புறமும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்குச் செய்து வரும், சர்வதேசச் சட்டங்களுக்கு விரோதமான செயற்பாடுகளின் சிகரமாக இந்த ஜனவரி 16 ஐ உலகு இனம் கண்டது. "பொங்கிடும் கடலில் புலி மறவீரர் போய்வரக்கூட முடியாதா? நாம் எந்தையர் கடலில் எழுந்திடக் கூட இந்திய நாடு தடைதானா?" என்கின்ற கேள்வியுடன் தமிழீழ மக்கள், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மேலும் உறுதியோடு முன்னெடுக்கத் தொடங்கினர்.

இதன் பயனாக, 1993 தமிழீழ விடுதலை வரலாற்றில் மேலும் பல சாதனைகளை ஏற்படுத்தியது. தமிழ் மண் மீது கால் வைத்திருந்த மாற்றான் முகாம்கள் பல சரிந்தன. "அரசியல் பிழைத்தார்க்கு அறங் கூற்றாகும்" என்ற சிலப்பதிகாரச் சொல்லுக்கு இலக்கணமாய் நாற்புறமும் படையோடு நடந்த சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் வரலாறும் மாறியது. கொடுமை பல செய்து தமிழின அழிப்பின் சூத்திரதாரியாய் நின்ற முன்னாள் சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலியும், தான் படைத்த வன்முறையின் சுவையைத் தானே கண்டு கொண்டதும் இந்த 1993 இல் தான். 1992 இல் இராணுவத் தலைமைகளை கூட்டோடு இழந்து தடுமாறத் தொடங்கிய சிறீலங்கா அரசாங்கம், 1993 இல் அரசியல் தலைமைகளையும் இழந்து, இன்றைய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவைத் தலைவராக ஏற்க வேண்டிய அரசியல் நெருக்கடிக்கு ஆளானது. அதேவேளை சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளுக்கு ஏற்படும் ஆளணிச் சேதங்கள், சிங்கள மக்கள் மத்தியில் இந்த யுத்தம் தேவையற்ற ஒன்று என்ற சிந்தனையைத் தூண்டிவருகிறது.

'அதேவேளை சுவரில் எறிந்த பந்து திரும்ப வந்து அடிப்பது போல்' யுத்தத்தின் விளைவாக சிறீலங்காவின் பொருளாதாரம் 'கடன்படு' பொருளாதாரமாக மட்டுமல்லாது சிங்கள மக்களின் மேல் சுமைகளைச் சுமத்தும் இயல்பினதாகவும் மாறி வருகிறது. இவைகளின் பயனாக சிங்கள பௌத்த பேரினவாத வெறித்தன்மை, சிங்கள மக்கள் மத்தியில் தேய்வுறத் தொடங்கியதும், சிறீலங்கா ஜனாதிபதி விஜயதுங்கா, அந்த சிங்கள பௌத்த பேரினவாத வெறியை புனருத்தாரனம் செய்யும் கைங்கரியத்தை செய்யத் தொடங்கினார். "இங்கு இனப்பிரச்சினை கூட இல்லை பயங்கரவாதப் பிரச்சினை தான் உண்டு" என்ற புதிய கண்டுபிடிப்பை பிரகடனப்படுத்தினார். விடுதலைப் புலிகளின் அமைதித் தீர்வுக்கான வெளிப்படுத்தல்களையும், சிங்கள மக்களிடை தோன்றக்கூடிய புரிந்துணர்வுகளையும் முறியடிக்கத் தொடங்கினார். தாயக முழுமை அங்கீகரிக்கப்பட்ட சமஸ்டி முறை பற்றி பரிசீலிக்கத் தயார் என தலைவர் பிரபாகரன் அறிவித்தும், தாயக முழுமையை சிதறடிக்கக் கூடிய சகல நடவடிக்கைகளையும் சிறீலங்கா ஜனாதிபதி மேற்கொள்ளுகின்றார். பாராளுமன்றத் தெரிவுக்குழு, 'சமஸ்டி' முறை என்று எழுத்தில் இல்லாத அதே நேரம் இந்தியப் பாணியிலான அரசியலமைப்பு அதிகாரப் பரவலாக்கம் என ஒரு மயக்கமான, தெளிவற்ற அதிகாரப் பரவலாக்கம் பற்றிப் பேசுகிறது. வடக்கிற்கும் கிழக்கிற்கும், சப்ரகமுவா மேல் மாகாணங்களுக்கும் ஒரேவித அதிகாரப் பரவலாக்கம் எனக் கூறி சிறீலங்காவில் எல்லா இடத்திலும் ஒரேவிதமான பிரச்சினைதான் உள்ளது எனக் காட்ட முற்படுகிறது.

இதற்கிடை சிறீலங்கா ஜனாதிபதி 'அரசியல்தீர்வு' என்ற பேச்சையே விடுத்து இப்பொழுது இராணுவத்தீர்வு ஒன்றே வழி எனச் செயற்படுகின்றார். ஆயினும் 'யாழ்தேவி' நடவடிக்கை கொடுத்த தோல்வியும், மண்கிண்டிமலை முதல் பூநகரி வரை ஏற்பட்ட இழப்புக்களும் சிறீலங்கா ஜனாதிபதிக்கு, அவருடைய இராணுவத் தீர்வில் உள்ள கஸ்டத்தை விளக்கியிருக்கிறது. ஆயினும் இப்பொழுது "தேர்தலின் பின்பு வடக்கில் அறுவைச் சிகிச்சை செய்யப் போகிறேன்" எனும் அறிவிப்பை சிறீலங்கா ஜனாதிபதி விடுத்துள்ளார். அதாவது புலிவேட்டை என்ற பெயரில் தமிழ் மக்களை அழிப்பேன் என்பது ஜனாதிபதி பௌத்த சிங்கள பேரினவாதிகளுக்கு அளிக்கும் உத்தரவாதம். அதே நேரம் சிறீலங்காப் படைத் தளபதிகள் அனைவரும் கத்தோலிக்க சிங்களவர்களாக இருப்பது பௌத்த சிங்கள அரசியலமைப்பின் நோக்கங்களை நிறைவேற்ற துணைசெய்யாது என பௌத்த பிக்குகளின் மகாசபை கிளர்ந்தெழுந்துள்ளது. இந்நிலையில் மீண்டும் ஒரு பாரிய தாக்குதலை தமிழீழ மக்கள் மேல் தொடுப்பதின் மூலம்தான் விஜயதுங்காவால் பௌத்த சிங்கள பேரினவாதிகளை திருப்திப்படுத்த முடியும். இதைத்தான் 'அறுவைச் சிகிச்சை' என சிறீலங்கா ஜனாதிபதி இலக்கிய நயம்படக் கூறியுள்ளார். இந்த அறுவைச் சிகிச்சையின் நிபுணத்துவ டாக்டர்களாக இந்திய இராணுவத்தினரை அழைத்துவிட வேண்டுமென்பதே சிறீலங்கா ஜனாதிபதியின் நோக்கு. வெளிச்சதி தோல்வி கண்ட இந்தியா, விடுதலைப் புலி இயக்கத்திற்குள்ளேயே ஊடுருவி ஆற்றல்மிகு தலைவர்களை, புலிகளின் அதி நம்பிக்கைக்குரியவர்கள் மூலமே அழிக்கவென எடுத்த முயற்சிகளும் விடுதலைப் புலிகளின் ஆற்றல் மிகு உளவுப் பிரிவினரால் தடுக்கப்பட்டுவிட்டது. எனவே எப்படி, எவ்வடிவில் முன்பு போல் தனக்கு ஆயிரக்கணக்கில் ஆளணி பொருட்சேதங்கள் இல்லாது, சிறீலங்கா மூலம், புலிகளை அழித்து, தமிழீழத்தினூடாக நிலைபெறக் கூடிய தமிழ்த் தேசியத்துவ எழுச்சியை அழிக்கலாமென இந்தியா தவியாய்த் தவிக்கிறது.

ஆயினும், நீதியான யுத்தத்தை நடாத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளும் மக்களும் 'சத்தியம் சாகாது செந்தணலிலும் வேகாது' என்ற மன உறுதியோடு, '1994' இல் நம்பிக்கையோடு தலைவர் பிரபாகரன் தலைமையில் கால் வைக்கின்றனர். 'தமிழீழம் எமதாகும்; நாளை எமக்கொரு வாழ்வு கிடைத்திடும்' என்ற உறுதியுடன் அவர் வழி உழைப்போம். ■

# பேரினவாதத்தின் இறுதி ஆயுதம்

தமிழர்கள் தோற்கடிக்கப்பட வேண்டும். அல்லது ஒழித்துக் கட்டப்பட வேண்டும். இதற்கு எந்த வழியைக் கையாளவும் சிங்களப் பேரினவாதம் தயாராக உள்ளது. ஆரம்பத்தில் தனித்து இராணுவத் தீர்வை நாடினார்கள். எதிர்பார்த்த வெற்றி கிடைக்காததினால், பொருளாதாரத் தடையையும் இணைத்துக் கொண்டனர். தற்பொழுது நிவாரணத்துக்கான அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்தையும் தடை செய்ய வேண்டும் எனக் கோரத் தொடங்கியுள்ளனர்.

அண்மையில், கிழக்கு மாகாண இராணுவத் தளபதி பிரிகேடியர் ரொகான் குணவர்த்தனா, இது குறித்து வெகுவாகப் பிரஸ்தாபித்ததோடு, கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முற்பட்டுள்ளார். "கிழக்கு மாகாணத்தில், செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு நிவாரணங்கள் வழங்குவதை நிறுத்த வேண்டும்" எனக் கோரியுள்ளார்.

பிரிகேடியர் ரொகான் குணவர்த்தனாவின் இக் கோரிக்கையானது, தனியாக அவரது அபிலாசை என்று கூறிவிட முடியாது. இது சிங்களப் பேரினவாதிகளினதும், ஏன் அரசாங்கத்தினதும் உள்ளக் கிடக்கை என்றும் கூறலாம். அதாவது போரில் எவ்வழி முறையிலாவது வெற்றி பெற்றாக வேண்டும் என எண்ணுவோரின் விருப்பமாகும்.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு கண்டுவிடலாம் என ஆரம்பத்தில் கருதிய பேரினவாதிகளுக்கு போரின் நீட்சியும், தோல்விகளும் ஏமாற்றம் அளிப்பவையாகவே இருந்தன. இந்நிலையில் போரில் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற ஒரே குறிக்கோளில், இராணுவ அணுகுமுறைக்கு இசைவாகப் பொருளாதாரத் தடையும் கொண்டு வரப்பட்டது. பல கோணங்களிலும் செயற்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடையுடன், எரிபொருள் தடை, மற்றும் கடல் தடைச் சட்டம் என்பவற்றின் காரணமாக தமிழரின் பொருளாதாரக் கட்டமைப்பு முற்றாக நாசமாக்கப்பட்டது.

இருப்பினும் போர் வருடக்கணக்கில் நீடித்த போதும், இராணுவ வெற்றி என்ற குறிக்கோளை அரசால் அடைய அடைய முடியவில்லை. இந் நிலையில் தான், சிங்கள இராணுவத்துடன் ஆயுதப் போரை நடத்தும் வேளையில், பட்டினியுடனும் ஒரு போரை நடத்தும் நிலையைத் தமிழ் மக்களுக்கு உருவாக்கி, அதன் மூலம் ஓர் இராணுவ ரீதியான வெற்றியை ஈட்டிவிடலாம் எனச் சிங்களப் பேரினவாத சக்திகள் முற்பட்டுள்ளன. இது அவர்களின் இறுதி ஆயுதமாகும்.

இதன் ஒரு கட்டமாக, தமிழர் பகுதியில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச மனிதநேய ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் செயற்பாட்டைக் கட்டப்படுத்துவதன் மூலம், தமிழர்களுக்கு இவர்கள் மூலமாகக் கிடைக்கும் சிறிதளவு உதவிகளையும் நிறுத்துவதற்கு சிங்களப் பேரினவாத சக்திகள் முற்படுகின்றன. இந்த வகையில் தான், அரச சார்பற்ற நிறுவனங்களின் நிவாரண நடவடிக்கைக்கு எல்லைகள் வகுப்பதிலும், இவ் அமைப்புக்கள் மீது அநாவசியமான குற்றச்சாட்டுக்களையும் சுமத்த முற்பட்டுள்ளன.

அண்மையில், பாராளுமன்றத்தில் பேசிய ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் கட்சன் சமரசிங்கா, "சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இங்கு இருக்கும் வரைக்கும் இந்தப் போரை முடிக்க முடியாது எனத் தன்னிடம் மேஜர் ஜெனரல் விஜயவிமலரெட்னா கூறியிருந்தார்" எனத் தெரிவித்துள்ளமையும் இதன் வெளிப்பாடே ஆகும். அதாவது, அரச சார்பற்ற நிறுவனங்கள், மனிதநேய ஸ்தாபனங்கள் என்பனவற்றின் நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம் தமிழ் மக்கள் மீது விதிக்கும் கட்டுப்பாடுகள் தளர்வுறுகின்றன. தமிழர் பகுதியில் அரசு மேற்கொள்ளும் அநீதிகள் வெளியுலகைச் சென்றடைகின்றன எனவும் பேரினவாதிகள் கருதுகின்றதே இதற்கான காரணமாகும்.

அதாவது, ஒரு மூடப்பட்ட நிலையில் வைத்து தமிழரை ஒழித்துக்கட்ட அரசு விரும்புகின்றது. இராணுவ ரீதியான தாக்குதலுடன் அத்தியாவசிய சேவைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இதனைச் சாதிக்கலாம் எனவும் அது எண்ணுகின்றது. ஆனால், சிங்கள அரசாங்கத்தால் இதனை அடைய முடியாது. ஏனெனில், தமிழ் மக்கள் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துப் பழக்கப்பட்டவர்கள். அவ்வாறு இல்லாது விட்டால், தமிழீழப் போராட்டம் இன்றைய வளர்ச்சிக் கட்டத்தை அடைந்திருக்க முடியாது. ■

## அரசசார்பற்ற
# தொண்டர் நிறுவனங்களைப் பதியும்படி சிறீலங்கா வலியுறுத்து

அவசரகாலச் சட்டத்தின் கீழ் தொண்டர் நிறுவனங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டும் எனும் சிறீலங்கா அரசாங்கத்தின் அறிவிப்பு தமிழர்களுக்கு புனர்வாழ்வு வேலைகளில் ஈடுபட்டு வரும் சமூக நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் மறைமுகத்தடை என கொழும்பு அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இந்தப் புதிய உத்தரவு மூலம் தமிழ்ப்பகுதிகளுக்கு புனர்வாழ்வுப் பணிகளுக்கு என கொண்டு செல்லப்படும் பொருட்களை, கையாளும் முகவர்கள் கடும் சிரமத்துக்கும் இராணுவக் கண்காணிப்புக்கும் இலக்காகக் கூடிய புதிய நிலை தோன்றியுள்ளது. ■

# மாவீரர் நாள் 1993  பிரான்ஸ்

கடந்த 27. 11. 1993 மாலை 6. 30 மணிக்கு பாரிசில் உள்ள ரியானோன் மண்டபத்தில் மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. தமிழீழ மண்ணுக்காக, மக்களுக்காக மரணித்த மாமனிதர்களைக் கௌரவிக்க குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னரே மண்டப வாயிலில் மக்கள் நிரம்பி வழிந்தனர்.

மௌன அஞ்சலியுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து மாவீரர் சமாதிக்கு மக்கள் பூவஞ்சலி செலுத்தினர். மேடையில் அமைக்கப்பட்டிருந்த ஒரு போராளியை இன்னொரு போராளி சுமந்து செல்லும் சமாதியும் மெல்லிதான இசையுடன் மிதந்து வந்த கவிதை வரிகளும் ஒவ்வொரு பார்வையாளர்களின் இதயங்களையும் ஊடுருவி அனைவரையும் தாய் மண்ணிற்கு அழைத்துச் சென்றிருக்கும் என்பதில் ஐயமில்லை. மாவீரர் நாள் நல்ல நாள்... என்ற சோதியா கலைக் கல்லூரி மாணவிகள் வழங்கிய அஞ்சலி நடனத்துடன் மாவீரர் நிகழ்வுகள் ஆரம்பமானது. சிறுவர்களின் மாவீரர் நாள் நினைவுப் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற செல்வன் தர்சன், செல்வி பற்றிசியா, செல்வன் அச்சுதன் ஆகியோரின் மாவீரர் நினைவுப் பேச்சுக்கள் சிறப்பாகவே இருந்தன. தமது இனிய கன்னிப் பேச்சுக்களினால் பார்வையாளர்களை தாய் மண்ணை நினைக்கத் தூண்டினார்கள். திரு. சுபாஸ் அவர்களின் கவிதை புலம்பெயர்ந்த மக்களின் நிலையற்ற வாழ்வியலை மிகத் தெளிவாகத் தொட்டு நின்றது. அடுத்து பூபாளம் காப்பாய்... என்ற குழு நடனம் புலர்ந்துவிட்ட தமிழீழத் தேசத்தின் சில நிகழ்வுகளை நாட்டிய நிகழ்ச்சி தொட்டு நின்றது.

அடுத்து பார்வையாளர்களின் பலத்த கைதட்டுதலைப் பெற்றுக் கொண்ட போரம்மா என்ற நடனத்தை வழங்கிய மூன்று சிறுமியும் நெறியாளரின் பாராட்டுதலுக்கு உடையவர்கள். அடுத்து முந்தை எங்கள் பரம்பரை... முத்துமணி வைரமணி... போன்ற குழு நடனங்களும் சிறப்பாக இருந்தன. அடுத்து சோதியா கலைக் கல்லூரிச் சிறுமிகள் வழங்கிய கும்மி நடனம் வழமைக்கு மாறாக தமிழ்த் தேசத்தின் சிறப்பினையும் அன்னிய தேசத்தின் நலிவுத் தன்மையினையும் கூடி வந்தோரை விழிக்க வைத்து வித்தியாசமாக அமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இடைவேளையைத் தொடர்ந்து மாவீரர் நாள் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு நிகழ்வும் அதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் திரு. லோறன்ஸ் திலகரின் சிறப்புரையும் இடம் பெற்றது. அடுத்து இளையநிலா இசைக் குழுவினரின் புரட்சிக் கானங்கள் நன்றாகவே இருந்தது.

மாவீரர் நாள் நிகழ்ச்சியின் இறுதியாக கலை, பண்பாட்டுக் கழகம் வழங்கிய மண்ணும் மனிதர்களும் நாடகம் இடம் பெற்றது. ■

-நிலவன்-

# இனத்துடைப்பு முயற்சியில் சிறீலங்கா

* கொழும்பில் தமிழர்கள் கைது
* மலையகத் தமிழர்களுக்கு அடையாள அட்டை
* முஸ்லீம் மக்கள் மேல் இன வன்முறை

சிறீலங்கா அரசாங்கம், தலைநகரான கொழும்பு உட்பட, இலங்கைத் தீவின் தென்பகுதி, மலையகப் பகுதிகளில் இனத்துடைப்பு முயற்சிகளை ஊக்குவித்து வருகின்றது.

இது மூன்று கூறுகளாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. கொழும்பில் வாழும் தமிழீழத் தமிழர்களை வகைதொகையின்றி வயது வித்தியாசமின்றி கைது செய்து தொல்லை கொடுப்பது. ஒருவர் ஒரு நாளில் மூன்று முறை கைது செய்யப்பட்ட சம்பவங்களும் உண்டு. கைது செய்யப்பட்டுபவர்கள் நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்படுவதோ அல்லது கைது செய்யப்படுபவர்கள் பற்றிய பெயர் விபரங்களை வெளியிடுவதோ இதுவரை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை எனக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்விதமான மனோநிலை பயத்தை ஏற்படுத்துவதன் மூலம் கொழும்பு வாழ் தமிழர்களை தாமாகவே வெளியேற வைக்கலாம் என்பதே சிறீலங்கா அரசாங்கத்தின் நோக்கமாக இருந்து வருகின்றது.

### தொண்டமான் பேட்டி

தொண்டமான் "இந்து" ஆங்கிலப்பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில், 50,000 தமிழர்கள் கைது செய்யப்படுகையில் நான் அமைச்சராக இருந்தும் எதுவும் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. அவ்வாறாயின் இவ்வாறான பதவிகளில் இருப்பதில் என்ன பயன் உண்டு எனக் கேட்டுள்ளார்.

### மலையகத்தவர்களுக்கு அடையாள அட்டை

இதற்கிடை மலையகத் தமிழர்களுக்கு தனியான அட்டை வழங்குவதற்கு சிறீலங்கா அரசாங்கம் முனைந்து வருகின்றது. இப்படிச் செய்வதன் மூலம் மலையகத் தமிழரை இனத்தனிமை செய்து சிறீலங்காவின் குடிமக்களுக்கும் அவர்களுக்குமிடையில் ஒரு இனங்காணக் கூடிய வேறுபாட்டை ஏற்படுத்த சிறீலங்கா முயற்சிக்கிறது.

அதேவேளை மலையகப் பகுதிகளில் ஆயுதப்படையினரின் நடமாட்டங்களை அதிகரித்துள்ள சிறீலங்கா அரசாங்கம் கைதுகள், காணாமல் போகச் செய்வித்தல் போன்ற செயற்பாடுகளில் இறங்கியுள்ளது.

### முஸ்லீம்களின் மேல் வன்முறை

புதுக்கடை, குணசிங்கபுரம் உட்பட கொழும்பின் சுற்றுப்புறங்களில். முஸ்லீம்கள் மேல் இனவன்முறைத் தாக்குதல்களை பௌத்த சிங்கள பேரினவாதிகள் அதிகரித்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. பதுளையில் இருந்து கொழும்புக்கு வந்திருந்த ஒரு முஸ்லீம் உட்பட நான்கு முஸ்லீம் மக்கள் இத்தாக்குதல்களுக்குப் பலியாகியுள்ளனர்.

சிறீலங்கா அரசாங்கத்தின் 'இனத்துடைப்பு' வெளிப்பாடாகவே இத்தகைய இனங்களுக்கு எதிரான வன்முறைகளும், கெடுபிடிகளும் அதிகரித்து வருவதாக கொழும்பு அவதானிகள் கருதுகின்றனர். ■

## நத்தார் தினத்திலும் எறிகணை யுத்த சூனியப் பகுதியில் சிறுமி மரணம்

நத்தார் தினத்தன்று கூட சிறீலங்காக் கடற்படை -இராணுவத்தினர் தமது முகாம்களில் இருந்து கடுமையான எறிகணை வீச்சுக்களை நடாத்தியுள்ளனர்.

யுத்த சூனியப் பிரதேசமான யாழ். வைத்தியசாலையில், நோயாளியாக உள்ள தாயை பராமரிக்கும் பணியில் இருந்த ஒன்பது வயதுச் சிறுமி ஒருத்தி, யாழ். பெரியாஸ்பத்திரி வளவில் வந்து விழுந்து வெடித்த எறிகணைக் குண்டினால் மரணமானாள். யாழ் வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலையில் இருந்து தேநீர் வாங்கிக் கொண்டு செல்கையிலேயே இச்சிறுமி உடல் சிதறும்படியான எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகி மரணமடைந்துள்ளாள். ■

## 10 மாணவர்களுடன் பல்கலைக்கழக பீடம் மானியக்குழுவின் 'இனவாதம்'

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு 460 மாணவர்கள் அனுமதிக்கப்படல் வேண்டும். ஆனால் சிறீலங்காவின் பல்கலைக்கழக மானியக்குழு 191 பேருக்கு மட்டும் அனுமதி வழங்கியுள்ளது.

இப்பல்கலைக்கழகத்தில் உள்ள விவசாயப் பீடத்திற்கு 10 மாணவர்களையே சிறீலங்கா அனுமதித்து உள்ளது. இப்பீடம் இயங்குவதற்கு ஆகக்குறைந்தது 40 பேராவது தேவை எனப் பல்கலைக்கழகம் கருதுகின்றது.

இவ்விதமாக பல்கலைக்கழக நிர்வாகம் ஒதுக்கும் இடங்களை விட மிகக்குறைந்த அனுமதியையே வழங்கும் பல்கலைக்கழக மானியக்குழுவின் இனவாதச் செயலால் பல இன்னல்களுக்கு மத்தியிலும் கல்வி பயிலும் தமிழ் மாணவர்கள் மேலும் துன்பமடைய வழிபிறக்கின்றது. ■

## புலம்பெயர்ந்த கத்தோலிக்கரின் மௌனம் குறித்துக் கவலை

தமிழீழக் கத்தோலிக்க மக்களின் தொன்மை மிகு ஆலயமான சென். யேம்ஸ் தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட சிறீலங்கா வான்படையின் கண்மூடித்தனமான குண்டு வீச்சால் சுமார் 130 இலட்சம் ரூபா சேதம் ஆலயத்துக்கு விளைவிக்கப்பட்டதுடன், இவ்வாலயத்தினுள் வழிபாட்டிலிருந்த 16 பக்தர்கள் உயிரிழந்தமை அனைவரும் அறிந்ததே. இது தொடர்பாக யாழ். மேற்றாணியாண்டவர் கொழும்பு அதிமேற்றாணியாருக்கும் பாப்பரசருக்கும் அறிவித்துள்ளதாக தெரிகிறது. அத்துடன் குருக்களின் தலைமையில் மௌன ஊர்வலம் நடைபெற்றதும் இதையடுத்து இரண்டாவது தடவையாக இவ்வாலயம் அமைந்திருக்கும் பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்விடங்கள் மீது விமானக்குண்டு வீசப்பட்டு 28 பேர் வரை உயிரிழந்தனர்.

ஆயினும் இந்தப் படுகொலைகள் குறித்து புலம்பெயர்ந்து வாழும் கத்தோலிக்க மக்களோ, கத்தோலிக்க அமைப்புகளோ எவையும் கண்டனச் செய்திகளோ அல்லது உண்மை அறிவிக்கும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படாமை போன்றவை யாழ். கத்தோலிக்க மக்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளதாக அங்கிருந்து கத்தோலிக்க குரு ஒருவர் எழுதியுள்ள கடிதம் மூலம் தெரியவருகிறது. ■

## பலாலி, ஊர்காவற்றுறை, காரைநகர் முகாம்களில் படையினர் கிலேசம்!

தமிழீழ விடுதலைப் புலிகள் பூநகரித் தாக்குதலின் போது கைப்பற்றிய கனரக ஆயுதங்களைக் கொண்டு, வட பகுதியில் உள்ள சிங்களப் படை முகாம்கள் தாக்கப்படலாம் என படைத்துறைத் தலைமையகம் அச்சம் கொண்டுள்ளது.

அதேவேளை சிறீலங்கா இராணுவத்தின் பலாலி, ஊர்காவற்றுறை, காரைநகர் முகாம்களுள் உள்ள இராணுவத்தினர் மனோபலம் குன்றிக் காணப்படுவதாகத் தெரிகிறது.

நாகதேவன்துறை கடற்படைத் தளத்தை நிர்மூலம் செய்த போது புலிகள் கைப்பற்றிய வோட்டர் ஜெட் படகுகளையும், பூநகரித் தாக்குதலில் கைப்பற்றிய தாங்கி, 120 மி. மீ. பீரங்கிகள், நவீன ராடர் கருவிகள் என்பவற்றையும் புலிகள் உபயோகித்து தாக்குதல்களை மேற்கொள்ளலாம் எனும் அச்சத்தில் சிறீலங்கா இராணுவ -கடற்படையினர் கிலேசம் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

குறிப்பாக, பூநகரி முகாம் தாக்குதலின் போது பயன்படுத்திய புதிய தாக்குதல் முறைகளைக் கையாண்டு, பலாலி இராணுவ முகாமையும் விடுதலைப் புலிகள் தாக்கி அழிக்கலாம் என்ற அச்சமும் சிறீலங்காப் படையினர் மத்தியில் காணப்படுகின்றது. ■

### டென்மார்க்கில்

## தாயக நினைவினை சுமந்த மாவீரர் நாள்

தமிழீழத்தின் மலர்வுக்காக தம் இன்னுயிரையும், உடலையும், உணர்வுகளையும் அர்ப்பணம் செய்த மாபெரும் தியாக சீலர்களை நினைவு கூர்ந்து 27. 11. 1993 சனிக்கிழமையன்று 17. 30 மணியளவில் கேணிங் என்னும் நகரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் டென்மார்க் கிளையினரும் தமிழீழ மக்களும் இணைந்து மாவீரர் நாளை சிறப்பித்தனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் மாவீரர் விளக்கேற்றல் இடம்பெற்றது. வருகை தந்திருந்த அனைத்து மக்களின் சார்பாக திரு. சி. மார்க்கண்டு அவர்கள் தீப அஞ்சலியை ஏற்றி வைக்க, எம் தேசத்தின் விடிவுக்காகத் தம்மை அர்ப்பணித்த மாவீரர்களுக்காகவும் மரணித்த அனைத்து மக்களுக்காகவும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.




வரவேற்பு உரையின் போது, புறநானூற்றின் பெருமையை மிஞ்சிய எமது போராட்ட வரலாற்றுக் காலத்தில் நாம் வாழ்கின்றோம் என்று குறிப்பிட்டு, திரு. கி. செல்லத்துரை அவர்கள் உரை நிகழ்த்தினார். தொடர்ந்து திரு. மா. தம்பிராசா, திரு. சரவணமுத்து ஆகியோர் வெவ்வேறு கோணங்களில் எமது போராட்ட வரலாற்றின் சிறப்பினையும், வளர்ச்சியையும் எடுத்துரைத்தார்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றின் சிறப்பம்சங்களை வெளிக்கொணரும் கருத்துமிக்க பாடல்களுடன் எமது பாரம்பரிய கலை வடிவங்களினூடாக யாழ். பல்கலைக்கழக நுண்பிரிவு மாணவி திருமதி. சுமித்திரா சுகேந்திராவின் மாணவியர் சிறப்பான இசை நடன வடிவம் வழங்கினார்.

கவிமழை பொழிந்த கவிஞர்கள் தமிழீழத்தின் நினைவுகளை சிறப்பாக வெளிக்கொணர்ந்தனர். திரு. வேலணையூர் பொன்னண்ணா, திரு. முல்லையூரான் ஆகிய கவிஞர்கள் தமது எண்ணங்களை வேறுபட்ட கோணங்களில் சிறப்பாக வழங்கினர்.

'ஓர் கரும்புலி வீரனின் கடைசி நாள்' சொல்லாடலும், இசையும் கலந்து களத்தின் ஓர் உண்மை நிகழ்வினை மையமாக வைத்துத் தயாரிக்கப்பட்ட திரு. கி. செல்லத்துரையின் படைப்பு மக்களின் உணர்வுகளை சிந்திக்கத் தூண்டியது.



'சுதந்திர தாகம்' என்னும் களத்துக் காவியம் திரு. தி. அருளானந்தராசாவின் நெறிப்படுத்தலுடன் அரங்கேறியது. இக் காவியம் தென் தமிழீழத்தின் நிகழ்வினை சித்தரித்து சிறப்புப் பெற்றது.

நிகழ்வின் இறுதியாக டென்மார்க் நாட்டில் சிதறிக் கிடக்கும் தமிழீழ இசைக் கலைஞர்களை இணைத்து 'ஈழத்தின் விடுதலைக் கானங்கள்' இசைக்கப்பட்டன. இந்நிகழ்வில் இளம் பாடகர்களும் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டார்கள். 'கடலதை நாங்கள் வெல்லுவோம் கடற்புலி நாங்கள் ஆளுவோம்' என்னும் பாடலின் இசையைக் கலைஞர்கள் இசைக்க நிகழ்வு இனிதாக நிறைவேறியது. ■

# விதைக்கப்பட்டது வீரம்தான்



மேஜர் ரவிசங்கர்
(யூ. வின்சன் கெனடி)
சாவற்காடு, மன்னார்.
08. 09. 1970
09. 06. 1992

சிறுநாவற்குளம் படை முகாமிலிருந்து 300 யார் தூரத்திலுள்ள பிரதான வீதிச் சந்தி.

எப்போதும் இராணுவத்தினரின் அணி ஒன்று அங்கு காவலுக்காகப் பதுங்கி இருப்பது வழமை.

முன்னிலையில் ஒரு ஏ. கே. எல். எம்ஜியைக் கொண்டதாக, எந்த நேரமும் இரை தேடியபடி அந்த அணி காத்திருக்கும்.

இந்த இராணுவ அணியை வளைத்துத் தாக்கி அழித்துவிடுவதற்கு முடிவு செய்யப்பட்டது. வேவு பார்த்து -திட்டமும் தயாரிக்கப்பட்டது. ரவிசங்கர் இந்த முயற்சியில் ஓய்வின்றிச் செயற்பட்டுக் கொண்டிருந்தான்.

எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியாகி முடிந்திருந்த போது, 28.07.1992 அன்று, எதிர்பாராதவிதமாக ஒரு துயரம் சம்பவித்துவிட்டது.

மேஜர் பாரதி உட்பட எங்களது 4 பெண் போராளிகள் இதே பாதையால் தவறுதலாகப் பிரவேசித்ததில், அதே இராணுவ அணியின் தாக்குதலுக்கு இலக்காகி வீரச்சாவடைந்துவிட்ட சோகம் நிகழ்ந்தது.

ரவிசங்கர் துடிதுடித்துப் போனான். 'எல்லாம் தயார்' என்றாகியிருந்த சமயத்தில் இப்படியாகிவிட்டதே என்று வேதனைப் பட்டான்.

"அந்த ஏ. கே. எல். எம். ஜி. காரன்தான் எங்கட பெண் போராளிகளைப் போட்டிருப்பான்... முன்னுக்கிருக்கிற அவன்ர 'ரேஞ்சுக்குள்ளதான் அவையள் சிக்கியிருக்கினம்..." என்று தோழர்களிடம் பொருமினான்.

"நான் செத்தாலும் பரவாயில்லை... இந்தச் சண்டையில அந்த ஏ. கே. எல். எம். ஜி. காரனை சாகடித்து, அந்த ஏ. கே. எல். எம். ஜியை எடுத்தே தீருவன்..." என்று, தன் இலக்கில் இன்னும் உறுதியானான்.

இது நடந்து ஒன்பதாவது இரவு அந்த இராணுவ அணி தாக்கப்பட்டது. புலிகளின் ஆவேசமான பாய்ச்சல். அனல் விழிகளோடு சண்டையில் முன்னேறிய ரவிசங்கர் அந்த இராணுவத்தினனை வீழ்த்தி அந்த எல். எம். ஜியை எடுத்துச் சக போராளிகளிடம் கொடுத்தான். தன் நோக்கத்தை அடைந்த திருப்தி அவனது முகத்தில் பளிச்சிட்டது. ஆனால் அடுத்த நொடி... எதிரியின் ரவைகளில் சில அவனைத் துளைத்துச் சென்றன.
சண்டை முடிந்த பின்னர் - வேறு ஆயுதங்களுடன் இந்த ஏ. கே. எல். எம். ஜியையும் ரவிசங்கரின் உடலையும், நெஞ்சத்தில் அவனது நினைவையும் சுமந்து கொண்டு நாங்கள் வந்தோம்.



லெப். சாம்
(துரைரட்ணம் ஜெயரூபன்)
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.
27. 04. 1964
06. 10. 1985

அது ஒரு முற்பகல்வேளை.

முகாமில் சாம் தனது கைத்துப்பாக்கியைத் துப்பரவு செய்துகொண்டிருந்தான்.

அருகில் சில தோழர்கள் ஏதேதோ வேலைகளில் மூழ்கிப்போயிருந்தார்கள்.

என்ன நினைத்தானோ தெரியவில்லை, திடீரென்று சாம் சொன்னான்: "தம்பிமார், எங்கட எந்த ஒரு பொருளும் ஆமியிட்டை சிக்கக் கூடாது; போக விடக்கூடாது".

அருகிலிருந்த நண்பன் சிரித்துக் கொண்டே கேட்டான், நீங்க ஆமியிட்ட அகப்படுற சந்தர்ப்பம் வந்திட்டா, இந்த நீட்டாவை என்ன செய்வீங்க அண்ணை...?"

குனிந்திருந்து துடைத்துக் கொண்டிருந்தவன் நிறுத்திவிட்டு, தலையை நிமிர்த்திப் பார்த்துச் சொன்னான்-

"ஆமி இதை முழுதாக எடுக்கேலாது. அப்படி ஒரு நிலை வந்தால், நீட்டாவை அடித்து உடைத்துவிட்டுத்தான் நான் சாவன் தம்பி..."

அன்றைய நாளின் பிற்பகல் வேளை.

ஏதோ அலுவலாக, மோட்டார் சைக்கிளையும் எடுத்துக்கொண்டு சாம் புறப்பட்டான்.

எதிர்பாராதவிதமாக, நாயாற்றுவெளியில் பதுங்கியிருந்த இராணுவத்தினரிடம் சாம் சிக்க நேர்ந்தது. அவர்கள் வளைத்துத் தாக்க, மோட்டார் சைக்கிளைப் போட்டுவிட்டு சாம் தப்பி ஓட முயன்றான்.

நூற்றுக்கணக்கில் சுற்றிவளைத்துத் துரத்தும் படையினரை நோக்கித் தனது கைத்துப்பாக்கியால் சுட்டபடி சாம் வெளியேற முயன்றான்.

இயலுமானவரை விரைந்து ஓடினான். எவ்வளவு தூரம்தான் ஓடமுடியும்...? கைத்துப்பாக்கியின் கடைசி ரவையும் சுடப்பட்டுவிட்டது.

இராணுவத்தினர் அவனைச் சூழ்ந்து கொண்டுவிட்டனர். அதன்பின் நடந்தது யாருக்கும் தெரியாது.

ஆனால், காலையில் தான் சொன்னதையே மாலையில் அவன் அப்படியே செய்திருந்ததை, மறுநாள் இரவு 'ரூபவாகினி' ஒளிபரப்பிய போது அறிந்தோம்.

குப்பி கடித்த வாயோடு சாம் விழுந்து கிடந்ததையும் கல்லில் அடித்து உடைக்கப்பட்ட 'நீட்டா' நொருங்கிக் கிடந்ததையும் கண்டோம்.



லெப். கேணல் தூட்டி
(சி. செல்வேந்திரன்)
சாவகச்சேரி
26. 05. 1967
14. 07. 1991

ஆனையிறவுப் பெருஞ்சமரின் ஆரம்பம்.

வெற்றிலைக்கேணிக் கரையோரம் உதவிக்குத் தரையிறக்கப்படும் சிங்களப் படையை எதிர்கொள்ளவென நிறுத்தப்பட்டிருந்த புலிகளின் சேனைக்குத் தளபதியாக, தூட்டி நியமிக்கப்பட்டிருந்தான்.

தூட்டி ஓய்வில்லாமல் இயங்கிக் கொண்டிருந்தான். இரவு பகலாக எங்கள் அரண்களைச் சுற்றி தூட்டி நடந்துகொண்டிருப்பான்.

"எனது சடலத்தின் மீதுதான் எதிரி முன்னேறுவான்" என்று சொன்னான்.

14. 07. 1991 காலை.

அதிகமான நம்பிக்கையோடு அலட்சியமாக நின்ற ஒரு குழுத்தலைவனைக் கூப்பிட்டு தூட்டி சொன்னான்-

"சண்டையின் முடிவில் நாங்கள் சோகத்தோடு செல்லலாம்; ஆனால் அவமானத்தோடு திரும்பக் கூடாது".

அன்று மாலை தரையிறங்குவற்கு எதிரி இரண்டு தடவைகள் எத்தனித்தான்.

முதற்தடவை விரட்டியடிக்கப்பட்டவன், இரண்டாவது தடவை குண்டுமழை பொழிந்து வந்து கரையேறினான்.

தனது அரணில் அசையாது நின்று போராடிய தூட்டியின் சடலத்தைக் கடந்துதான், எதிரி முன்னேறினான்.

இப்போது ஆனையிறவுச் சமர் முடிந்து விட்டது.

தூட்டி அண்ணன் சொன்னதுபோல, நாங்கள் சோகத்தோடு மட்டுமே திரும்பி வந்தோம்; அவமானத்தோடு அல்ல.



கப்டன்
மோகன் மேத்திரி
(கா. நகுலேஸ்வரன்)
வல்வெட்டித்துறை
30. 09. 1965
02. 09. 1990

கடலைப்போல எங்களது மனங்களும் கொந்தளித்துக் கொண்டிருந்தன.
தூரத்தில் புள்ளியாகத் தெரிந்த 'டோரா' வரவரப் பெருத்துக் கொண்டிருந்தது; அலைகள் கிழிய நேவிப்படகு நெருங்கிக் கொண்டிருந்தது.

எங்களின் அந்தப் படகுகள் இரண்டும் தமிழகத்திலிருந்து திரும்பிக்கொண்டிருந்தன.

அவற்றில் புலிவீரர்களுடன், முக்கிய தளபாடங்களும் கலந்து இருந்தன.

நேவிப்படகின் வேகத்திற்கு ஈடுகொடுத்து ஓடித்தப்பிவிடலாம் என்பது, அன்றைய நாளில் அரிதான ஒரு நிகழ்ச்சிதான்.

உடனடியாக ஏதாவது செய்தாக வேண்டும். இல்லையேல் இரண்டு படகுகளுமே அழிக்கப்படுவது உறுதி.

பொருட்களை இழந்தாலும் பரவாயில்லை. போராளிகளையாவது காக்க வேண்டும்.

மோகன் மேத்திரியின் மூளை துரிதமாக வேலை செய்தது.

எங்கள் எல்லோரையும் அடுத்த படகிற்கு மாற்றிவிட்டு, பொருட்களைத் தான் இருந்த படகில் ஏற்றிக்கொண்டான்.

"உங்கட வண்டியை வேகமாக கரைக்கு விடுங்க. நான் இன்னொரு பக்கமாக கரைக்கு ஓடுறன். அவன் என்னைக் கலைப்பான். தப்பினா... வந்திடுவன். அவன் நெருங்கிட்டானெண்டா வண்டியையும் சமான்களையும் எரிச்சிடுறன்..."

தான் இறந்தாலும்கூட படகோ, பொருட்களோ எதிரியிடம் அகப்படக்கூடாது என்பதில் அவன் உறுதியாய் இருந்தான்.

கனத்த இதயங்களோடு நாங்கள் பிரிய - இரு வண்டிகளும் இரு திசைகளில் விரைந்தன.

மோகன் மேத்திரியின் படகை நேவிப்படகு துரத்திக்கொள்ள, எங்களது படகு கரையைத் தொட்டுவிட்டது.

அவன் கரையை நோக்கி ஓட, அதை விட வேகமாக 'டோரா' அவனை நெருங்கியதை நாம் பார்த்துக்கொண்டிருந்தோம்.

ஒரு கட்டத்தில் - இனி அவன் தப்ப முடியாது என்பதை நாங்கள் துயரத்தோடு உணர்ந்துகொண்ட போது, நடுக்கடலில் ஓடிக்கொண்டிருந்த படகில் தீப்பிடித்தது.

எரிந்துகொண்டிருந்த படகிலிருந்து கையை உயர்த்தி அவன் அசைத்திருப்பான் போலும்...

எங்களது மனங்கள் துடிக்க, எங்களது கண்ணொதிரிலேயே கடலில் எரிந்துகொண்டிருந்தான்!



சுஜாத்
(ந. குமரகுருநாதன்)
பருத்தித்துறை
23. 09. 1971
16. 06. 1990

நள்ளிரவு.

மாங்குளம் இராணுவ முகாம் மீதான முதலாவது தாக்குதல்.

எதிரி தனது அரண்களில் இருந்து பொழிந்து கொண்டிருந்த ரவை மழைக்கு நடுவில், புலிகள் முன்னேறினர்.

புலிகளின் அணி காவலரணுக்கு நெருக்கமாக மிக அருகில் வந்துவிட்ட போது, எதிரி கைக்குண்டுகளை வீசத்துவங்கினான்.

அக்கம் பக்கங்களில் விழுந்து குண்டுகள் வெடித்தன.

திடீரென 7, 8 போராளிகள் இருந்த ஒரு இடத்தில், எதிரியின் குண்டு ஒன்று அவர்களுக்கு நடுவில் விழுந்தது.

திகைத்துப்போன கணம். அடுத்த விநாடிகளில் அது வெடித்து அத்தனை பேரையும் பலி எடுக்கும்.

சுஜாத் பாய்ந்தான். "விலத்துங்கோடா...!" என்று உரத்துக் கத்திக்கொண்டு -முன்னால் நின்ற தோழர்களை இரு கைகளாலும் தள்ளி விழுத்திவிட்டு, குண்டின் மீது சுஜாத் பாய்ந்தான்.

அடுத்த நொடி... தோழர்களைக் கொல்ல இருந்த குண்டின் சிதறல்களைத் தான் ஏற்ற அந்த நண்பன், அந்தத் தோழர்களின் முன்னாலேயே சிதறிப் போனான்.

தொடர்ந்தும் புலிகளின் அந்த அணி எதிரியைப் பிடிக்கும் வரை முன்னேறியது; சிதறிய தங்கள் தோழனின் இரத்தக் கறைகளுடன்.



ரமேஸ்
(ப. மணிவண்ணன்)
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.
01. 10. 1970
10. 03. 1989

வட்டக்கச்சிக் கிராமம் மெல்ல விடியத்துவங்கியது.

இந்தியப் படை முகாமிற்கு அருகில் மிதிவெடி நாட்டும் தனது பணியைச் செவ்வனே முடித்திருந்தான் புலிவீரன் ரமேஸ். கூடவந்தவன் ஈசன். அதே ஊரைச் சேர்ந்த புலிகளின் ஓர் ஆதரவாளன்.

அருகிலேதான் அப்போராளி ரமேசின் வீடு. தன் அம்மாவைப் பார்க்கவேணும் போல ரமேசுக்கு இருந்தது. இருவரும் போனார்கள். வீட்டிலிருந்து சிறிது தூரத்தில் கூடவந்த ஈசனை நிறுத்தி, "கவனம் அண்ணை" என்றுவிட்டு ரமேஸ் வீட்டுக்குள் நுழைந்தான். கையில் இருந்த பையில் மிதிவெடிகளும், 'கிறனேட்'டுகளும் இருந்தன.

தாயினதும் தனயனதும் பரவசமான சந்திப்பு. உச்சி முகர்ந்தாள்; அள்ளி அணைத்தாள். மகனைக் கண்ட அளப்பரிய சந்தோசம் அம்மாவுக்கு! அவர்கள் அளவளாவிக் கொண்டிருக்க நிமிடங்கள் கரைந்தன. கனத்த சப்பாத்துக்களின் கீழ் சருகுகள் நெரிபடும் ஓசைகேட்க, தாயின் மடியில் தலைசாய்த்துப் படுத்திருந்தவன் திடுக்கிட்டு எழுந்தான். காதுகளைக் கூர்மையாக்கினான்.

'செத்தை' நீக்கலுக்கூடாக வெளியே பார்த்தான். குழை செருகப்பட்ட தலைகள்; நீட்டிய துப்பாக்கிகள்.

தொடர்ச்சி 5ம் பக்கம் ....

# விதைக்கப்பட்டது வீரமும்தான்

வாசற் படலையை உதைத்தபடி இடி போலக் கத்திக் கொண்டு, துப்பாக்கியோடு வீட்டுக்குள் நுழைந்தான் ஓர் இந்தியன்.

அம்மா அசைவற்றுப்போனாள். திக்பிரமை அடைந்தவளாக அவள் வாசலையே பார்த்து நிற்க, முதுகுப்புறமாக அம்மாவோடு சாய்ந்து கொண்டான் ரமேஸ். வாசலைப் பார்த்தவன் அதிர்ச்சியடைந்தான். இவனோடு வந்த ஈசன் இப்போது அவர்களோடு வந்தான். பச்சைத் துரோகம்.

தப்பி ஓடுவதென்பது முற்றாகச் சாத்தியமற்றது என்பது அவனுக்குப் புரிந்தது.

அம்மாவோடு இறுகச் சாய்ந்துகொண்டான்.

கண்ணாடி நொருங்கும் சத்தம் சடுதியாகக் கேட்க அம்மா திடீரெனத் திரும்பினாள்.

குப்பி இல்லாத வெறும் கயிறு, வாயிலிருந்து வழுக்கி விழ, அவன் அம்மாவின் காலடியில் சரிந்துகொண்டிருந்தான்.

அம்மாவுக்கு உயிர் அசையவில்லை. தான் பெற்ற பிள்ளை தனது கண்முன்னாலேயே, தனது காலடியிலேயே...

"ஐயோ...!... ரா...சா..."

அந்தத் தாயின் ஓலத்தை மிதித்துக்கொண்டு, ரமேசது உடலைக் 'கொறகொற'-வென இந்தியர்கள் இழுத்துச் சென்றனர்.



லெப். கேணல் ஜோய்
(ஜெ. ரகுநாதன்)
செங்கலடி
2.02.1970
30.11.1991

மட்டக்களப்பின் அடர்ந்த காடுகளினூடு, சிங்களப் படை பாரிய தாக்குதல் நடவடிக்கையில் இறங்கியிருந்தது.

3000 இற்கும் அதிகமான துருப்புக்கள் ஈடுபடுத்தப்பட்ட இந்நடவடிக்கையின் பெயர், 'வட்டே றவும்'.

சிங்களப் படைக்கு ஒரு பதிலடி கொடுக்க வேண்டும் என்ற கருணா அம்மானின் வேண்டுகோளுக்கிணங்க - ஜோய் பதுங்கித் தாக்குதல் ஒன்றுக்குத் திட்டமிட்டான்.

21 வயதே உடைய ஜோய், தென்தமிழீழத்திலிருந்த எமக்குப் பாதகமான சூழ்நிலையை மாற்றவென, மட்டக்களப்பு - அம்பாறைப் பிராந்தியத் தளபதியாக நியமிக்கப்பட்டு, தலைவர் அவர்களால் அங்கு அனுப்பப்பட்டான்.

பன்குடாவெளி, முதிரையடிஏற்றம் படை முகாம்களிலிருந்து செங்கலடிக்கு வரும் ரோந்து அணி, ஜோயின் இலக்கானது.

29.11.1991 அன்று காலை 8.40 மணிக்கு ஆரம்பித்த சண்டை சில நிமிடங்களில் முடிந்த போது -எதிரியின் ரவை ஒன்று, ஜோயை தொண்டைக்குக் கீழே துளைத்துச் சென்றுவிட்டது.

படுகாயமடைந்த தளபதியைத் தூக்கிக் கொண்டு புலிகள் பின்வாங்கினர். பல படையினர் கொல்லப்பட்டதுடன் ஆயுதங்களும் எடுக்கப்பட்டிருந்தன.

புலிகளின் காட்டு முகாம்.

கழுத்துக் காயத்தின் வேதனையால் ஜோய் துடித்துக்கொண்டிருந்தான். ஒரு முழு நாளாக அந்த உயிர் போராடிக்கொண்டிருக்கிறது.

அருகிலே இருந்த கருணா அம்மானின் கையைப் பற்றிக்கொண்டு, முனகலுக்கிடையிலும் அவன் கூறிக்கொண்டிருந்தான்-

"தலைவர் சொல்லிவிட்டதை முழுசா செய்து முடிக்கேலாமப் போட்டுதம்மான்... அது ஒண்டுதான் எனக்குக் கவலையா இருக்கு..."

காயத்தின் ஆழத்தன்மையால் காயமடைந்த மறுநாள் அதிகாலையில் எம்மைப் பிரியும் போதும்கூட, அவன் அது ஒன்றையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தான்-

"தலைவர் சொன்னதை முழுசாச் செய்து முடிக்கேலாமப் போட்டுதம்மான்... அது ஒண்டுதான் எனக்குக் கவலையா இருக்கு..."



லெப். ரொனி
(யோ. சௌந்தரநாயகம்)
பரப்பாங்கண்டல்,
மன்னார்.
10.03.1965
14.11.1985

முற்றுகையிட முயன்ற சிங்களப் படையிடமிருந்து புலிகள் தப்பித்துக்கொண்டனர். ஆனால் மேஜர் அசோக் காயமடைந்துவிட்டான்.

இருந்ததோ இரண்டொரு றைபிள்கள் தான். எனவே, துரத்திக் கொண்டுவரும் எதிரியுடன் மோதுவது அவ்வளவு சுலபம் அல்ல. மேலே வட்டமிட்டுக் கொண்டு உலங்குவானூர்தி ஒன்று சுட்டுக்கொண்டிருந்த ரவைகள், புலிகளுக்கிடையில் தரையைக் கிளறிக்கொண்டிருந்தன. காயம்பட்ட அசோக்கோடு போராளிகள் பின்வாங்கிக் கொண்டிருந்தனர்.

வழியில் வெளியான பகுதி ஒன்று எதிர்ப்பட்டது. உலங்குவானூர்தியின் கண்களுக்கு தப்ப உடனடியாக அருகிலிருந்த கட்டடத்திற்குள் புகுந்துகொண்டார்கள். எதிரி மிக அண்மித்துவிட்டான். உலங்குவானூர்தியிலிருந்து துப்பாக்கி சடசடத்துக்கொண்டே இருந்தது. தொடர்ந்து அங்கே நிற்க முடியாது. அது ஒரு இக்கட்டான நிலை.

அசோக் முனகிக்கொண்டேயிருந்தான். "என்னைப் போட்டிட்டு நீங்கள் தப்புங்கோடா..." என்று முனகலுக்கிடையே கத்தினான்.

முற்றிலும் பாதகமான நிலை ஒன்று அங்கு உருவாகி வந்தது. அவ்வேளை ரொனி சொன்னான், "அண்ணை... எனக்கு இரண்டு குண்டு தாங்கோ... நான் அவங்களை திசை திருப்புறன். ஆமிக்காறறை என்னோட மினக்கெட வைக்கிறன். நீங்க அசோக் அண்ணையோட தப்புங்கோ".

தான் தீர்மானித்தபடி ரொனி குண்டுகளை வாங்கினான்.

'கிளிப்பு'களைக் கழற்றினான்.

அது உடன் வெடிக்காதவண்ணம் 'லிவர்' அமுக்கியை தன்கைகளால் இறுக அழுத்தியபடி வெளியில் வந்தான்.

இந்த நிலையில் இராணுவத்தினரின் கவனத்தைத் தன்பக்கம் திசை திருப்ப எதிர்ப்புறமாக ஓடினான்.

எதிரியின் கவனம் ரொனி பக்கம் சென்றது.

இராணுவத் துப்பாக்கிகள் இவன் சென்ற திசையை நோக்கி ரவைகளைப் பொழிந்தன. இதற்குத் தன்னையே இலக்காக்கியபடி தன்னிடமிருந்த குண்டுகளை வெடிக்கவைத்துக் கொண்டிருந்தான் ரொனி.

மறுபக்கத்தால் வெளியேறிய தோழர்கள் வயல் வரப்புகளூடாக அசோக்கையும் இழுத்துக்கொண்டு ஊர்ந்துகொண்டிருந்தார்கள்.

காயம்பட்ட அசோக்குடன் மற்றையவர்கள் மீண்டுவிட்டார்கள்.

சகதோழர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற இலட்சிய வீறுடன், ரொனி தன்னையே அர்ப்பணித்துவிட்டான்.



கப்டன் திலகா
(இரதீஸ்வரி)
சேனையூர், மூதூர்.
18.05.1970
03.08.1991

ஆனையிறவுப் பெருஞ்சமரின் இறுதிக் கட்டம்.

கட்டைக்காட்டிலிருந்து அங்குலமங்குலமாக நகர்ந்த எதிரி, அன்று -அகிலன் வெட்டையிலிருந்து தாக்குதலை ஆரம்பித்தான்.

எதிர்கொண்டு மோதிய புலிகளின் சேனையில், மகளிர் பிரிவின் ஒரு அணிக்குப் பொறுப்பாக இருந்து சண்டையை வழி நடாத்தினாள் திலகா.

"செத்துப்போன ஒவ்வொரு போராளியையும் நினைச்சு நினைச்சு அடிபடுங்கோ" இப்படிச் சொல்லிச் சொல்லியே களத்தை நெறிப்படுத்தினாள்.

வானிலிருந்தும் தரையிலிருந்தும் எதிரி அகோரமாகத் தாக்கியபடி முன்னேறினான்.

திடீரென எதிரியின் எல்.எம்.ஜி. தாக்குதலொன்று திலகாவைப் படுகாயப்படுத்தியது.

களத்திலிருந்து வெளியேற்றப்படும் பொழுதும், திலகா கத்தினாள் -"செத்துப்போன ஒவ்வொரு போராளியையும் நினைச்சு நினைச்சு அடிபடுங்கோ".

விரைந்து செல்லும் அம்புலன்ஸ் வண்டியொன்றினுள் சுயநினைவற்றுப் படுத்திருக்கும் போதும், திரும்பத் திரும்ப அவள் அதையே அரை குறையாகச் சொன்னாள்.

வைத்தியசாலைக் கட்டிலில் மயக்கமுற்ற நிலையில், மெல்லமெல்ல அவளது மூச்சு நின்று கொண்டிருக்கும் போதும், அவளது வாய் அதனையே உச்சரித்தது, "செத்துப்போன... ஒவ்வொரு... போராளியையும்... நினைச்சு... நினைச்சு... அடிபடுங்கோ..."



லெப். இளங்கோ
(ஓ. மேரிதர்சன்)
திருகோணமலை
12.05.1985

இளங்கோ ஏற்கனவே இரு குழந்தைகளுக்கு அப்பா.

இயக்கத்தில் சேர்ந்து பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கும் போதுதான், அவனது இரண்டாவது மழலைச் செல்வம் பிறந்தது.

அது 1986 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலம்; மட்டக்களப்பில் போராட்டம் அப்போதுதான் வேர்விடத் துவங்கியிருந்தது. தென் தமிழீழத்தைப் பொறுத்தவரை அவன் முதன்மையானவன்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஆயுதங்கள் வரும் ஒவ்வொரு தடவையும், மூதூரிலிருந்து மட்டக்களப்பிற்கு அவற்றை எடுத்துச் செல்லும் பணியில் இளங்கோ இருப்பான்.

அன்று, அவனது மூன்றாவது குழந்தை பிறந்து பதினோராவது நாள். புறப்பட வேண்டியிருந்தது. அவனது மனைவிக்குத் துணையாக, யாருமே இல்லை; ஆனாலும் புறப்பட்டான்.

புறப்படும் போது தன் மனைவியிடம் - "போட்டுவாறன்... நான் வந்ததற்கு பிறகு மகளுக்கு என்ன பேர் வைக்கலாம் என்று தீர்மானிப்பம்...", என்றுதான் சொல்லிவிட்டு வந்தான்.

"என்னைப்பற்றி யோசிக்க வேண்டாம். நான் சமாளிச்சுக் கொள்ளுவன்; நீங்கள்தான் கவனம்" என்றுதான் அவள் வழியனுப்பி வைத்தாள்.

தனது பிள்ளைகள் மூன்றையும் அவன் கட்டி அணைத்து முத்தமிட்ட போது - அவை தன் கடைசி முத்தங்கள் என்பதை அவன் அறிந்திருக்கவில்லை.

வெருகல் துறைமூலம் அவன் அடிக்கடி பயணிப்பதை அறிந்த இராணுவம், ஆற்றோரத்தில் அன்றும் பதுங்கியிருந்தது.

மூதூருக்குத் திரும்பிக் கொண்டிருந்த அவனும், கஜேந்திரனும் அவர்களின் தாக்குதலுக்கு உள்ளானார்கள்.

கஜேந்திரனைத் தப்பி ஓடச் சொல்லிவிட்டு, தன்னிடமிருந்த எஸ்.எம்.ஜி. மூலம் இளங்கோ இராணுவத்துடன் சண்டையிடத் தொடங்கினான்.

அதே இடத்தில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த பொதுமகன் ஒருவர், இந்தச் சம்பவத்தைக் கதைகதையாகச் சொல்லுகின்றார்.

"இளங்கோ அண்ணை சண்டையிட்டார்; ரவைகள் தீரும்வரை சண்டையிட்டார். தனது துப்பாக்கி எதிரியிடம் கிடைக்கக் கூடாது என்பதற்காக, எஸ்.எம்.ஜியைப் பகுதி பகுதியாகப் பிரித்து, பொங்கிப் பெருகும் வெருகல் ஆற்றில் வீசி எறிந்தார்.

நிராயுதபாணியாக நின்ற அவரை உயிரோடு பிடித்துவிடச் சிங்களப் படை ஆவேசமாக எழுந்து பாய்ந்த போது, இளங்கோவை சயனைட் பாதுகாத்தது.



ரஞ்சன்
(சரவணமுத்து சத்தியசீலன்
வவுனிக்குளம்,
முல்லை.
08.05.1968 - 11.03.1986

ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் - வானூர்திகளிலும், கவச வண்டிகளிலும் வந்திறங்கி துணுக்காயை முற்றுகையிட்டனர்.
மூன்று நாட்கள் இந்தப் பாரிய முற்றுகை நடந்தது.

அந்த முற்றுகையின் இரண்டாம் நாள்.

அனிச்சங்குளத்தில் காத்திருந்து, படையினரின் வண்டித் தொடர்மீது கண்ணிவெடித் தாக்குதல் நடாத்திய ஜீவாவும் ரஞ்சனும், நடந்து வந்த இராணுவத்தினரின் வளைப்பிற்குள் அகப்பட்டுக்கொண்டனர்.


ஆயிரக்கணக்கான படையினருக்கு நடுவில் அவர்கள். தூரத்திலிருந்து எம்மால் எதுவுமே செய்ய முடியாத நிலை. 'வோக்கி'த் தொடர்பு மட்டுமே எங்களுக்கிடையில் இருந்தது.

அவர்களிடமிருப்பது ஒரேயொரு றைபிள் தான் என்பதையும், அவர்கள் இருவர் என்பதையும் மிகச் சரியாக ஊகித்துக் கொண்ட எதிரி -உயிரோடு பிடிக்கும் நோக்கம் கொண்டு, ரவைகளைப் பொழிந்தபடி வட்டமாக நெருங்கினான்.

ஜீவா தனது எஸ்.எல். ஆரால் சுட்டுக் கொண்டேயிருந்தான்.

"கடைசி ரவை இருக்கும் வரை நாங்கள் சண்டையிடுவோம்... எம்மைப்பற்றி எதுவும் யோசிக்க வேண்டாம்..." வோக்கியில் அவனது குரல் தளம்பலின்றி ஒலித்தது.

சண்டை தொடர ரவைக்கூடுகள் வெறுமையாகின.



# காந்தரூபன் அறிவுச்சோலை

## தேசத்தின் சிற்பிகளை உருவாக்கும் பட்டறை



"இந்தக் குழந்தைகளை நான் அனாதைகளாகக் கருதவில்லை; இவர்கள் தமிழன்னையின் புதல்வர்கள்."

ஆறு வயதுக் குழந்தை. அருகே அவனது மூன்று வயதான தம்பி. இருவரும் நிமிர்ந்த மலர்களாகத் தெரிந்தனர்!

'அனாதைகள்' என எண்ணி இங்கு பரிவு கொள்ள இருந்த என் உள்ளம் தலை குனிந்தது. ஓர் உறுதிப்பாடு என் உள்ளத்தில் எழுவதை உணர்ந்தேன்.

நாங்கள் நெடுநாள் எண்ணிப் பழகிய 'அனாதை' இல்லமோ அதன் பரிணாம வழிவந்த சிறுவர் பராமரிப்பு நிலையமோ அல்லது தரும சிந்தையுடன் நடாத்தப்படும் சில சிறுவர் கூடத்தின் சாயலோ இங்கு தென்படவில்லை.

அச்சமோ ஏக்கமோ தெரியாத அறிவுச்சோலையில் நின்றேன்! அது குழந்தைகளின் சூழல். வாழத் தொடங்கிவிட்ட குழந்தைகளின் சூழல்.

நான் நின்ற இடம் -

தலைவர் பிரபாகரன் அவர்களால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட 'காந்தரூபன் அறிவுச்சோலை'.

"இவர்கள் தமிழன்னையின் குழந்தைகள். இந்தக் குழந்தைகளை நான் அனாதைகளாகக் கருதவில்லை.

**வளரப்போகும் இவர்கள், எதிர்காலத்தில் எமது தேசத்தின் சிற்பிகளாகத் திகழ்வார்கள் என்பது திண்ணம்"**

தலைவரின் இந்த உறுதி வார்த்தைகள் ஏற்கனவே 'செஞ்சோலை' என, பெண் குழந்தைகள் தளிர்விட்டு உயரும் வளர் நிலமாக உருவாகி வருவது தெரிந்ததே.

இதன் அடுத்த கட்டமாக அமைந்துள்ளது இந்த 'அறிவுச்சோலை'. இதில் தென்தமிழீழத்தின் ஆண்குழந்தைகள் உட்பட இவ்வருடத்துள் முந்நூறு பிள்ளைகள் வந்து சேர்வார்கள் என, இந்த அறிவுச்சோலையின் பொறுப்பாளர் திரு. ரமேஸ் கூறினார்.

ஒரு குழந்தையை இவர் அழைத்தபோது, அது ஓடி வந்து இவர் மடியில் அமர்ந்து கொண்டது; சற்றுத்தூரத்தே இன்னொரு குழந்தை இதனுடன் போட்டிக்கு நின்றது.

"இவர்கள் வேண்டுவது அன்பின் அரவணைப்பே" என அந்தப் பொறுப்பாளர் -இளைஞர் விளங்கப்படுத்தினார்.

"இவனை சிரித்த முகத்தோடு தான் நான் தூக்கி வந்தேன். எதுவும் அறியாது சிரித்துக் கொண்டிருந்தான் இக்குழந்தை" என மேலும் தன் நெஞ்சத்தைத் திறந்து கூறிக் கொண்டிருந்தார். குழந்தை வேறொரு பாதுகாப்பு இடத்திலிருந்து இங்கு சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை உணர முடிந்தது.

குழந்தைகள் எத்தகைய ஆபத்தான, துயரமான நிலைகளிலிருந்தெல்லாம் மீட்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய வினவியபோது, அவற்றை மிகச் சுருக்கமாக தேவையான அளவு மட்டும் கூறினார். குழந்தைகளுக்கு இவை கூறப்படுவதே இல்லையாம். அதற்குப் பதிலாக இந்தத் துயரக் கோவைகள் இப்புதிய சூழலில் மெதுவாக மறக்க வைக்கப்படுகின்றன. இது நாம் உணர வேண்டிய உளவியல் உயர்வுகளில் ஒன்று.

இது தரும் ஆக்கத்தை இங்கு பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்த பிள்ளைகளின் மலர்ந்த முகத்திலிருந்து புரிய முடிந்தது. இப்பிஞ்சுகளுக்கு நடந்த துயர நிகழ்வுகளை இவ்வேளை, எம்முள் நாம் எடை போட்டுப் பார்ப்போமா?

ஏழாலையில் வெடித்த எதிரியின் எறிகணை ஒன்று, அன்றிரவு பெற்றோர் இருவரையும் பலி கொள்ளத் தவறவில்லை. இந்தக் கொடுமைக்குத் தப்பிய குழந்தைகள் இருவர் இந்த அறிவுச்சோலை இல்லத்தில் வளர்வதைக் காண்கின்றோம்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் இன்னொரு தந்தை இலங்கை இராணுவத்தினரால் சுடப்பட்டார். நலிந்த தாயும் சிறிது காலத்துள் இறந்தாள். குழந்தை அனாதையா? இல்லை -இங்கு தாயைப் போலப் பார்ப்போரிடையே குழந்தை நன்கு வாழ்கிறது.

இந்த இடத்தில் இன்னொரு தந்தை போராட்டத்தில் பங்களித்ததற்காகத் தேசத்துரோகிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது ஒன்பது வயதுப் பாலகன் இன்று அறிவுச்சோலையின் பாடசாலையில் கல்வி பயின்றுவருகின்றான்.

பருத்தித்துறையிலிருந்த வேறொரு பெண்பிள்ளை செஞ்சோலையில் பயில்கின்றாள். இவளின் 13 வயது அண்ணன் இங்கு அறிவுச்சோலையில் ஆண்டு 8 படிக்கின்றான். இவர்களுக்கு நடந்தது என்ன? தந்தை வேலைக்குப் போகும் போது, இலங்கை இராணுவத்தால் சுடப்பட்டார். தாய் விமானக் குண்டுவீச்சுக்குப் பலியானாள். ஆயினும் இந்த எதிரியின் செயல் எம்மை அழித்துவிடப் போவதில்லை. எம் விடுதலைக்கு இவை உரமாவதே உண்மை!

எதிரியின் கொடுமையிலிருந்து விடுபடுவது மட்டும் போதாது. ஏனைய சமுதாய நலிவுகளில் இருந்தும் நாம் விடுபட வேண்டும், பலம் பெற வேண்டும்.

ஏதோ காரணத்தால் தந்தை, தாய் இருவரும் இன்னொரு ஊரில் நஞ்சுண்டு இறந்ததை அறிகிறோம். அவர்களது மைந்தன் இன்று இங்கு புதுவாழ்வில் வளர்கிறான்.

இங்கு ஆண்டு மூன்றளவில் படிக்கும் இன்னொரு மாணவன், இடைக்காலத்தில் தெருக்கரையில் பாடித் திரிந்து பணம் தேடும் நிலையில் இருந்தானாம். எம் காவல்துறையினர் எவரோ கண்டெடுத்து கைமாறியபின், இன்று இவன் இந்த அறிவுச்சோலையின் புதுவாழ்வில் மலர்கிறான்.

இங்கு பாலகர்கள் அடித்து ஏசி எழுப்பப்படுவதில்லை! இவர்களுக்கெனத் தம்மை அர்ப்பணித்து வாழும் தாய்மார் உளர், உணவு ஊட்டப்பட வேண்டிய குழந்தைகளை இவர்கள் கவனிக்கின்றனர். இவர்களோடு ஆசிரியர்களும் பலர் உளர். பொறுப்பாளருடன் ஏனைய தொண்டர்கள், பணியாளர்களின் பங்களிப்பு இங்கெழும் ஏராளமான வேலைகளைச் சமன் செய்து, மேலும் ஆக்கவளர்ச்சிக்கு இட்டுச் செல்கிறது.

வளரும் பிள்ளைகளுகளுக்கு உடல் நலன் முக்கியம்; உணவு முக்கியம். இங்குள்ள பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் நாள்தோறும் பால் கொடுபடுகிறது. அதுபோல முட்டையும் கொடுபடுகிறது. இவை ஏனைய நல்லுணவுடன் கூடிய சத்துணவாகக் கொடுபடுகிறது. காலையில் குளிப்பு; பின்னர் காலை உணவு. அதன் பின்னர் பாலர் வகுப்பிலிருந்து ஆண்டு எட்டு வரை பாடசாலை. நண்பகல் உணவின் பின் ஓய்வு, உறக்கம். மாலையில் விளையாட்டு, விரும்பிய உடலுழைப்பு, தேகப்பியாசம். இரவு, தகுந்த வழிகாட்டலின் கீழ் பிள்ளைகள் சுயமாகப் படிக்கவிடப்படுகிறார்கள். இது சுய வளர்ச்சியை ஊக்குவிக்கும் அறிவுச்சோலை அல்லவா!

பள்ளிக்கூடம் செல்லும் பிள்ளைகளுக்கு இரவு உணவின் பின் பல்துலக்கல், தூக்கம், தன் கோப்பையைத் தானே கழுவுதல் முதலிய நெறிகளும் இங்கு பயிற்றப்படுகின்றன. தன் தன் வேலையைத் தானே செய்தல் என்ற பயிற்சியே இதன் நோக்கம்.

இவ்விதமாக இயங்கும் காந்தரூபன் அறிவுச்சோலையானது, வருங்கால வளர்ச்சிக்கு ஏற்ற விசால இடத்திலேயே அமைந்துள்ளது. அகன்ற மாந்தோப்பு அழகு செய்கிறது. எட்டு 'இல்லங்கள்' காணப்படுகின்றன. இதை விட நீண்ட பாடசாலைக் கட்டடமும் காட்சி தருகின்றது. குழந்தைகளின் -விளையாட்டுப் பிள்ளைகளின் -குரலொலி உயிரூட்டுகின்றன. இதுதான் காந்தருபன் அறிவுச்சோலை!

### சரி யார் இந்தக் காந்தருபன்?

அவன் ஒரு கரும்புலி. வடகடலில் கொடுமை செய்த பகைவனின் கப்பலுடன் மோதிச் சங்கமமான கரும்புலிகளில் ஒருவனே இந்தக் காந்தருபன்! இவன் எவருமறியாத அனாதையாய் வல்வெட்டித்துறைக் கரையில் நின்றபோது, திரு. யோகராசா என்பவரால் கூட்டிச் செல்லப்பட்டான். பல வருடங்களின் பின் பிறந்த தனது முதல் பிள்ளையை இவர், தனது இரண்டாவது மகனாகவே கருதினார். காந்தருபனையே மூத்த மகனாகக் கொண்டிருந்தார்.

நாட்கள் ஓடின. காந்தருபன் ஒரு விடுதலைப் புலியானான். மணலாற்றுக் காட்டில் தலைவரது நேரடித் தொடர்புக்கும் பாசத்திற்கும் உள்ளாகும் பெரும் பேறையும் பெற்றான். காந்தருபன் தன்னைக் கரும்புலி வரிசையில் இணைத்துக் கொள்ளுமாறு தலைவரவர்களை வேண்டினான். அத்துடன் தலைவரிடம் பணிவும் பாசமும் பொருந்திட இன்னொன்றையும் கேட்டான் -

"அண்ணை. ,.... நான் எம் இனத்திற்காகப் போய்விடுவேன். நான் 'அனாதை'யாய் இருந்தவன். அனாதைகளின் மனத்து வேதனைகளை -அல்லல்களை -உணர்ந்தவன். இப்படியான வேதனைகளையும் கஸ்டங்களையும் அனுபவிக்காது தடுக்க நீங்கள்தான் அவர்களுக்கு ஒரு வழி சமைத்துக் கொடுங்கோ."

இந்த இறுதி வேண்டுகோள் தலைவரின் உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்தது. ஏற்கனவே தலைவரிடம் இருந்த இப்படியான சிந்தனைக்கு இது மேலும் உறுதி கொடுத்தது.

இத்தீர்மானம் செயலாகியது; காந்தருபன் அறிவுச்சோலையை -இதோ -எம் கண்முன் காண்கிறோம்!

தனிக்குடும்ப உறவுகளைக் கடந்த பரந்த சூழலில் இக் குழந்தைகள் வாழ்கின்றனர்.

அறிவாளர்களை - துணிவாளர்களை -மண்பற்றும் மக்கள் பற்றும் கொண்ட பணியாளர்களை இது நிச்சயம் உருவாக்கும்.

தலைவர் கூறியுள்ளதைப் போல எதிர்காலத்தில் எமது தேசத்தின் சிற்பிகளாக இவர்கள் திகழ்வார்கள் என்ற, ஒரு புதிய வரலாறு இங்கு உருவாகி வளர்கிறது; செயலாகிறது. ■

**- பெருவழுதி**

**நன்றி: 'விடுதலைப் புலிகள்**

---

### சங்கமம்...

கிட்டத்தட்ட மூவாயிரம் ரூபாய்க்கு வாங்கினோம். அன்று மாலை நாங்கள் செஞ்சோலைக்குப் போனோம். அங்குள்ள குழந்தைகளுக்குப் பரிசுப் பொருட்களையும் இனிப்பு வகைகளையும் பகிர்ந்து கொடுத்து, அவர்களுடன் அன்றைய மாலைப் பொழுதைக் கழித்தோம். வீட்டுக்குத் திரும்பிய பொழுது எட்டு மணியாகிவிட்டது.

என்றுமில்லாதவாறு என் மனம் லேசாகிவிட்டாற் போன்ற ஓர் உணர்ச்சி. நான் அவசர அவசரமாக றேடியோவைத் திருப்புகிறேன். 'கரும்புலிகள்' ஒலிப்பதிவு நாடாவிலிருந்து ஒரு பாடல் என்று அறிவித்து 'தாயக மண்ணின் காற்றே! என்னில் வீசம்மா!' என்ற பாடல் ஒலிபரப்பாகிறது. என் மனதில் ஓர் நிறைவு தோன்றுகிறது. என் சாந்தனே இப்பாடலைப் பாடுவதாக என் உள்ளம் கற்பனையில் மூழ்க ஒரு கணம் செஞ்சோலைக் குழந்தைகள் என் கண்முன் தோன்றுகின்றனர்.

'நாளையிந்த நாட்டையாளும்
சின்னப் பூக்களே! நீங்கள்
நம்ப வேண்டும் நாளை தமிழ்
ஈழமென்றுமே
நீங்கள் வாழ வேண்டுமென்றே
நான் வெடிக்கிறேன் -மாமன்
நெஞ்சிலுள்ள கனவுகளைத்
தான் படிக்கிறேன்'

இந்த வரிகள் என் உணர்வுடன் ஒன்றிச் சங்கமமாகிவிடுகின்றன. ■




**வா**னிற்கு எக்ஸ்ராவீலை மாற்றிக்கொண்டு குமுழமுனை நோக்கிப் பயணமானோம். அப்போ நேரம் 5. 35 அதிகாலை. எந்தப் பெரிய காடுகள்! அவற்றிற்குக் குறுக்காக, பெரும் கால்வாய்களில் மாரிவெள்ளம் சீறிப் பாய்ந்து வந்தது.

"இங்க இப்படித்தான் தண்ணீ எக்கச்சக்கமாய்ப் பாயும். சில நேரம் றோட்டையும் மூடிப் பாயும். பெரிய பெரிய பாலை, வீரை மரங்களையெல்லாம் பிரட்டிப்போடும்." நான் வேறு பகுதியை சேர்ந்தவன் என, அவன் இனங்கண்டுவிட்டான் போலும்!

ஒரு பெரிய பாலத்தடியில் திடீர் பிறேக் போட்டு நிற்பாட்டினான். "அங்க பாரும் அந்தப் பாலைக் கட்டையில முதலையொன்று கிடக்குது" எனச் சுட்டிக்காட்டினான்.

"எங்க கிடக்குது?" உண்மையில எனக்கு சரியாகத் தெரியவில்லை.

"அங்கபாரும் அந்தப் பாலையில" என்று எனக்குச் சுட்டிக் காட்டினான். ஒரு பெரிய முதலை, மரத்தோடு மரமாக ஒட்டிக் கிடந்தது. கொஞ்சமும் வித்தியாசம் தெரியாமல் இருந்தது.

"உது இப்பிடித்தான் இருக்கும். ஏதாவது இரைகள் -ஆடு, மாடுகள் -அகப்பட்டால் அவ்வளவுதான்! பிடிச்சா விடாது. முந்தி இப்பிடித்தான் நான் சின்னவனாயிருக்கும் போது, எங்கட பசுவும் கன்றும் மேயப்போனதுகள். மத்தியான வெயிலுக்க தண்ணி குடிக்கப்போன கன்றை பெரிய முதலை பிடிச்சுக் கொண்டு போட்டுது. இரவு எல்லா மாடும் பட்டிக்கு வந்தும் வெள்ளைப் பசுவைக் காணேல்ல. என்னையும் அண்ணாவையும் அப்பு அனுப்பினார் பார்க்கிறதுக்கு. எல்லா இடத்தில் தேடியும் காணேல்ல. பின் தண்ணி குடிக்கிற இடத்துக்குக் கிட்ட போகேக்க, பசு கதறின சத்தம் கேட்டுப் போய்ப் பார்த்தா பசு நின்றது.

அண்ணாதான் சுருக்கைப் போட்டு இழுத்தவர். பசு வர மாட்டன் என்றுட்டுது. பிறகு அப்பாவிடம் போய்ச் சொல்ல இன்னும் இரண்டு பேரும் வந்து கட்டி இழுத்துக்கொண்டு வந்திச்சினம்."

"பிறகு?" என்றேன் ஆவலாக.

"பிறகென்ன? கொஞ்சக்காலத்தில சாப்பிடாமல் செத்துப் போச்சு" என்றான். எனக்கு வசந்தின் அம்மா முகம்தான் நினைவில வந்தது. பசுக்களைப் போல அம்மாக்களும் இருப்பார்களே. அதுகளைப் போலச் சாப்பிடாமல் கிடந்து, ஒருவேளை அதுகளைப் போலவே... சே, என் கற்பனை. அதுகள் ஐந்தறிவு பிராணிகள். என்னைத் தேற்றிக்கொண்டேன். சில கணங்களில் திடுக்கிட்டு வெளியே பார்க்கிறேன். பாலத்தைக் கடந்து வெகுதூரம் வந்து விட்டோம்.

வாகனம் தனிக்காட்டைத் தாண்டி முள்ளியவளை கிராமத்துக்குள் நுழைந்தது. அதிகாலைப் பனிப்படலம் இன்னமும் முற்றாக நீங்கவில்லை. வாகனத்தின் முன் வருவனவற்றை இன்னதென நிச்சயிக்க முடியாத நிலையாக இருந்தது. அதனால் மெதுவாகச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பாதை நெடுகிலும், அங்கொன்றும் இங்கொன்றுமாய் தேநீர்க்கடை லாந்தர் விளக்குகள் தூங்கி வழிந்து கொண்டிருந்தன. அவற்றின் மஞ்சள் ஒளி பனிப்புகாரூடாக விட்டு விட்டுத் தெரிந்துகொண்டிருந்தது.

முள்ளியவளையில் ஒரு கடையில் தரித்து தேநீரைச் சுடச்சுட அருந்திவிட்டுப் புறப்பட்டோம். இரத்த உடையுடன் இருந்த என்னை, முழுவியளமாய் ஏற்க கடைக்காரர் விரும்பவில்லை என்பதை, அவரது முகம் காட்டியது. வசந்திற்கு கோப்பி கொடுத்த அம்மாவை ஒருகணம் நினைத்தபடி வானில் அமர்ந்தேன்.

அத்தியாயம் - 2

இது ஒரு புதிய போர்ப்பரணி !
பிரபாகரனின் சகாப்தத்துடன் தொடங்கிய ஈழத்தமிழரின் வீரமரபை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு போர்க்கால இலக்கியம் இது. ஆழமான புரிந்துணர்வை - அளவிட முடியாத அன்புறவை -வாட்டுகின்ற துன்பங்களிலும், பொங்குகின்ற இன்பங்களிலும் பங்கெடுக்கின்ற உயிருக்குயிரான நேசிப்பை -ஒருவரில் மற்றவர் நம்பிக்கை கொண்டு, ஒருவருக்காக மற்றவர் உயிர்கொடுத்துப் போராடும் புலிவீரர்களின் போராட்ட வாழ்வை, தான் தரிசித்த நிகழ்வுகளையும் பெற்ற அனுபவங்களையும், சிறந்த எழுத்தாற்றலுடன் ஓர் இலக்கியப் படைப்பாக வடித்திருக்கின்றான், தன்னை முழுமையாகவே தாயக விடுதலைக்காக அர்ப்பணித்து நின்ற ஒரு புலிவீரன் கப்டன் மலரவன் (லியோ).

அதேவேளை இப் புலிவீரனின் போராட்ட வரலாற்றையும், பல சாதனைகளையும், மறக்க முடியாத பல சம்பவங்களையும் கொண்டதாகவே இந்நூல் இருக்கின்றது. 'போர் உலா' என்ற இந்தப் பரணி, தமிழீழத்தின் போர்க்கால இலக்கியத்திற்குக் கிடைத்த ஒரு பொக்கிசமாக என்றைக்கும் விளங்கும்! . இதனை நாம் இங்கு தொடராகத் தருகிறோம்.

தூரத்தே முறிப்புக் குளக்கட்டு தெரிய ஆரம்பித்தது. கட்டுக்கு இப்பால் வயல்வெளி பரந்து காணப்பட்டது. பார்க்குமிடமெல்லாம் பச்சைப் பசேலென இருந்தது. குளக்கட்டுப் புறமாக கூழக்கடாப் பறவைகள் கூட்டமாய் பறந்துபோய்க் குளத்தில் இறங்கியிருக்க வேண்டும். வயலுக்குள் இருந்த கொக்குகள் ஏர் பிடித்த உழவனுக்கு போக்குக் காட்டிப் பறந்து, அப்பால் இறங்கின. சட்டென திடுக்குற்றேன். எங்கோ அபரிதமாய் கேட்ட அந்த அவலக் குரல் ஞாபகம் வந்தது. அது ஆட்காட்டியின் குரல்தான். அது றோட்டைக் கடந்து, பறந்து மறைந்து போனது. நாங்கள் இறங்கினோம். எனது இதயத்தில் அதன் ஒலி எதிரொலித்துக் கொண்டிருந்தது. கண்ணயர்ந்தேன். "மச்சான் நான் படுக்கப் போறன். மத்தியானம் எழுப்புங்கோ" என்று சொல்லிவிட்டு, பெரிய பாலை மரத்தின் கீழ் சாக்குகளைப் போட்டுவிட்டு, என்னுடைய புத்தகப் பையைத் தலையணையாக்கி உறங்கிப் போனேன்.

மதியவேளை 12. 30 அளவில் திடுக்குற்றுக் கலைந்தேன். எனக்குப் பெரும் வியப்பாக இருந்தது. ஏராளமான பாடசாலைச் சிறுவர் சிறுமிகள் சூழ்ந்து நின்றார்கள். அவர்களுக்கு இதயனும், சலாமும் போக்குக் காட்டிக் கொண்டிருந்தார்கள். குழந்தைகள் ஒரேயடியாகக் கேள்வி கேட்டு அமர்க்களப்படுத்தினார்கள்.

"இது எப்படி அண்ணை சுடுறது. எங்கட அப்பாவின்ர துவக்கு பொல்லு மாதிரி நீட்டல்லோ?" சிறிய அண்ணனை உசுப்பினாள்.

"அது வேறயடி. சொட்கன் என்றது ஒருக்காத்தான் சுடலாம். இதில இதுக்க கிடக்கிற கனக்க குண்டுகளையும் ஒரேயடியாகச் சுடலாம்".

எல்லாக் குழந்தைகளும் அவனைப் பார்த்தன. "எங்கை குண்டைப் பார்ப்பம்" என, இதயன் மகசீனைக் கழற்றி ஒரு ரவையை நீட்டி, "எல்லோரும் பார்த்திட்டு தாங்கோ" என்றான். ஆவலாய்ப் பார்த்தன குழந்தைகள்.

"எனக்கும் இதில ஒன்று வேணும்".

"இப்ப வேண்டாம், வளர்ந்தாப் பிறகு எல்லாம் தருவம்"

"நீங்க எத்தனை ஆமியைச் சுட்டனீங்கள்?"

"ஏன் சுடவேணும், அவங்கள் பாவங்களல்லே?"

"அப்ப எங்கட... மாமாவை, பெரியப்புவை ஏன் சுட்டவங்கள்?"

"குஞ்சுக்கு ஆர் சொன்னது அவங்கள் சுட்டதென்று?"

"நான் சின்னனா அம்மாவின்ர மடியில இருக்கேக்க, வீட்டுக்குள் புகுந்து சுட்டவங்களாம். அம்மாவின்ர கையிலும் காயம். மாமா நல்லவர். ஒவ்வொரு நாளும் றோட்டால கூட்டிப் போவார். இனிப்பு, வாழைப்பழம் எல்லாம் வாங்கித் தருவார். எனக்கு காய்ச்சலாய் கிடக்கேக்க, இரவிலையும் மருந்து வாங்க கூட்டிப் போனவர் என அம்மா சொல்லுறவ".

"அப்ப உங்களுக்கு அழுகை வரேல்லையோ?"

"ஓ, நிறைய நேரம் அழுவேன். அப்ப அம்மா சொல்லுவ, நீ அழாதே வளர்ந்தாப்பிறகு அவங்களை நீதான் சுடவேணும் என்று எனக்குச் சொல்லுவ. வளர முதல் வந்து என்னையும் கொண்டு போடுவாங்களோ?"

நீர்த்திரை கட்டியது. குழந்தையை இறுக அணைத்தபடி, "நாங்கள் ஏன் இருக்கிறம், கட்டாயம் அவங்களைக் கொல்லுவம்." பற்களை நறும குழந்தை பயத்துடன் பார்த்தது. மறுபடி இதயன் சிரித்துக்கொண்டு, பூவை அணைத்துக்கொண்டான். சலாம் கொட்டாவி விட்டான்.

"அண்ணா எப்ப சாப்பிட்டனீங்க?"

கிராமத்துப் பிள்ளைகள், இப்ப என்ன சாப்பிட்டனி என கேட்பதைவிட, எப்ப சாப்பிட்டனீங்க என்றுதான் கேட்குமோ என மனதுள் எண்ணிக்கொண்டேன்.

"ராத்திரிக்குப் பிறகு ஒன்றும் சாப்பிடேல்ல" என கையால் காட்டினான் சலாம்.

சரியான தீனிமாடு!

எமது ஆயுதங்களை நெடுநேரமாகப் பார்த்த பிள்ளைகள் ஏற இறங்கப் பார்த்துவிட்டு, நாகரிகமாய் டாட்டா சொல்லாமல், போட்டுவாறம் என கையசைத்து விடைபெற்றனர். மறையும்வரை நாங்களும் கைகளைக் காட்டினோம். தூரத்தே வண்ணத்துப் பூச்சிகளாக மறைந்து போனார்கள். தூரத்தே ஒரு அம்மா குடத்துநீரை இடுப்பில் சுமந்து வர, அருகே சிறுமி ஒருத்தி ஊமல் பையுடன் வந்துகொண்டிருந்தாள். நல்ல வெயில் சுட்டு எரித்துக் கொண்டிருந்தது. பாதணியற்ற பாதத்துடன் வரும் அவர்கள் எப்படித் தவிப்பார்கள்! கறுப்புத் தார்வீதி கிடங்கும் குழியுமாய் விரிந்து கிடந்தது.

"இப்ப சாப்பாட்டுக்கு என்ன செய்யிறது மச்சான்?"

"வோக்கி எடுத்துப்பார். நான் நினைக்கேல்ல இருக்குமென்று. இண்டைக்கு சிவ பட்டினிதான் போல. காட்டுக்க மூன்று நேரமும் நல்லாத் திண்ட உனக்கு கஸ்டமாய்த்தான் இருக்கும்."

இதயன், சலாமைச் சொறிய ஆரம்பித்தான். ஏற்கனவே கொட்டாவி விட்டவனுக்கு நல்லா ஏற, அருகே கிடந்த கட்டையால் வீசினான்.

"றோட்டால வந்த அம்மா இஞ்சதான்ரா வாறா".

அம்மா களைப்புடன் குடத்தை இறக்கி வைத்துவிட்டு பாசமாய்ச் சிரித்தாள்.

"என்ன பிள்ளையள் வாடிப் போனியள். ராவும் நித்திரை முழிப்புப் போல . குடத்து தண்ணில கையைக் கழுவிவிட்டுச் சாப்பிடுங்கோ, பிறகு உடம்புக்கு ஏதும் செய்தாலும்".

எல்லாம் அறிந்தவள் போல கூறிச் சிரித்தாள். சிறுமி பையை வைத்துவிட்டு ஆயுதங்களைப் பார்க்கப் போனாள்.



**கப்டன் மலரவன் (லியோ)**
காசிலிங்கம் விஜித்தன்
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
பலாலி கூட்டுப்படைத் தளத்தின் கிழக்குப் பாதுகாப்பு வியூகம் மீது 23-11-1992 அன்று நடாத்தப்பட்ட மிகப் பெரிய தாக்குதலின்போது இன்னும் 57 புலிகளுடன் வீரச்சாவு அடைந்தார்.

"அது வெடிக்கும் தங்கச்சி கவனம்."

"இல்ல இல்ல" என மழலை சிரித்தது.

நீங்கள் சாப்பிட்டியளோ?"

"இல்ல, நீங்க சாப்பிடுங்கோ. நான் பிறகு சாப்பிடுறன்".

"அது சரிவராது, எல்லோரும் ஒன்றாய்த்தான் சாப்பிடோணும்".

இதயன், சிறுமியைத் தூக்கி வந்து மடியில் வைத்துக் கொண்டான். பள்ளியால் வந்த அவள் தண்ணீரைக் குடித்துவிட்டுத் தான் வந்திருந்தாள்.

கவளம் கவளமாய் சோற்றை அம்மா திரட்டித் தர உண்டு முடித்தோம். தயிரின் நெய் வாசனை தாளவில்லை. திறமான சாப்பாடு" -சலாம் சொன்னான்.

"அம்மான்ர பிள்ளையள் என்ன செய்யினம்?" உணவு இறங்கியவுடன் பழங்கணக்குக் கிளறத் தொடங்கினான் சலாம்.

"மூத்தது உங்களோட. மற்றது உது. இரண்டும்தான்".

ஐந்தாறு அம்மாக்கள் இப்படி உணவுடன் படையெடுக்க களைத்துப் போன நாங்கள், ஐயோ காணும், ஐயோ காணும் என குழறினோம்!

அருவி பாய்கிறதா, அன்பு பாய்கிறதா, தெரியவில்லை. பிற்பகல் 6. 30. குமுழமுனையின் அரைவாசி மக்களைக் கண்டு கையசைத்த வண்ணம் நகரத் தொடங்கினோம் -வசந்தனின்றி.

எனக்கு பின்னால் இருக்க மனம் வராததால், முன்னே சென்று மட்காட்டில் ஏறிக்கொண்டேன். வாகனம் குலுங்கியபடி மெதுவாக அசையத் தொடங்கிய பின்னர் தன் வேகத்தைக் கூட்டியது. நான் பின்னால் திரும்பிப் பார்த்தேன். வசந்தனை இப்ப யாழ்ப்பாணம் கொண்டுபோய் இருப்பாங்களோ? ஓ, என விரைவாகத் தலையாட்டினேன். பார் வெளிக்கிட்டு கொஞ்ச நேரத்தில் ஒன்று ம்... ம் ... இந்த சண்டையில முன்வரிசையில் அவனையல்லவா எதிர்பார்த்தேன்? உயிருக்கேதாவது? சீ! அப்படியிராதென்று நினைக்கிறேன். மூவரும் அமைதியடைய, ரைக்ரர் சில்லு தூரத்தை விழுங்கிக் விழுங்கிக் கொண்டிருந்தது. மேற்கில் சூரியன் மௌனமாக அமிழத் தொடங்கினான். அவனின் அந்தச் செந்நிறக் கதிரினால் வானமே சிவப்புக் குழம்பாகத் தோன்றிற்று. முகில்களில் கூட அந்தச் செம்மை பற்றித் தெறித்தது.

பெரிய வயல்வெளியில் தேங்கிய நீர்கூட சிவப்பாகத் தெறித்து சோகம் கொண்டாடியது. செவ்வானத்திடையே, வெண்ணிறக் கொக்குகள் ஊடுருவிப் பறந்தன. மாடுகள் பட்டியாய்த் திரும்பிக் கொண்டிருந்தன. ஒரு தாய்ப் பசுவை, கன்று இடைவிடாது மடியை முட்டி உபத்திரவம் செய்து கொண்டே போயிற்று. ஆவலுடன் அதைத் திரும்பிப் பார்த்தேன். நெஞ்சிலோர் வருடல்.

"மச்சான், அதில துவக்கோட நிற்கிறவருக்குப் பக்கத்தில நிற்பாட்டு". வாகனம் ஊர்ந்து சென்று நின்றது. ஒரு தந்தையும் மகனுமாய் இருக்க வேண்டும்.

தந்தைக்கு 70 வயதளவிலும் மகனுக்கு 45 வயதும் இருக்கும் போல தென்பட்டது. வீட்டுவாசலில் குடும்பத்துடன் கதைத்துக் கொண்டிருந்தார்.

"என்ன தம்பியவை வேணும்?"

"ஒன்றுமில்லை நீங்கள் கதையுங்கோ. தண்ணீர்க்கான் சரிஞ்சிட்டுது போல, அதப் பார்க்கத்தான் நிற்பாட்டினாங்கள்". நல்லாப் பொய் சொல்லுகிறான் என, இதயன் முணுமுணுத்தான்.

"என்னப்பா போறியள், எப்ப வருவியள்?" என்றாள் அம்மா. ஐயாவின் மனைவியாக இருக்க வேண்டும்.

"இண்டைக்குத் தங்கம் அவசரமாய் போறம், எப்ப வாறமோ சொல்லேலாது. ஏன், வீட்டில எல்லாம் கிடக்குத்தானே?"

"இஞ்ச எல்லாம் கிடக்கு. பேரனுக்கு இரண்டு நாளா

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

# வரலாறு படைத்த பூநகரி முகாம் தகர்ப்பு:

# வீரச்சாவடைந்த வேங்கைகள்

## 11-11-93 இல் வீரச்சாவு

**லெப். கேணல் குணா** (சுந்தரம் விஜயராசன்), கல்வயல், சாவகச்சேரி

**லெப். கேணல் அருணன் - ஆட்** (நவரட்ணம் விக்னராஜன்) இல. 328, பருத்தித்துறை வீதி நல்லூர் -யாழ்.

**கடற்கரும்புலி மேஜர் கணேஸ்** (நாகநாதி ஜீவநேசன்) நவக்கிரி, புத்தூர் மேற்கு, புத்தூர்

மேஜர் சத்தியேஸ்வரன் (சிவகுரு மகேந்திராராஜா) கிரான் விசாங்கேணி, மட்டு.

மேஜர் இளங்கோவன் (நிசாம் -சுப்பிரமணியம் இராசேந்திரன்) தோப்பூர் எட்டாம் வட்டாரம், பள்ளிக்குடியிருப்பு, மூதூர்

மேஜர் குமணன் (செல்லையா நவரத்தினம்) குருநாகல். த. முகவரி: செட்டிக்குளம், வவுனியா

மேஜர் மைக்கல் (செல்வராசா யோகராசா) பீச் றோட், திருக்கோவில், அம்பாறை

மேஜர் நித்தியா - ஜிகிர்தா (தேவசுந்தரம் விக்னேஸ்வரி) பொத்துவில், அம்பாறை

மேஜர் தயாளினி (பாலசுந்தரம் சுபா) 5ம் வட்டாரம், சேனையூர், மூதூர்

மேஜர் வித்தியா (பாலசுப்பிரமணியம் தபோஜினி) இருபாலை வீதி, கோண்டாவில்

மேஜர் நவனீதன் (தில்லையம்பலம் திருலோகநாதன்) கனகராயன் குளம், வவுனியா

கப்டன் செம்பியன் - நசீர் (தங்கராசா சிறீமுருகன்) இலங்கை முகத்துவாரம், மூதூர்

கப்டன் புலவன் - கபூர் (சாமித்தம்பி லோகநாதன்) பால்சபை வீதி, வெல்லாவெளி, மட்டு

கப்டன் குட்டித்தம்பி (பால்சாமி வின்சன் ஜெயபாலன்) காத்தான்குளம், வட்டக்கண்டல், மன்னார்

கப்டன் செம்மணத்தான் (கிருஸ்ண பிள்ளை ராஜேஸ்வரன், புலோலி மேற்கு, புலோலி: த. முகவரி -உடையார்கட்டு சுதந்திர புரம், கொலனி வீட்டு இல. 37 முல்லைத்தீவு

கப்டன் சூரியன் / றெனோ (வினாயக மூர்த்தி சத்தியகரன்), மறவன்புலவு, சாவகச்சேரி

கப்டன் குருவேல் (சற்குணதாசன் குசலவேந்தன்) பரிகாரிகண்டல், முருங்கன், மன்னார்

கப்டன் காஞ்சனா (செபமாலை ஜெபநேசன்), தச்சனாமருதமடு, மடு அகதிமுகாம்

கப்டன் தென்னவன் / பிரணா (கனகசிங்கம் தெய்வேந்திரன்) கட்டைபறிச்சான், சேனையூர் -5, மூதூர், திருமலை

கப்டன் பேரின்பன் / சுருளி (வசந்த இராசுமோகன்) உரும்பிராய் தெற்கு

கப்டன் தூயமணி (துளையசிங்கம் உமாசங்கர்) புங்குடுதீவு முதலாம் வட்டாரம். த. முகவரி: ஐந்து சந்தி யாழ்ப்பாணம்.

கப்டன் லொயிற்ராஜ் (சங்கமப்போடி உதயராஜா) தம்பிலுவில், பி. சி. வீதி

கப்டன் கரிகாலன் / மஞ்சு (தர்மரட்ணம் பிரபாகரன்) இல. 92, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.

கப்டன் ஈழமாறன் / தினேஸ் (சுப்பிரமணியம் இந்திரகுமார்) விபுலானந்தர் வீதி, மாதகல். த. முகவரி: வரணி வீதி கொடிகாமம்.

கப்டன் இராவணன் / கோணேஸ் (மரியதாஸ் ராயு) அரியாலை, யாழ்ப்பாணம்

கப்டன் சற்சுதன் / சுதர்சன் (புவிராஜசிங்கம் வாகீசன்) நொஞ்சுமுனை, மட்டு.

கப்டன் கயலவன் (ஆனந்தராஜா மிதிலன்) பெரியகல்லாறு -3

கப்டன் பவானந்தகுமார் / வின்சன் (பெரியதம்பி யுவராசா) வெல்லாவெளி தாமரைக்கேணி

கப்டன் தேவசுகி (இரத்தினம் சுபத்திரா) மாவிட்டபுரம் வீதி, கீரிமலை. த. முகவரி: கந்தரோடை, சுண்ணாகம்.

கப்டன் சுதர்சனா (பால சிவராஜா விஜயலட்சுமி) கொக்குத் தொடுவாய், மணலாறு.

கப்டன் செந்தாமரை / கலியுகன் (செல்லத்தம்பி சந்திரன்) கடற்கரைவீதி கதிரவெளி, மட்டு.

கப்டன் கருவேலன் (வெள்ளைச்சாமி ஆறுமுகம்) 9ம் கட்டை, உயிலங்குளம், மன்னார்.

கப்டன் கதிரொளி (குலசிங்கம் மகிமதாஸ்) சரஸ்வதி வீதி, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

கப்டன் கிளிமொழி / கிறிஸ்டி (பேர்னாட் ஜெயராணி) தாழ்வுபாடு, மன்னார்.

கப்டன் ஈழவாணி (சுப்பிரமணியம் ஜெயமலர்) இரண்டாம் செங்கற்படை, இரணை இலுப்பைக்குளம், வவுனியா.

லெப். குணம் (தங்கமணி விட்டலன்) மாவடி வேம்பு, சித்தாண்டி, முறக்கொட்டாஞ்சேனை

லெப். அதர்மலிங்கன் / காந்தன் (சின்னத்துரை கேதாரலிங்கம்) கதிரவெளி, மட்டு.

லெப். இராஜேந்திரன் (விநாயகம் மாறன்) கறுவாக்கேணி, வாழைச்சேனை.

லெப். வளவன் (இளையதம்பி புஸ்பராஜா) கல்முனை, சவளைக்கட்டை.

லெப். பாலகுமார் (கணபதிப்பிள்ளை புஸ்பராஜா) தேற்றாத்தீவு, களுவாஞ்சிக்குடி, மட்டு.

லெப். ரங்கன் (சிவசம்பு டோமசிறி) பழுகாமம், மட்டு.

லெப். மயினா / மணி (செல்லையா வசந்தி) புதுப்பிளவு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

லெப். மாலதி (ஐயம்பிள்ளை நந்தினி) சிலாபத்தை, முல்லைத்தீவு.

லெப். இளவரசி (செல்லையா கலாநிதி) ஜெயந்தி நகர், கிளிநொச்சி.

லெப். இளம்பரிதி / விஸ்வநாதன் (ஆறுமுகம் ரஜீந்திரன்) ஊரெழு மேற்கு, சுன்னாகம்.

லெப். நிலவேந்தன் / நடேஸ்வரன் (சுப்பிரமணியம் கண்ணன்) புலோலி தெற்கு, புலோலி.

லெப். தானன் /விஜி (முத்துவேல் மூர்த்தி) காளிகோவிலடி ஒழுங்கை, சாவகச்சேரி.

லெப். பாபு (கணபதி சிறீஸ்காந்தன்) நெல்லியடி. த. மு: யாக்கரை, கரவெட்டி.

லெப். பழனிவேல் / மகேந்திரவர்மன் (முத்துலிங்கம் சிறீதரன்) குருக்கள் மடம், செட்டிப்பாளயம், வம்மிக்கண்ணி வீதி, மட்டு.

லெப். அம்பிகை (குமாரசாமி கமலாம்பிகை) தனங்கிளப்பு, சாவகச்சேரி.

லெப். தாமரை (கோகிலா ஜெயவீரசிங்கம் ) தெல்லிப்பளை. த. மு: மானிப்பாய்.

லெப். குகதா (அம்பலம் புஸ்பராணி) சுதிரிப்பாய், அச்சுவேலி.

லெப். விமலா (தர்மகுலசிங்கம் விஜயராணி ) மாதகல், யாழ்.

லெப். மயிலன் (சந்திரலிங்கம் சிறீரஞ்சன்) வேம்படி, வல்வெட்டித்துறை

லெப். தேவமணி /யூரி (இராசையா அன்னலிங்கம்) ஊற்றுச்சேனை, வடமுனை வெலிக்கந்தை, மட்டு.

லெப். ஆறுமுகம் (சோதிநாதன் கஜேந்திரன்) மாதர் சங்க வீதி, சித்தங்கேணி. யாழ்.

லெப். தயாபரன் (கந்தசாமி தனேஸ்வரன்) வாழைச்சேனை வீதி, கற்குடா, மாக்கற் வீதி, மட்டு.

லெப். வரோதயன் (பூபாலசிங்கம் சுதாகரன்) 6ம் வட்டாரம், கல்முனை, நற்பிட்டி முனை, அம்பாறை.

லெப். விந்தன் (தெய்வேந்திரம் ஞானசபேசன்) திருவையாறு, கிளிநொச்சி.

லெப். நெடுங்கீரன் (பரமகுரு சந்திரசேகரன்) 17ம் கட்டை, வாழைத்தோட்டம், நெடுங்கேணி, மணலாறு.

லெப். வித்தியான் (தியாகராஜா சிறிதரன்) பார் வீதி மட்டக்களப்பு.

லெப். கார்மேகன் (சீனிப்பிள்ளை செல்வராஜா) சந்திவெளி, மொறக்கொட்டாஞ்சேனை.

லெப். வெற்றிமணி / ஜெனோ (நடராசா வசந்தமாலா) பாடசாலை வீதி, இருபாலை கிழக்கு, யாழ்.

லெப். ஈழவேணி (கறுப்பண்ணாசாமி சித்திரவள்ளி) கணேசபுரம், வவுனியா.

லெப். மலரோன் (அருமைநாயகன் முரளீதரன்) வீரமாணிக்கதேவன்துறை, மயிலிட்டி. த. மு: கோப்பாய் வீதி, உரும்பிராய் கிழக்கு.

லெப். இளங்குயில் / ஜமுதா (காத்தலிங்கம் விஜயலட்சுமி) சிறீமுருகன் குடியேற்றத்திட்டம், வல்வெட்டித்துறை.

லெப். பூமகள் / விஜயா (செல்லையா உதயராணி ) புங்குடுதீவு. த. மு: சிறீதரன் வீதி, பிரப்படி லேன், கொக்குவில்.

லெப். செல்வமலர் /பிருதுவி (இரத்தினசிங்கம் பரணி) முல்லைத்தீவு, மணற்குடியிரப்பு.

லெப். மலர்விழி / ஜானு (துரைராஜா வனிதா) பருத்தித்துறை. த. மு: படித்த மகளிர் குடியேற்றத்திட்டம், மிருசுவில்.

லெப். சூரியா / சிந்துஜா (வேலுப்பிள்ளை ஜெயலட்சுமி) மாதகல் கிழக்கு. த. மு: நெடுங்கேணி, 2ம் கட்டை.

லெப். கலையரசி / முகேசா (காளியப்பு தங்கேஸ்வரி) கோபாலபுரம், நிலாவெளி, திருமலை.

லெப். மகிழினி (அருள்வாசகம் சகாயபாமா) சபஸ்ரியான் கோவிலடி, முதலாம் ஒழுங்கை, மன்னார்.

லெப். துளசிரமணி (சின்னமணி தாமரைச்செல்வி) பருத்தித்துறை. த. மு: டி-3, கிளிநொச்சி.

லெப். சின்னையா /வீமன் (பொன்னையா மோகானந்தம் ) மண்டூர், பாலமுனை, மட்டு.

லெப். அப்பன் (தணிகாசலம் நாகசுந்தரம்) சுழிபுரம், திருவடிநிலை, யாழ்.

லெப். பிறையாளன் (செபஸ்ரியாம்பிள்ளை மரியதாஸ் புவனேந்திரன் ) இல. 170/2, அரியாலை, யாழ்.

லெப். கலைஞன் /ரகீம் (சுப்பிரமணியம் சத்தியசீலன்) 6ம் வட்டாரம், அன்னை வேளாங்கண்ணி வீதி, மயிலிட்டி.

லெப். அன்பனார் (அலபோன்ஸ் செல்வநாயகம்) நெடுந்தீவு மத்தி. த. மு: கச்சாய் வீதி, சாவகச்சேரி.

லெப். எஸ். கற்பகன் (நடனசிகாமணி சீராளன்) இன்பருட்டி, அல்வாய் வடக்கு, பருத்தித்துறை.

லெப். கவியரசன் (இராசதுரை குகேந்திரன் (அச்செழு, நீர்வேலி)

லெப்., பாபு (வினாசித்தம்பி பாஸ்கரராசா) முள்ளி வாய்க்கால் கிழக்கு, முல்லைத்தீவு.

லெப். மறவன் (அந்தோனிப்பிள்ளை லூட்ரென்சன்) கேராணிவத்தை, நீர்வேலி வடக்கு.

லெப். சுடரோளி / சிம்மன் (ஜீவரட்ணம் ஜெகதீபன்) தாளையடி வடக்கு.

லெப். குகேந்திரன் / குயின்ரஸ் (அருச்சுனன் கணேஸ்குமார்) தாமரைக்குளம், அடம்பன்.

லெப். பொருப்பன் / காண்டீபன் (இளையதம்பி பாஸ்கரதாஸ்) சாம்பல் தீவு, திருமலை. த. மு: ரேமன் தோட்டம், பளை.

லெப். அசோகன். (பாஸ்கரன் தனபாலன்) குருமண்வெளி, இல. 30, முதலாம் வட்டாரம், திக்கோடை, மட்டு.

லெப். கமலநேசன் (கணபதிப்பிள்ளை முருகேஸ்) கோவில் வீதி, வீரமுனை, சம்மாந்துறை.

லெப். அருள்சந்திரன் (கணபதிப்பிள்ளை சின்னத்துரை) துறைநீலாவணை (யானை கட்டியவெளி) மண்டூர்.

லெப். அரசழகன் ( வீரசிங்கம் மனோலிங்கம் ) மகிழடித்தீவு, 4ம் வட்டாரம், கொக்கடிச்சோலை.

லெப். அன்புமணி / லைலா (கேதீஸ்வரி நாகரத்தினம்) கருவேப்பம் குளம், சாஸ்திரி கூழாங்குளம், வவுனியா.

லெப். நாமகள் (இராசா வினோதினி தேவி) பொய்ட்டி, ஊரெழு கிழக்கு, நீர்வேலி.

லெப். நவமணி / கொன்சலா (தனபாலசிங்கம் தனலட்சுமி) நாகர் கோவில் வடக்கு, நாகர் கோயில்.

லெப். அன்பழகன் (சோமகாந்தன் சிவகுமார்) மணல்வதி, களுவாஞ்சிக்குடி.

லெப். கலையரசன் (வேலாயுதபிள்ளை மாலதன்) மீசாலை வடக்கு, புத்தூர் சந்தி, கொடிகாமம்.

லெப். கண்ணன் / தினேஸ் (தில்லையம்பலம் தர்மலோகன்) 354/9, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.

லெப். தூயவள் (செல்லைத்துரை தவராணி) 2ம் யூனிட், வவுனிக்குளம், மல்லாவி, கிளிநொச்சி.

2ம் லெப். கலிங்கன் (விக்கிரமபாலன் ஜெயசிங்கன் ) கிரான், மட்டு.

2ம் லெப். அவதன் (சபாபதி ஜெயதீசன் ) 40 ம் கிராமம், திக்கோடை.

2ம் லெப். மோகனநாதன் காசிநாதன் (தவநேசன்) 4ம் வட்டாரம், களுவாஞ்சிக்குடி.

2ம் லெப். சந்திரவாசன் - சந்திரகாந்தன் (நடராசா ரவிச்சந்திரன்) நாவிதன் வெளி, 15ம் கிராமம், மட்டு.

2ம் லெப். அசோகலிங் கம் / எழில் வேந்தன் (சின்னத்தம்பி கிருபைராஜா) கரப்பளை, செவனப்பிட்டி, மன்னம்பிட்டி, மட்டு.

2ம் லெப். சுஜிதராஜ் / சுஜித் (சாமித்தம்பி ஜெகதீஸ்வரன்) கல்முனை, அம்பாறை

2ம் லெப். அன்பு / கருணா (சுப்பிரமணியம் வனிதகுரு) அம்பன், குடத்தனை.

2ம் லெப். செந்தில் (மகாலிங்கம் கோகிலன்) சண்டிலிப்பாய் வடக்கு.

2ம் லெப். குமணண் (எலியாஸ் ஸ்ரீபன் ஜெராட் குணசீலன்) கோயிற் குடியிருப்பு, சாவச்சேரி.

2ம் லெப். குலோத்துங்கன் / நடனகுமார் (நடராசா சதீஸ்குமார்) கற்பகப்பிள்ளையார் கோவில் வீதி, உரும்பிராய்.

2ம் லெப். மலையரசி (சீனித்தம்பி குமாரி) பன்குடாவெளி, தளவாய், மட்டு.

2ம் லெப். கருணா (கந்தையா தவராசா) ஈவினை, புன்னாலைக்கட்டுவன் .

2ம் லெப். சவுந்தரி (தம்பிராசா இந்துமதி) அக்கரைப்பற்று, த. மு: குளமங்கால், மல்லாகம் .

2ம் லெப். மறமகள் (ரங்கநாதன் மகேஸ்வரி) டிஸ்பென்சரி ஒழுங்கை, இணுவில் தெற்கு.

2ம் லெப். சுபாநந்தி (தர்மலிங்கம் சஜூந்தினி) தண்ணீரூற்று, முள்ளியவளை.

2ம் லெப். நளாயினி (அந்தோனிப்பிள்ளை கௌசலாதேவி) இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு.

2ம் லெப். அமலா / அமரா (சண்முகம் ஜெயா) நெல்லுக்குளம், மன்னார் வீதி, வவுனியா.

2ம் லெப். காண்டீபன் (சின்னப்பு ரதீஸ்வரன்) பாரதி வீதி, பத்தைமேனி, அச்சுவேலி.

2ம் லெப். சுமதி (கந்தையா சாந்தநாயகி) கிடாய்ச்சூரி, சாஸ்திரி கூளாங்குளம், வவுனியா.

2ம் லெப். விண்மீன் / திபிசா (அல்போன்ஸ் விமலா) மாரீசன் கூடல், இளவாலை. த. மு: கற்கோவளம் முகாம்.

2ம் லெப். பவளமொழி / சாரா (நடராசா யோகமலர்) 13ம் வட்டாரம் நெடுந்தீவு. த. மு: ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

2ம் லெப். தமிழ்வேங்கை. (சிங்கராசா காமலீற்றா) 9/6, மத்திய கிழக்கு வீதி, குருநகர்.

2ம் லெப். விடுதலை (பாலசிங்கம் மங்களசிறி) லீமா வீதி, இந்திரம்மன் கோவிலடி, துன்னாலை.

2ம் லெப். மெய்யப்பன் (யோகராசா சுரேஸ்குமார்) சுதுமலை வடக்கு, மானிப்பாய்

2ம் லெப். ஜெயமாறன் (காசிப்பிள்ளை சதீஸ்குமார்) தம்பிமுத்து வீதி, தம்பிலுவில் -2

2ம் லெப். இளையபாரதி (செல்லத்தங்கம் பாஸ்கரன்) மகிழவெட்டுவான், ஆயித்தியமலை.

2ம் லெப். வேலு (தங்கராசா லக்ஸ்மன்) 7ம் வட்டாரம், துறைநீலாவணை

2ம் லெப். மங்களேஸ்வரன் / செங்குட்டன் (ஆறுமுகம் சதாசிவம்) தியாவெட்டுவன் பாலத்தடி, வாழைச்சேனை.

2ம் லெப். கலைச்செல்வன் (சின்னத்துரை ரமேஸ்) தம்பிலுவில் -2

2ம் லெப். பாக்கிராஜா (கோபால பிள்ளை நித்தியராஜா) பண்டாரிய வெளி, கொக்கட்டிச்சோலை

2ம் லெப். தஞ்சைவாணண் / பிரசாத் (மரியைதூசைநாதர் றொபின் கனியூட்) மாதகல். த. மு: புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை.

2ம் லெப். தென்பாண்டியன் (ஆரோக்கியநாதன் கெனடித் அரியசீலன்) மணற்காடு, குடத்தனை.

2ம் லெப். ஈஸ்வரன் / மாயா (செல்வம் சந்திரசேகரம்) முறக்கொட்டாஞ்சேனை தேவபுரம்

2ம் லெப். இரத்தினம் (குமாரசாமி சிவசோதி) தனங்கிளப்பு, சாவகச்சேரி.

2ம் லெப். செந்தமிழ்ச்செல்வன் (கந்தையா கேதீஸ்வரன்) கீரிமலை.

2ம் லெப். தன்மதி (உலகநாதன் சிவாஜினி ) மருதங்கேணி வடக்கு, தாளையடி.

2ம் லெப். ஆராதனா (காராளசிங்கம் ரிஜிதா) அராலி வடக்கு ஆனைக்கோட்டை.

2ம் லெப். தூயவள் (முருகேசு புஸ்பராணி) கிளிநொச்சி. த. மு: பண்டிதர் குடியிருப்பு, கேடில்ஸ் நகர், கெற்பலி.

2ம் லெப். விமலேந்திரன் (கையால பிள்ளை சந்திரகுமார்) தீவுக்குடியிருப்பு, அம்பிலாந்துறை, குருக்கள் மடம்

2ம் லெப். சர்வதன் / தயாளன் (தம்புப்பிள்ளை நிமலநாதன்) 5ம் வட்டாரம், துறைநீலாவணை

2ம் லெப். பரிசுதன் (ஆறுமுகம் சந்திரசேகர்) கல்லடி, மட்டக்களப்பு. த. மு: அரியாலை, 5/1 வேலப்பா லேன்.

2ம் லெப். தனுசன் / நணிசன் (அருணாசலம் சின்னராசா) சித்தாண்டி, மிதிலங்கட்டு கொலணி, மட்டு.

2ம் லெப். ஈழப்பிரியா (நவரட்ணம் மதிவதனி) 84/1 கொழும்புத்துறை வீதி, யாழ்.

2ம் லெப். வில்வன் /வில்வம் (சிறீஸ்கந்தராசா பாலமுருகன்) வத்தளை, புலோலி தெற்கு.

2ம் லெப். சாம்பவி (தியாகலிங்கங்கம் சுசரிதா) கரவெட்டி மேற்கு. த. மு: மார்ட்டின் வீதி, யாழ்.

2ம் லெப். இசைத்தமிழ் (தனபாலசிங்கம் தமிழ்ச்செல்வன் ) மடுக்குளம், பூவரசங்குளம், வவுனியா.

2ம் லெப். சின்னமணி /விவே (இராமலிங்கம் தமிவாணன் ) பரமன் ஒழுங்கை ஆரையம்பதி, மட்டு.

2ம் லெப். ஏழுமலை (சதாசிவம் சிவாகரன்) காரைநகர். த. மு: சுழிபுரம்.

2ம் லெப். விவேகன் (பாலசுப்பிரமணியம் பாலசொருபன்) கோப்பாய் வடக்கு.

வீரவேங்கை. அந்தகரன் /ரவீந்திரன் (சிதம்பரப்பிள்ளை யோகன்) 8ம் கட்டை, உன்னிச்சை.

வீரவேங்கை. தீவேந்தன் (ஆனந்தராசா புஸ்பராசா) புல்லுமலை, மட்டு.

வீரவேங்கை. தயாளராஜ் (தியாகராஜா புவனேந்திரன்) களுவாக்கேணி, வாழைச்சேனை.

வீரவேங்கை. இளங்கதிர் /வினோத் (செல்வரட்ணம் சுரேஸ்) வாச்சிக்குடா, அக்கரைப்பற்று.

வீரவேங்கை. அருணாமணி (சிவானந்தம் சந்திரகுமார்) களுதாவளை, மட்டு.

வீரவேங்கை ஈஸ்வரி (நடேஸ் லிங்கேஸ்வரி) காரைநகர். த. மு: தொல்புரம், கூராசி அம்மன் கோவிலடி, சுழிபுரம்.

வீரவேங்கை குயிலன் (பாலச்சந்திரன் பாஸ்கரன்) 3ம் வட்டாரம், வீரச்சோலை, குச்சவெளி, திருமலை.

வீரவேங்கை இன்பன் (தம்பிராசா மங்களேஸ்வரன்) உச்சியோடை வடக்கு, மானிப்பாய்.

வீரவேங்கை மதிமாறன் (பழனி ராசலிங்கம்) கண்டி. த. மு: புதுக்குடியிருப்பு, முல்லைத் தீவு.

வீரவேங்கை வெற்றிச் செல்வன் / கந்தன் (முருகேசு சண்முகநாதன்) முனைக்காடு, கொக்கட்டிச்சோலை.

வீரவேங்கை செங்கனல் ( வேலுப்பிள்ளை ராஜேஸ்வரன்) அல்வாய் வடக்கு, அல்வாய்.

வீரவேங்கை திலகன் (மிக்கேல் யேசுதாசன்) மெலிஞ்சுமுனை (தீவு) த. மு: பண்டிதர் குடியிருப்பு, கிளாலி.

வீரவேங்கை இளவரசன் (பேரின்பநாயகம் ரஞ்சிதராஜ்) கனகரட்ணம் வீதி, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.

வீரவேங்கை வாய்மையன் / அரிந்திரன் (பொன்னையா வீரசேகர்) தோற்றாத்தீவு -2, களுவாஞ்சிக்குடி.

வீரவேங்கை இளவழுதி (துரைராசா இலங்கேஸ்வரன்) 14ம் கட்டை, குவாரிச் சந்தி. முல்லைத்தீவு.

வீரவேங்கை போர்முகம் (நாகராஜா தர்மலிங்கம்) தபசிகுளம், கொடிகாமம்.

வீரவேங்கை பதி (சிவலிங்கம் பிரேமகுமார்) இருதயபுரம் மேற்கு, 8ம் குறுக்கு, மட்டு.

வீரவேங்கை தணிகைநம்பி (கந்தசாமி விக்னேஸ்வரன்) 3ம் வாய்க்கால், கிளிநொச்சி.

வீரவேங்கை இனியவன் (பாலரட்ணம் உமாச்சந்திரன்) சாத்திரியார் ஒழுங்கை, அரியாலை

வீரவேங்கை மாதுரி (பெர்னாண்டோ மரியகொறற்றி) கட்டைக்காடு. த. மு: செம்பியன்பற்று அகதிமுகாம், யாழ்.

வீரவேங்கை இந்திரா (ராஜேஸ்வரன் திலகேஸ்வரி) கொழுத்திமடு, கரடியனாறு, மட்டு.

வீரவேங்கை காரிகை (மருதப்பிள்ளை அஞ்சவாதேவி) மாறாஇலுப்பைக்குளம், வவுனியா

வீரவேங்கை வஞ்சி (கணபதிப்பிள்ளை விஜயகலா) வாகரை, மட்டு.

வீரவேங்கை மயூரி (சிதம்பரநாதன் தபோதினி) கல்லடி, டச் பாலம், மட்டு.

வீரவேங்கை சுகிர்தா (கந்தசாமி பேரின்பமலர்) சந்தி வெளி, மொறக்கொட்டாஞ்சேனை, மட்டு.

வீரவேங்கை விடுதலை /குணம் (தங்கவேல் சுசிலா) பேராளை, பளை

வீரவேங்கை சிவசக்தி (கிட்ணசாமி விசாலாச்சி) மாத்தளை. த. முகவரி: பாரதிபுரம் விசுவமடு.

வீரவேங்கை மது (சூசைப்பிள்ளை லலினி) நானாட்டான், மன்னார்.

வீரவேங்கை. பத்மசுகி (சிவபாதம் சிவாஜினி) 1ம் வட்டாரம் புங்குடுதீவு. த. மு: 391, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி.

வீரவேங்கை மகாதேவி / சாரதா (இராமநாதன் நிருபா) மல்லாகம், யாழ்.

வீரவேங்கை பிரேம்குமார். (பரமுகுட்டி கருணா) ஆரையம்பதி -3, காத்தான்குடி.

வீரவேங்கை ஈழமூர்த்தி / ஈழவன் (பொன்னுச்சாமி ஜெயசீலன்) கரவெட்டி, நாவற்காடு, மட்டு.

வீரவேங்கை யசோ / மாறன் (தங்கவேல் சின்னவன் ) புல்லுமலை, கித்துள், உறுகாமம்.

வீரவேங்கை விமலதாஸ் / விமலராஜ் (சிவப்பிரகாசம் மிரசுதாசன்) 7ம் வட்டாரம், முனைக்காடு, கொக்கட்டிச்சோலை.

வீரவேங்கை குருகுலசிங்கம் (பொன்னுத்துரை சகாயநாதன்) மாமன்கடை, மட்டு

வீரவேங்கை சுபாங்கி (சின்னத்தம்பி பிரியா) 3ம் குறிச்சி, ஆரையம்பதி, மட்டு.

வீரவேங்கை கலைமதி (சுந்தரம்பிள்ளை ரஞ்சனி) கற்கடந்த குளம், நானாட்டான், மன்னார்.

வீரவேங்கை சுவாணன் (கணபதிப்பிள்ளை கருணாமூர்த்தி) நாவற்குழி, கைதடி. த. மு: கற்பெலி வைரவர் கோவில் லேன், யாழ்.

வீரவேங்கை அகிலேசன் / கண்ணதாசன் (சிவஞானம் விநாயகமூர்த்தி ) 40 ம் கிராமம், மட்டு.

வீரவேங்கை பாவரசன் (புவிநாயகம் பார்த்தீபன்) கண்டி வீதி, களுதாவளை -1, களுவாஞ்சிக்குடி.

வீரவேங்கை கயலதாஸ் / கயிலன் (மாசிலாமணி சிவபாதம்) திருப்பளுகாமம், 2ம் குறிச்சி, வீரஞ்சேனை, பெரிய போரைத்தீவு.

வீரவேங்கை கருவிழி (செபஸ்ரியாம்பிள்ளை நகுலேஸ்வரி) பூவரசம்குளம், வவுனியா.

வீரவேங்கை கீர்த்தனா (ராமு கமலா) நாவற்காடு, கரவெட்டி, மட்டு.

வீரவேங்கை லச்சுமி (புதியகுட்டி தேவிகா) புத்தூர் கிழக்கு, புத்தூர்.

வீரவேங்கை தமையந்தி (செபாஸ்ரியான் பிள்ளை ஜெயந்தி) பனிக்க நீராவி புளியங்குளம், வவுனியா.

வீரவேங்கை குவேனி (வேலுப்பிள்ளை சிறீரஞ்சனி) விநாயகபுரம், கிளிநொச்சி.

வீரவேங்கை யசோ (தங்கமயில் சுகிர்தா) சந்தைவீதி, உடுப்பிட்டி.

வீரவேங்கை பல்லவி (சுந்தரம் ஜெயநந்தினி) அராலி தெற்கு, அராலி.

வீரவேங்கை தென்மொழியன் (செல்லத்துரை அசோக்குமார்) கிளிநொச்சி. த. மு: மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

வீரவேங்கை இளங்கீரன் (பாலசிங்கம் முரளிகிருஸ்ணன்) ராஜன் வீதி, தாவடி தெற்கு.

வீரவேங்கை விடுதலை (நாகமுத்து சகிவதனா) மோகன் வதி, நீர்வேலி.

வீரவேங்கை அன்புவிழி (பென்சமின் பிரியதர்சினி) 143, ஜெயந்தி நகர், கிளிநொச்சி.

வீரவேங்கை மாதங்கி (தேவசகாயம் நிரோஜினி) 7ம் வட்டாரம், குமுழமுனை, முள்ளியவளை.

வீரவேங்கை கண்மணி (சந்திரராசா கமலாம்பிகை) சேனைப்புலவு, நெடுங்கேணி.

வீரவேங்கை பொய்கை (பரமநாதன் ஜானகி) குருநாகல். த. மு: நாச்சிக்குடா, விசுவமடு மேற்கு.

வீரவேங்கை தாரணி (குமார் கௌரி) பழுகாமம், முருங்கன், மன்னார்

வீரவேங்கை ஈழரஞ்சன் (நடராசா இரத்தினசிங்கம்) ஒட்டுவெளி, மிருசுவில்.

வீரவேங்கை அண்ணல் (சின்னவன் ரூபன்) சுழிபுரம். த. ம: கோப்பாய்.

வீரவேங்கை முருகவேல் (நாகேந்திரம் பிரபாகான்) ஆவரங்கால், புத்தூர்.

வீரவேங்கை கீரன் (நாகராசா சுகுந்தன்) கள்ளப்பாடு, முல்லைத்தீவு. த. மு: அம்பலன் பொக்கணை.

வீரவேங்கை செல்லக்கிளி (முத்துலிங்கம் சதீஸ்வரன்) கதிரிப்பாய், அச்சுவேலி. (சுந்தையடி)

வீரவேங்கை நெடுஞ்செழியன் (தாமோதரம்பிள்ளை குலரட்ணம்) சுண்ணாகம் தெற்கு, சுண்ணாகம்.

வீரவேங்கை பொற்கொடி (செல்வநாயகம் விஜயலட்சுமி) தனங்கிளப்பு, சாவகச்சேரி.

வீரவேங்கை பற்குணம் (முத்துக்கிருஸ்ணன் கிருஸ்ணகுமார்) பாண்டிருப்பு -1, கல்முனை.

வீரவேங்கை சுதாகரன் (வேலுப்பிள்ளை நடேசன் ( 5ம் வட்டாரம் வாகரை.

வீரவேங்கை செந்தமிழரசி / சிவராசா (தர்மலிங்கம் சுரேஸ்காந்தன்) குச்சவெளி, திருமலை. த. மு: நாவற்குழி, யாழ்.

வீரவேங்கை மருதவாணன் / சரவணன் (இராமசாமி சுந்தரராஜன்) பன்குளம். த. மு: 39/38 சிவன் வீதி, திருமலை.

வீரவேங்கை மளவன் / நிசாந்தன் (சாந்தலிங்கம் உதயச்சந்திரன்) கங்குவேலி, கிளிவெட்டி, மூதூர்.

வீரவேங்கை குருபரன் (வேலுப்பிள்ளை ராஜகுலசிங்கம்) வன்னேரிக்குளம், கிளிநொச்சி.

வீரவேங்கை குமணன் (கோபாலசாமி சிறீகணேசன்) அம்பாள் குளம், கிளிநொச்சி.

வீரவேங்கை வாசன் (கதிரவேலு மோகனராசா) கச்சன்குளம், வவுனியா

வீரவேங்கை கருணா (குமாரசாமி புவனகுமார்) நெடுந்தீவு. த. மு: ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

வீரவேங்கை செல்லையா / லோகேஸ் (கிருஸ்ணசாமி மோகன்) இரணை இலுப்பைக்குளம், வவுனியா.

வீரவேங்கை அசோக் (முத்து பிரான்சிஸ் தேவா) உடையார் கட்டு, முல்லைத்தீவு.

வீரவேங்கை விவேகானந்தன் (குமாரவேலு ரட்ணராசா) வன்னேரிக்குளம், கிளிநொச்சி.

வீரவேங்கை தயாளன் (செல்லத்துரை சிவகுமார்) பூவரசங்குளம், வவுனியா. த. மு; மடு அகதி முகாம்.

வீரவேங்கை செந்தில்நாதன் / செந்தில் (சிவக்கொழுந்து சிவரூபன்) 2ம் யூனிட், முரசுமோட்டை, பரந்தன்.

வீரவேங்கை பழனிவேலன் (சங்கரப்பிள்ளை பஞ்சேந்தரன்) வேலணை வடக்கு, வேலணை. த. மு; ஐந்து சந்தி மானிப்பாய் வீதி, யாழ்.

வீரவேங்கை ரசநாதன் (தம்பிமுத்து சித்திரவேல்) முதலாம் குறிச்சி, காரைதீவு.

வீரவேங்கை நிரோஜன் / துஸ்யந்தன் (சச்சுதானந்தம் கஜேந்திரன்) வாழைச்சேனை வீதி, கற்குடா.

வீரவேங்கை பிரியதர்சன் (பூபாலபிள்ளை மோகன்) சாரதா தியேட்டர் வீதி, அக்கரைப்பற்று, 8ம் குறிச்சி.

வீரவேங்கை தேவாரம் (தேவராசா நேமிநாதன் ) களுவுந்தன் வெளி, குருக்கள் மடம்.

வீரவேங்கை பரணி (கணேசமூர்த்தி உதயச்சந்திரன்) பெரிய ஊறணி, முதலாம் குறிச்சி.

வீரவேங்கை சுதா / பத்தினியன் (நடராஜா தருமக்கொடி) ஆலைடி வேம்பு, அக்கரைப்பற்று.

வீரவேங்கை ஐங்கரன் (கனகசபை புஸ்பராசா) சின்னமார்க்கட் வீதி, முதலாம் குறிச்சி, தம்பிலுவில்.

வீரவேங்கை சந்திமாவி (சோமசுந்தரம் கோபாலகிருஸ்ணன்) துறைநீலாவணை, சின்னவத்தை, வைக்கியவில்லை.

வீரவேங்கை சிறீகாந்தன் (கணபதிப்பிள்ளை சிறீதரன்) பெரிய புளியங்குளம், மாங்குளம்.

வீரவேங்கை மூர்த்தி (கனகலிங்கம் தெய்வேந்திரன் ) கோவில்குஞ்சுக்குளம், பாலமோட்டை, ஓமந்தை.

வீரவேங்கை மிதுலன் (சின்னத்தம்பி மதியழகன்) 611, ஐந்தாம் யூனிட், ராமநாத புரம், வட்டக்கச்சி, கிளிநொச்சி.

வீரவேங்கை அழகன் (மருசால் கிறிஸ்ரின்) பெரிய கோமரசன் குளம், வவுனியா,

வீரவேங்கை அருட்சந்திரன் (இராமையா சதாசிவம்) கண்டி. த. மு: கண்டாவளை, கிளிநொச்சி.

வீரவேங்கை ஈழயோகன் (இராசத்திரன் குககுமார்) 10 டி, எள்ளுக்காடு , உருத்திரபுரம், கிளிநொச்சி.

வீரவேங்கை தேவராசா (ராஜேந்திரன் உதயகுமார்) திருநகர், கிளிநொச்சி

வீரவேங்கை ஜெயகநாதன் (பெருமாள் சுந்தரலிங்கம்) மன்னார் வீதி, சாளம்பைக்குளம், நெட்டாங்கட்டை, வவுனியா.

வீரவேங்கை அன்புமணி / சுணில் (செல்லையா லால்ஜெயக்கொடி) குருநாகல். த. மு: 796 விநாயகர் வீதி, துணுக்காய் மல்லாவி வீதி, கிளிநொச்சி.

வீரவேங்கை ஊரான் / நிக்சன் (பாலசுந்தாம் பிரபாகரன்) சாஸ்திரி கூழாங்குளம், வவுனியா.

வீரவேங்கை சிவபாதம் (வீரையா யோகேஸ்வரன்) குண்டசாலை, கண்டி. த. மு: நாகராசா வீதி, புதிய கொலனி, மாங்குளம்.

வீரவேங்கை பாக்கியம் (குமார் இராசரத்தினம்) 6ம் படிவம், தர்மபுரம், கிளிநொச்சி.

வீரவேங்கை உதயச்சந்திரன் (கணபதிப்பிள்ளை தவனேசன்) பெரியமடு, பனிக்க நீராவி ஸ்ரேசன், புளியங்குளம், வவுனியா.

வீரவேங்கை புனிவளன் (பாலராசா ஜீவகுமார்) இரண்டாம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

வீரவேங்கை யசோக கணேஸ் (மணியம் சிவகணேசமூர்த்தி) திருமலை. த. மு: காக்கையன் குளம் வவுனியா.

வீரவேங்கை வள்ளுவன் / நியூ (நடராசா தனபாலசிங்கம்) நெடுந்தீவு. த. மு: வவுனிக்குளம் கிளிநொச்சி.

வீரவேங்கை பிரதீபன் (ஐயம்பிள்ளை ஆறுமுகம்) செட்டிக்குளம். த. மு: சுதந்திர புரம், உடையார்கட்டு, கிளிநொச்சி.

வீரவேங்கை பிறைசூடி / மதீஸ் (சுப்பரமணியம் சுபேந்திரன்) காந்திக்கிராமம், கோணாவில், கிளிநோச்சி.

வீரவேங்கை நிரஞ்சன் / நில்கான் (நன்னித்தம்பி காந்தரூபன்) த. மு; 4/3 திருவையாறு சித்தார்த்தன் வீதி, முதலாம் பகுதி, கிளிநொச்சி

வீரவேங்கை சௌந்தலன் (கண்ணமுத்து தயாபரன்) நடுக்குடியிருப்பு, பழநிச்சங்கேணி

வீரவேங்கை சிற்றம்பலம் (வெற்றிவேல் இராஜேந்திரன்) பெரிய கல்லாறு, மட்டு.

வீரவேங்கை கோணேஸ் (யோஜப்ராசா வில்பட்டன் வோல்) தேவாலய வீதி, நாவற்குடா, மட்டு.

வீரவேங்கை வழுதி (செந்தில்வடிவேல் லிங்கேஸ்வரன்) திரியாய், திருமலை த. மு; வற்றாப்பளை, கெற்பனிப்புலவு, -ந்தமன் குடியேறத்திட்டம், முல்லைத்தீவு

வீரவேங்கை ரமேஸ்குமார் (தேவசகாயம்பிள்ளை மரியதாஸ்) வெற்றிலைக்கேணி. த. மு: நயினா முனை அகதி முகாம், செம்பியன்பற்று, யாழ்.

வீரவேங்கை தயாளந்தன் (ஜெயமாலை தோமாஸ்) 15ம் கட்டை, சேர்ச்சடி, கிளிநொச்சி

வீரவேங்கை இரகுநாதன் (இலட்சுமணன் முருகையா) 7, அக்கராயன்குளம், கிளிநொச்சி.

வீரவேங்கை மன்மகன் (பொன்னுத்துரை வசந்தகுமார்) அச்சுவேலி. த. மு: முதலாம் யூனிட், மல்லாவி, கிளிநொச்சி.

வீரவேங்கை விஸ்வநாதன் / கோகிலன் (முருங்கன் கனகராசா). மானுருவி, ஒட்டிசுட்டான்.

வீரவேங்கை இமயன் /மிரேஸ் (முத்துராசா கந்தசாமி) த. மு: தட்டாமலை, ஒட்டிசுட்டான்.

வீரவேங்கை இந்திரன் (முத்துசாமி சுபிர்குமார்) கண்டி. த. மு: கண்டி வீதி, கிளிநொச்சி.

## 12. 11. 1993 இல் வீரச்சாவு

**லெப். கேணல் அன்பு**
(பொன்னம்பலம் சரவணபவான்)
கௌதாரிமுனை, பூநகரி. த. மு: கந்தையா லேன், சாவகச்சேரி.

**லெப். கேணல் கோதை / பாமா**
(சியாமளா சண்முகசுந்தரம்)
இன்பருட்டி, அல்வாய்.

**கடற்கரும்புலி மேஜர் குமணன் / கோபி**
(சுப்பிரமணியம் செல்வலிங்கம்)
இல. 104, ஜெயபுரம், பல்லவராயன் கட்டு, மன்னார்.

மேஜர் ஈழவன்
(குழந்தைவேல் பத்மநாதன்)
விஸ்ணு ஆலய வீதி, கிரான்.

மேஜர் பிரகாஸ்
(பரமநாதன் அருள்நாதன்) இல. 22, இரண்டாம் யூனிட், வவுனிக்குளம்.

மேஜர் குமரவேல் / குமரேஸ்
(மைக்கல் அன்ரனி)
அனலைதீவு.
த. மு: ஈச்சமோட்டை,
43 A, கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

மேஜர் இளஞ்செழியன் / அலெக்ஸ்
(செல்லத்துரை பிரதீபராஜன்)
தும்பன் வீதி, பருத்தித்துறை.

மேஜர் ரூபன்
(குமாரசாமி சபாரெத்தினம்)
பிள்ளையார் கோவில் வீதி, கிரான்,
மட்டக்களப்பு.

மேஜர் புவிராஜ்
(இராமசாமி உதயகுமார்)
புதுமண்டபத்தடி, கன்னன்குடா,
மட்டக்களப்பு.

மேஜர் மகேஸ்வரமூர்த்தி/மகேஸ்வரன்
(ஞானசுந்தரம் விஜயகுமார்)
செருவில், மன்னம்பிட்டி,
மட்டக்களப்பு.

கப்டன் பரனீதன்
(சிவலிங்கம் புஸ்பராஜ்)
சங்கர் மில் வீதி, வந்தாறுமூலை.

கப்டன் திலகர்
(இராமநாதன் வித்தியானந்தன்)
திருகோணமலை.
த. மு: இல. 164, வட்டக்கச்சி,
கிளிநொச்சி.

கப்டன் தம்பா
(கனகரத்தினம் மதிவதனா)
மதினா நகர்,
இரணை இலுப்பைக்குளம், வவுனியா.

கப்டன் செழியன் / நெல்சன்
(வடிவேலு சிறீதரன்)
ஆரியம்பொந்து, பூநகரி.

கப்டன் கவி
(யக்கோபு சேகரன்)
உயிர்த்தராசன் குளம், மன்னார்.
த. மு: மடு வீதி, மடு, மன்னார்.

கப்டன் குகநாதன்
(பொன்னுச்சாமி விசுவநாதன்)
தலைமன்னார் பியர்
(இந்தியா)

கப்டன் கோமான்
(சொலமன் யோகேந்திரன்)
அநுராதபுரம்.
த. மு: மடுத்தேவாலயம்,
பண்டிவிரிச்சான்.

கப்டன் ஈழவாசன்
(கதிரமலை ஜெயபாலசிங்கம்)
கைதடிச் சந்தி, கைதடி.

கப்டன் புதியவன்
(பெரியசாமி வடிவேல்)
பாந்தன் வீதி, தர்மபுரம்,
1 ஆம் யூனிட், கிளிநொச்சி.

கப்டன் பவனீதன்
(சிவலிங்கம் இளங்கோவன்)
சொறுவில், மன்னம்பிட்டி.

கப்டன் அழகுராஜா
(செல்லப்பிள்ளை மனோகரன்)
உப்போடை வீதி, வந்தாறுமூலை.

கப்டன் கமலேசன் / ஜராட்
(கமலநாதன் சுதாகரன்)
கோயில் போரதீவு,
பெரிய போரதீவு.

லெப். தவக்குமார்
(கேதாரப்பிள்ளை விஜயகுமார்)
கன்னன்குடா, கொத்தியாவலை.

லெப். வேந்தன்
(இரேநியாஸ் அமலநாதன்)
யாழ்ப்பாணம்.
த. மு: இல. 248, கண்டி வீதி,
கிளிநொச்சி.

லெப். பாவாணன் / கவி
(வேலு சங்கர்)
பிரதான வீதி, செட்டி குளம்,
வவுனியா.

***தொடர்ச்சி 10ம் பக்கம் ....***

**எங்கள் இதயங்களில்**

தாயக மண்ணில்
தடம் பதிக்க வந்த எதிரிகளைத்
தகர்த்தெறிந்தீர்!
மலையென எதிரி இருந்த போதும்
மனவலிமை கொண்டு
நிமிர்ந்து நின்றீர்
மண் காத்த மறவர்களே
மானத்தோடெழுந்து எம்
மண்ணுக்கு உரமானீர் !
புதியபரணி ஒன்று
உமக்காக இசைக்கிறோம்
உங்கள் நினைவும் கனவும்
எங்கள் இதயங்களில்!

# வரலாறு படைத்த பூநகரி முகாம் தகர்ப்பு: வீரச்சாவடைந்த வேங்கைகள்

லெப். வேந்தன்
(சுப்பையா பேரின்பமூர்த்தி)
மந்துவில் மேற்கு, கொடிகாமம்.

லெப். கனியன்
(ஆரோக்கியநாதன் சில்வன்சுஜீவன்)
இல. 32/5, அச்சக வீதி,
சுண்டுக்குளி.

லெப். வசந்தகுமார்
(தம்பிப்பிள்ளை விநாயகமூர்த்தி)
37 ஆம் கிராமம்,
பாலையடிவெட்டை,
சளாவடி, மட்டக்களப்பு.

லெப். வாகீசன்
(தையல்பாபு செல்வகுமார்)
கொக்குத்தொடுவாய்.
த. மு: பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

லெப். தமிழினி
(கந்தசாமி ஜெசிந்தா)
ஒலுமடு, மாங்குளம்.

லெப். குணரட்ணம்
(தங்கராசா ஜெயசிங்கம்)
கதிரிப்பாய், அச்சுவேலி.
த. மு: ஆனந்தம் வைரவர் கோயிலடி,
மானிப்பாய்.

லெப். நாச்சியப்பன்
(சந்திரசேகரம் சுரேஸ்)
தாவடி தெற்கு, கொக்குவில்.

லெப். இராசவேல் / விவே
(நொஞ்சிப்பொடி அன்னசேகரம்)
மகிழுர், மட்டக்களப்பு.

லெப். மிதுனன்
(திருநாவுக்கரசு மகேஸ்வரன்)
பழம்பாசி, நெடுங்கேணி,
முல்லைத்தீவு.

லெப். சித்தார்த்தன்
(வெள்ளைக்குட்டி சுந்தரலிங்கம்)
சேனைக்குடியிருப்பு,
2 ஆம் வட்டாரம், கல்முனை.

லெப். ஈஸ்வரன்
(கந்தசாமி சிவராசா)
கல்மடு, 2 ஆம் யூனிட், வவுனியா.

லெப். மகாதேவா / பரின்ஸ்
(ஆறுமுகம் பிரகலாதன்)
கிண்ணையடி, வாழைச்சேனை.

லெப். உதயன்
(பரஞ்சோதி பகீரதன்)
3 ஆம் வட்டாரம், முள்ளியவளை,
முல்லைத்தீவு.

லெப். எழிலரசன் / மோகன்
(சின்னத்தம்பி சந்திரசேகரம்)
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

லெப். ஜேசுதாசன் / ரஞ்சன்
(சேம்ராஜ் நவநீதராஜ்)
கண்டி.
த. மு: பரநாட்டன்கல், ஓமந்தை.

லெப். இளமுருகன் / தீபன்
(தேவதாஸ் ஜெயதாஸ்)
2 ஆம் குறுக்குத்தெரு பாசையூர்,
யாழ்ப்பாணம்.

லெப். சமுத்திரன்
(சந்திரசேகரம்பிள்ளை குமார்)
இணுவில் கிழக்கு, இணுவில்.

லெப். நித்தியீஸ்வரன் / ராஜன்
(நவரத்தினம் மனோகரன்) நாவற்காடு,
மட்டு.

லெப். பௌத்திரன்
(ஜெகநாதன் லவக்குமார்)
பெரியபோரை தீவு, முனைத்தீவு.

லெப்.. புகழேந்தி
(பொன்னுத்துரை ரவிச்சந்திரன்)
மண்டூர், மட்டு.
த. மு: கல்வியங்காடு, யாழ்.

லெப். கலாதேவன் /பார்த்தீபன்
(கணபதிப்பிள்ளை தேவநாயகம்)
முனைக்காடு , கொக்கட்டிச்சோலை.

லெப். துசான் (தேவராசா பாக்கியராஜா)
விநாயகபுரம் திருக்கோயில்.

லெப். ஜீவன் (சத்துருக்கன்
அமிர்தலிங்கம்) தம்பிலுவில்,
2ம் குறிச்சி, மட்டு.

2ம் லெப். சொருபராஜன் (அழகிப்போடி
கோபாலப்பிள்ளை)
மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை

2ம் லெப். சிலம்பரசன்
(வேலுப்பிள்ளை சிவராசா) சந்திவெளி,
முறக்கொட்டாஞ்சேனை

2ம்லெப். அற்புதன் (கோவிந்தசாமி
செல்லத்துரை) தேவிபுரம் சந்தி,
புதுக்குடியிருப்பு.

2ம் லெப். உதயவர்ணன் (சோமசுந்தரம்
இந்திரன்) தென்னமரவாடி,
த. மு: பொன் நகர், முள்ளியவளை

2ம் லெப். வைகுந்தன் (தம்பித்துரை மோகனதாஸ்) உடுவில் மேற்கு,
புதுமடம் மானிப்பாய்.

2ம் லெப். தமிழன் (நடராசா தர்மகுல சிங்கம்) காங்கேசன்துறை.
த. மு:இணுவில் கந்தசாமி கோவிலடி,
வல்லவன் வீதி.

2ம் லெப். மாமூலன் / லெனின் (ஜெய பாலசிங்கம் தங்கநாயகன்)
இரணைக்கேணி, குச்சவெளி,
திருமலை.
த. மு: புதுக்காட்டுச் சந்தி, பளை.

2ம் லெப். மணிமாறன் (தம்பிராஜா ரகுலதரன்) கருகம்பனை, கீரிமலை.
த. மு: மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு.

2ம் லெப். கோதை / மதினா
(பாலசிங்கம் கௌரி)
பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்.

2ம் லெப். புவனேஸ்வரி
(கனகசபை நாகேஸ்வரி) 4ம் வார்ட்,
வேலணை கிழக்கு

2ம் லெப். தூயவன்
(கந்தசாமி ஜெயரூபன்) குப்பிளான்.
த. மு: புகையிரத நிலையத்தடி,
சுண்ணாகம்.

2ம் லெப். மதிமலர்
(ஆனந்தவேல் மஞ்சுளா) மான்னாங்க
ணை,
வல்வெட்டித்துறை.

2ம் லெப். காவேரி (குலசேகரம் பால ரஞ்சினி) செம்பியன்பற்று, மூளாய்

2ம் லெப். யேசுதாஸ் (கந்தையா ரவி ராஜ்) அம்பாறை. த. மு: காளிகோவி லடி,
திருநெல்வேலி, யாழ்.

2ம் லெப். நிதன் (நாகமுத்து கணேஸ்) கரையாக்கந்தீவு, கன்னன்குடா.

2ம் லெப். கந்தப்பன் / நரேந்திரன் (கந் தையா சண்முகராசா) சென்றல் காம்ப், அம்பாறை.

2ம் லெப். தமிழகன் (ஸ்ரனிஸ்லாஸ் ஜஸ்ரின் எட்வின் கிங்ஸ்லி) கிளாலி, எழுதுமட்டுவாள்.

2ம் லெப். ஆதித்தன் / இளங்கதிர் (செல்வம் விஜயகுமார்) சிவன் கோவி லடி, சாவகச்சேரி.

2ம் லெப். நெடியோன் /ரவீந்திரன் (பொன்னையா தியாகராஜா) மண்டூர், மட்டு.

2ம் லெப். புலவன் (பிரேமானந்தன் அருணோதயன்) பிச்சைக்குளம், முருங் கன்.

2ம் லெப். நெடுங்கீரன் / சங்கிலி (ப ரமானந்தம் இராசா) பெரியபோரை தீவு, பழுகாமம்.

2ம் லெப். செங்கண்ணன் (ஒரோணி யேக்கப்) கிளாலி, எழுதுமட்டுவாள்.

2ம் லெப். குமரப்பா (விமலகுமார் பேதுரு) நாராந்தனை கிழக்கு, (அரி யாலை கிழக்கு)

2ம் லெப். துரோணன் (முருகையா சரவணகுமார்) கண்டி. த. மு: பெரிய குளம் கண்டாவளை, கிளிநொச்சி.

2ம் லெப் மருது (சின்னத்தம்பி யோக ராசா) முதலாம் குறிச்சி, மண்டூர்.

2ம் லெப். செவ்வல் (வேலுப்பிள்ளை குமாரகுரு) மயிலம்பாவெளி, மட்டு.

2ம் லெப். வல்லவராஜன் / பாண்டியன் (சிவப்பிரகாசம் தம்பையா) மொறக் கொட்டாஞ்சேனை, சித்தாண்டி

2ம் லெப். கிருபராஜ் / குணாளன் (இ ளையதம்பி முருகமூர்த்தி) கோயில் போரதீவு, மட்டு. (வெல்லாவெளி, மட்டு. )

2ம் லெப். சோமான் (நாகேந்திரம் லோகேஸ்வரன்) செட்டிக்குளம், வவு னியா. த. மு: 40, நீதிபுரம், மாங்குளம்.

வீரவேங்கை மதிபாலன் (வீரசிங்கம் ஆனந்தன்) தோற்றாத்தீவு -2, களுவாஞ் சிக்குடி.

வீரவேங்கை இளமுருகு / இளமுருகன் (குமாரசாமி கிருபராசா) முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை)

வீரவேங்கை ஜெயகரன் (இராசேந்திரம் இராஜன்) வசாவற்றுறை, யாழ். த. மு: உதயநகர் மேற்கு, கிளிநொச்சி.

வீரவேங்கை சேதுகாவலன் (உலகநா தன் ஞானசேகரம்) புதுக்குளம், கனக ராசன்குளம், வவுனியா.

வீரவேங்கை நாதன் (சங்கரன் ஞான ராசா) இணுவில் மேற்கு, இணுவில்.

வீரவேங்கை செந்தாமரை (அழகையா தேவிகா) கண்டி. த. மு: தொட்டியடி, விசுவமடு.

வீரவேங்கை கலைச்செல்வி (நாகமணி சாந்தி) கிருஸ்ணன் கோயில், கிரான்.

வீரவேங்கை அமுதப்பிரியா (ஆறுமு கம் சீதாலட்சுமி) கரும்புத் தோட்டம், ஸ்கந்தபுரம்.

வீரவேங்கை வீரபாண்டியன் (சின்னத் தம்பி யோகநாதன்) பழைய கொலனி, முறக்கொட்டாஞ்சேனை, மட்டு.

வீரவேங்கை பாண்டியன் (தர்மதுரை விவேகானந்தன்) கன்னன்குடா, மட்டு.

வீரவேங்கை ஞானசிங்கம் (முத்துலிங் கம் யோகராசா) மாவடி வேம்பு, வந் தாறுமூலை

வீரவேங்கை இராவணன் (இராமக் குட்டி மோகன்) 13ம் கிராமம், மில் வீதி, மண்டூர்.

வீரவேங்கை நாராயணன் (சிவநாயகம் சிவமோகன்) கோப்பாய் வடக்கு, கோப் பாய்

வீரவேங்கை சரவணன் (கணபதிப் பிள்ளை கிருபாகரன்) முத்துக்கல், பொலநறுவை.

வீரவேங்கை நந்தன் (மணியம் தீசன்) மீசாலை தெற்கு, மீசாலை

வீரவேங்கை இளஞ்செல்வன் (வினா சித்தம்பி ஜெயக்குமார்) எழுதுமட்டு வாள் வடக்கு.

வீரவேங்கை மகிந்தன் (தம்பித்துரை அன்பழகன்) கொட்டடி. த. மு: 26, துண்டியெழுலூர், கொழும்புத்துறை

வீரவேங்கை சுபன் (சோமசுந்தரம் தயாபரன்) ஆரையம்பதி, மட்டு.

வீரவேங்கை காருண்ணியகுமார் (நல் லதம்பி கணேஸ்) முனைச்சேனை, சித்தாண்டி

வீரவேங்கை தமிழ்வேலன் / ரதன் (செல்வன் உதயகுமார்) மாத்தளை. த. மு: குடாரப்பு கிழக்கு, நாகர் கோயில். யாழ்.

வீரவேங்கை மிரேஸ் (இளையதம்பி கைலாயரஞ்சன்) 5ம் வட்டாரம், வாகரை.

## 13-11-93 இல் வீரச்சாவடைந்தோர்.

கப்டன் இளையராஜன் (ஸ்ரனிஸ்லாஸ் மோகன்ராஜ்) கட்டைக்காடு, முள்ளி யான், தாளையடி.

கப்டன் வன்னியசிங்கம் (சித்தான்துறை பனார்ந்து அன்ரன் தேவராஜா) பரப் பான் கண்டல் சிறுகுளம், மன்னார்.

கப்டன் திபாகன் / மென்டிஸ் (ஜெயசீ லன் சுதா ) பனங்கட்டிக்கொட்டு, மன் னார்.

கப்டன் செல்வநாயகம் (சங்கரப்பிள்ளை நடேசன்) ஐந்தாம் குறிச்சி, அக்கரைப் பற்று, அம்பாறை.

கப்டன் தென்றன் (திருஞானசெல்வம் அமலதாஸ்) பெரியமடு, மன்னார்.

கப்டன் சாமி (இராசையா வசந்தன்) 57, இலத்தம் குளம் வீதி, அரியாலை.

கப்டன் ரங்கன் / ரங்கநாதன் (கனக சபை நகுலானந்தராசா) ஆசிகுளம், வவுனியா. த. மு: முதலாம் படிவம், கல்மடு, வவுனியா

கப்டன் பவான் (முனியாண்டி துரையன்) 4ம் யூனிட், பாவற்குளம். த. மு: இரண் டாம் யூனிட், செங்கப்படை, இரணை, இலுப்பைக்குளம், வவுனியா

கப்டன் செந்தூரன் (வேலுப்பிள்ளை உதயக்குமார்) 7ம் வட்டாரம், குமுழ முனை, மணலாறு

கப்டன் சுமன் / நாவுக்கரசன் ( தங்க ராசா தவநேசன்) கிளிநொச்சி. த. மு: மேஜர் குகதாஸ் வீதி, இந்தக்கல்லூரி ஒழுங்கை, உரும்பிராய் வடக்கு.

கப்டன் மணிவண்ணன் / வைத்தி (எ லியாஸ் சுரேஸ்குமார்) 5/3 முதலாம் குறுக்குத் தெரு, வடக்கு நாவாந்துறை.

லெப். யசோதரன் (கணபதிப்பிள்ளை தமிழரசன்) மதன்ராஜ் வீதி, ஒலுமடு, நெடுங்கேணி.

லெப். தணிகைவேலன் (கந்தசாமி கிருபாகான்) கந்தரோடை, சுண்ணா கம். த. மு: மாகியப்பிட்டி, சண்டிலிப் பாய்.

லெப். மணிமாறன் / மார்சல் (அந் தோனி பர்னாந்து யேசுதாசன் பர் னாந்து) பனங்கட்டிக் கொட்டு, மன் னார்.

லெப் குகதாஸ் (அந்தோனி தேவம னோகரன்) முருங்கன், மன்னார்.

லெப். செய்யவன் / நேரு (கணபதிப் பிள்ளை தங்கரூபன்) பெரியபளை, பளை

லெப். செல்வகுமார் / சுரேஸ் ( சுப்பி ரமணியம் ஜெயக்குமாரன் ) ஒஸ்ரன் எஸ்டேட், கற்றன்.

லெப். அழகநந்தி / றோமியோ (கந்த சாமி செந்தில்நாதன்) 48/3, கோணா வளை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு

லெப் நேசியன் (கந்தையா யெகதீசன்) மறவன்புலோ மேற்கு, சாவகச்சேரி

லெப். வாசுதேவன் (முத்துலிங்கம் பாலச்சந்திரன்) அம்மன் கோவிலடி, கூழாங்குளம், வவுனியா

லெப். காளிதாஸ் (செல்லத்தம்பு சிவ நாதன்) மருதோடை , ஓமந்தை, வவு னியா

லெப். கலைச்செல்வன் (சிவப்பிரகாசம் சுரேஸ்குமார்) கொழும்பு. த. மு; நம் பைக்குளம், வவுனியா

லெப். ஜெயரூபன் (மாணிக்கம் ரஞ்சன்) பொத்துவில், குண்டு மடு, 3ம் குறிச்சி, அம்பாறை.

லெப். ரமணன் (சிவஞானம் சிவபாலன்) பன்னாலை, தெல்லிப்பளை. நாவலடி.

லெப். தேவன் (அரியபுத்திரன் தர்மசீ லன்) தென்னியங்குளம், துணுக்காய், கிளிநொச்சி

2ம் லெப். தியாகலிங்கம் (டேவிட் யேசுதாசன்) கண்டி. த. மு; 155ம் கட்டை, காத்தான்நகர், கிளிநொச்சி.

2ம் லெப். ஜெசிந்தன் / ஜெசி (வீரச் சாமி கணேஸ்) ஏ. சி. பாம், நெடுங் கேணி, முல்லைத் தீவு, மணலாறு

2ம் லெப். புரட்சி (பிரான்சிஸ் பெர் னாந்து அமலதாசன் பெர்னாந்து) குரு வில் வான், வட்டக்கச்சி.

2ம் லெப். விஜயகுமார் (சிற்றம்பலம் பார்த்தீபன்) பெரியமடு, மன்னார்.

2ம் லெப். முத்துவேலன் (கொஸ்தான் அந்தோனி) திருக்கேதீஸ்வரம், மன் னார்.

2ம் லெப். சசிராஜ் (இராசதுரை கலைவாணன்) மாரியம்மன் கோவில் உள்வீதி, கல்லடி, மட்டக்களப்பு.

2ம் லெப். சகுந்திரன் (சங்கரப்பிள்ளை விக்னேஸ்வரன்) திருமலை. (மூங்கி லாறு, உடையார்கட்டு)

2ம் லெப். சேகர் (விநாயகமூர்த்தி கனகரட்ணம்) முன்னேஸ்வரம் தேவஸ் தானம், சிலாபம்.

2ம் லெப். செல்வந்தன் (பூபாலசிங்கம் உதயகுமார்) புதுக்குளம் வீதி, ஒட்டிசுட் டான்.

2ம் லெப். தங்கையா (தம்பிமுத்து ரவி சங்கர்) 218, டி -10, உருத்திரபுரம், கிளிநொச்சி.

2ம் லெப். துர்க்கா / உசா (வடிவேல் கமலேஸ்வரி) பன்குடாவெளி, செங்க லடி.

2ம் லெப். ஆற்றலோன் (யோகநாதன் மகேஸ்வரன்) சுழிபுரம் மேற்கு, இறாத் தலடி.

2ம் லெப். பண்டிதர் (தனபாலசிங்கம் வீரவதனன்) செந்தில்நகர், பளை

2ம் லெப். உதயநாதன் (பசுபதி மகேஸ் வரன்) பெரியதம்பனை, வவுனியா

2ம் லெப். சிவகுமாரன் (குழந்தைவேலு சந்தியேந்திரா) வேலணை. த. மு: 63/2, காங்கேசன்துறை வீதி, கொக்குவில்.

2ம் லெப். பார்த்தீபன் (வெள்ளியம்பலம் பார்த்தீபன்) மின் வீதி, ஒட்டிசுட்டான்.

வீரவேங்கை துரையரசன் (அமரசிங்கம் கெங்கேஸ்வரன்) ஒட்டிசுட்டான், முல் லைத்தீவு

வீரவேங்கை செம்பகன் (கந்தையா சுப் பிரமணியம்) குருவில்வான், வட்டக்க ண்டல், மன்னார்.

வீரவேங்கை இன்பம் (இராசரத்தினம் அகிலம்) மண்டான், கரவெட்டி மேற்கு.

வீரவேங்கை மார்க்கண்டேயன் (செல் லத்துரை உதயகுமார்) செட்டிக்குளம், வவுனியா. த. மு: உயரப்புலம், ஆனைக்கோட்டை.

வீரவேங்கை ஈழக்கன்னி (கந்தையா ஆனந்தி) தண்ணீர்த் தாங்கியடி, முருங் கன், மன்னார்.

வீரவேங்கை மலர் (சிதம்பரம் அம்பி காபதி) கட்டைக்காடு, பெரியகுளம், நெடுங்கெணி

வீரவேங்கை எழில்முதல்வன் (தம்பித் துரை தனகுமார்) பலாலி. த. மு: 292, 21ம் வாய்க்கால், பிரமந்தனாறு, விசு வமடு, கிளிநொச்சி.

வீரவேங்கை இன்பிறை ( தங்கராசா சிவபரன்) கல்வெட்டித்திடல், புளியம் பொக்கணை, கிளிநொச்சி

வீரவேங்கை ஆற்றலோன் (முருகன் உதயசங்கர்) ரம்பைக்குளம், நெடுங் கேணி, முல்லைத்தீவு

வீரவேங்கை நாகனன் (சிதம்பரப் பிள்ளை சிவகாந்தன்) 3ம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு.

வீரவேங்கை அருளன் (கந்தசாமி சசிக் குமார்) மல்லாகத்தீவு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு

வீரவேங்கை பொன்னையா (செல்லையா கணேசமூர்த்தி) அளவெட்டி. த. மு: நீர்வேலிச்சந்தி, நீர்வேலி

வீரவேங்கை நந்தபாலன் (வடிவேல் கிருஸ்ணகுமார்) ஓமந்தை , வவுனியா (விடத்தல் தீவு, பெரியமடு, மன்னார்)

## விழுப்புண் அடைந்து 14-11-93 இல் வீரச்சாவடைந்தவர்கள்.

மேஜர் தென்றல்மாறன் / கமிலோ (ரு வரத்தினம் கருணைவேல்) சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு.

கப்டன் சங்கரன் / யூட் (செல்வராசா தர்மகுமார்) வசாறங்கரைப் பிள்ளையார் கோவில் வீதி, தண்ணீரூற்று

லெப். ராகுலன் (ஆறுமுகம் பாண்டிய ராஜ்) கண்டி. த. மு: பூவரசங்குளம், வவுனியா

## 11-11-93 இல் வீரச்சாவடைந்தோரின் மிகுதி விபரம்

மேஜர் செம்பியன் / சிவாஜி (சின்னத் தம்பி குமாரலிங்கம்) வெற்றிலைக் கேணி, முள்ளியான், செம்பியன்பற்று. தனிப்பனை அகதிமுகாம்.

கப்டன் மயூரன் (தியாகராஜா பாலசபா பதி) அத்தியடி, பருத்தித்துறை. த. மு: ஒ. எல். ஆர். லேன், அடைக்கல மாதா கோவிலடி, யாழ்.

லெப். நக்கீரன் (தியாகராஜா சிறீகரன்) ராஜதுரைக் கிராமம், ஆரையம்பதி -3

2ம் லெப். கார்வண்ணன் (எட்வேர்ட் தேவாநந்) பெரியவிளான், இளவாலை. த. மு: சுண்டிக்குளி வீதி, ஈச்ச மோட்டை, யாழ்.

2ம் லெப். வதனன் (நடராஜாசர்மா கலையழகன்) இந்திரப்பிராப்தம், வட் டுக்கோட்டை மேற்கு, வட்டுக் கோட்டை.

2ம் லெப். ஈழநாதன் (கந்தசாமி ரதீஸ் வரன்) விசுவமடு, தொட்டியடி, பாம் கோர்ஸ்சடி, கிளிநொச்சி.

2ம் லெப். ஈழவேந்தன் (செல்லையா சுந்தரராசன்) ஜெயக்குமார் வீதி, கோப் பாய் வடக்கு

வீரவேங்கை இளையதம்பி (மாடாசாமி இராமச்சந்திரன்) கண்டி. த. மு: மிரிசு வில் உசன், இராமநாதன் ம. வி. அருகாமை. யாழ்.

வீரவேங்கை எழில்வண்ணன் (முத்து லிங்கம் விநாயகராசா) 4ம் வாய்க்கால், மருதநகர், கிளிநொச்சி.

வீரவேங்கை தனேந்திரன் (தங்கராசா விநாயகமூர்த்தி) எட்டாம் வட்டாரம், பனைக்காடு, மட்டக்களப்பு



# சங்கமம்

அந்தச் செய்தி எம் காதுகளுக்குக் கிட்டி இன்றுடன் நான்கு நாட்களாகிவிட்டன. என்னால் எதுவுமே செய்ய முடியவில்லை. என் அருமை மைந்தன் சாந்தனின் மாலையிட்ட படத்தை உறுத்துப் பார்த்தவண்ணம் அமர்ந்திருக்கிறேன். படத்தில், சாந்தன் கறுப்பு உடையும் தொப்பியும் அணிந்திருந்தான். என் மனம் நிர்மூலமாய்க் கிடந்தது.

மாமியின் குரல் என் காதில் விழுகிறது. "அவள் பாவி ஒரே இரையாய் இருந்து வெறிச்சுப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். எனக்கெண்டால் யோசினையாய்க் கிடக்கு, மூளையில கீளையில தட்டிப் போட்டுதோ எண்டு."

"அக்காவை அவவின்ர பாட்டிலேயே விடுறதுதான் நல்லதெண்டு டொக்டரும் சொன்னவராம். அவ, தானாகவே கவலையில இருந்து மீளட்டும். அவவைத் தொந்தரவு பண்ணக்கூடாது".

"எடி பிள்ளை, நாளைக்கு அஞ்செல்லே. அவலமாய்ச் செத்த ஆவிக்கு காச்சிப் படைச்சுக் கழிப்புக் கழிக்க வேண்டாமே, அதுதான் ஒருக்கா கொக்காவைக் கேள் பிள்ளை".

"மாமி எதுக்கும் கொஞ்சம் பொறுங்கோ. அக்காவிட்ட இப்ப உதுகளைக் கேக்கிற நிலமையில அவ இல்லை".

என்னையறியாமல் எனக்கு ஆத்திரம் மேலிட்டது. வெடுக்கென்று, "மாமி என்ரை பிள்ளை உந்தச் சாப்பாட்டு வகைகளில ஆசை வைச்சுக் கொண்டு சாகேல்ல. அவன் ஆறடி நிலங்கூடத் தேவையில்லை எண்டு நினைச்சுக் காத்தோடு காத்தாய்க் கலந்தவன். அவனுக்கு உந்தப் படைப்புகள் ஒண்டும் தேவைப்பட்டாது. நான் ஒண்டுஞ் செய்யவும் மாட்டன்."

அங்கு மௌனம் நிலவியது. எதுவித கருத்துக்களும் இல்லை. அன்று மாலையே மாமி தன் வீட்டிற்குக் கிளம்பிவிட்டார். போகும்போது எனக்குக் கேட்கும்படியாக என் தங்கையிடம் சொல்லிக் கொண்டார்:

"சரியான பஞ்சமியாமெடி புள்ள. சுந்தரத்தார் பஞ்சாங்கத்தில பாத்துச் சொன்னவர். செலவு செய்து, கழிப்புக் கழிக்காட்டி வீட்டுக்காரருக்குத்தான் கூடாது. பஞ்சமி பலியெடுத்துப் போடும். நீயெண்டாலும் ஒருக்கால் கொக்காவுக்குப் புத்தியைச் சொல்லு. அவள் கவலையில மாறாட்டம் பிடிச்சுப் போய்க் கிடக்கிறாள்."

என் மகன் தானாக விரும்பி அணைத்த சாவினால் பஞ்சமி வந்துவிட்டதாம் இவர்களுக்கு. இவர்களின் மூடநம்பிக்கையை நினைத்து அலுத்துக் கொண்டேன். எதுவும் பேசவில்லை.

திடீரென எனக்கு என் இளைய மைந்தன் காந்தனின் நினைவு வந்தது. ஆ!.... எப்படி மறந்தேன் என் காந்தனை. இந்த.... இரண்டு நாட்களாக அவனை நான் கண்டதாக நினைவில்லையே! தங்கையைக் கூப்பிட்டு விசாரித்தேன். காந்தன் அறையில் படுத்திருப்பதாகச் சொன்னாள். ஓடோடிப் போகிறேன் அவனிடம். காந்தன் சுவரைப் பார்த்தபடி படுத்திருக்கிறான். என் கவலைக்குத் திரை போட ஒத்திகை பார்க்கத் தொடங்கினேன்.

"காந்தன்! எழும்பு ராசா. எழும்பி வந்து சாப்பிடு"

அழுதவாறு கிடந்த காந்தன், "எனக்கு வேண்டாம்" என்கிறான். நான் அவனை விடவில்லை. இப்பொழுது எனக்குப் பொறுப்புணர்ச்சி தலை தூக்குகின்றது. "காந்தன், கொண்ணா தன்ர உயிரைப் புனிதமாக, எங்கட இனத்தின்ர விடியலுக்காக அர்ப்பணித்தவன். அவனுக்காக நாங்கள் அழுவது அவனது வீரத்திற்கு மாசு கற்பிப்பதாகப் போய்விடும்; அவன் இப்பவும் எங்களோடுதான் இருக்கிறான் என்று நினைத்துக்கொள். எழும்பிப்போய் முகத்தைக் கழுவிப்போட்டு கொஞ்சப் பூ பிடுங்கிக் கொண்டு வந்து அண்ணாவின்ர படத்திற்கு வை. எல்லாக் கவலையும் பறந்திடும்."

ஒருவாறு காந்தனைப் படுக்கையிலின்றும் எழுப்பிவிட்டேன். பத்து வருடங்களின் முன்னர் என் கணவரை வவுனியா -மன்னார் வீதியில் வைத்து இராணுவம் சுட்டுக் கொன்றபோது எனக்கு ஏற்பட்ட தவிப்பும் சோகமும் இப்போது இல்லை. சாந்தனின் மரணத்தினால் பிரிவுத்துயரும் பெற்ற பாசமும் என்னை அலைக்கழித்தாலும் அடிக்கடி மனதில் ஒரு இனம்புரியாத உணர்வு. இதை எப்படி வர்ணிப்பது என்று தெரியவில்லை. வீரமைந்தனைப் பெற்ற நான் சோர்ந்து கிடக்கலாமா என்ற எண்ணம் என்னை ஆட்கொள்ள என் அன்றாட அலுவல்களைக் கவனிக்கத் தொடங்குகிறேன்.

எட்டாவது நாள். ஒருவாறு காந்தனையும் அனுப்பிவைத்து நானும் பாடசாலைக்குக் கிளம்பிவிட்டேன். என்னைக் கண்டு அதிபர் திடுக்கிட்டாற்போல் இருந்தது. "ஏன் மிஸ். நீங்கள் இன்னும் கொஞ்ச நாளைக்கு லீவு எடுத்திருக்கலாமே?". அவரது குரலில் தெரிந்தது அனுதாபமா, புரிந்துணர்வா என்று என்னால் இனம்காண முடியவில்லை.

"இல்லை சேர். வீட்டில தனிமையில இருந்து யோசிப்பதிலும் பார்க்க எனது கடமையில மூழ்கிறது பறவாயில்லைப் போல் தெரியுது" என்று சொல்லிச் சமாளித்தேன்.

மெல்ல ஸ்டாவ் ரூமுக்குள் பிரவேசிக்கிறேன். கலகலத்துக் கொண்டிருந்த சக ஆசிரியர்கள் அனைவரும் 'கப்சிப்' என அடங்கிப் போய்விடுகிறார்கள். எல்லோரும் முகத்தை உம்மென வைத்துக் கொண்டிருந்தனர். அங்கு நிலவிய மௌனத்தால் என் நெஞ்சு வெடித்துவிடும் போல் இருந்தது. நானாகவே வலிய அவர்களுடன் பேச்சுத் தொடுக்கிறேன்.

வகுப்பறைக்குள் நுழைகிறேன். மாணவர்கள் அனைவரது முகங்களிலும் சோகம் படர்ந்திருக்கிறது. அவர்களது பிஞ்சு நெஞ்சங்களுக்கு முகத்திரை தேவைப்படவில்லைப் போலும், அலையாகப் பாயும் என் மனதை ஒருநிலைப்படுத்திப் பாடத்தைத் தொடங்குகின்றேன். சிறிது விளக்கம் கொடுத்த பின்னர் கணக்குகளைச் செய்யுமாறு மாணவர்களைப் பணித்துவிட்டு என் இருக்கையில் அமர்ந்து கொண்டேன். எனது கண்கள் ஒருமுறை வகுப்பறை முழுவதையும் நோட்டமிட்டு ஒரு மாணவனிடத்தில் வந்து நிலைத்து நிற்கிறது. அதோ...... என் சாந்தனைப் போலவே ....... இடது கையினால் ...... என்னை அறியாமலேயே என் எண்ணம் சாந்தனை நோக்கிப் பாய, கண்கள் என் கட்டுப்பாட்டை மீறியே விட்டன. அவசர அவசரமாகக் கான்ட் பாக்கைத் திறந்து, அதற்குள் இருந்த கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைக்குமாப்போல் கண்களையும் துடைத்துக் கொள்கிறேன்.

அந்தச் சமயம் பார்த்துத்தானா அதிபரும் என்னைக் கவனித்தவாறு அவ்வழியால் போக வேண்டும்? சிறிது நேரத்தில் அதிபர் என்னை அழைப்பதாகச் செய்தி வந்தது. அதிபர் முன்னிலையில் தலையைக் குனிந்தவாறு நிற்கிறேன். "மிஸ் உங்களுக்கு கஸ்டமாயிருக்கும் என்றுதான் உங்களை லீவு போடச் சொன்னனான். உங்களுடைய சங்கடத்தை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. இப்பொழுது வேண்டுமானால் நீங்கள் ஸ்டாவ் ரூமில் போய் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்" என்றார்.

"சேர்! தனிமைதான் எனக்கு முதல் எதிரி. நான் தொடர்ந்தும் வகுப்பெடுக்கவே விரும்புகிறேன்"



இப்படியாக நாட்கள் ஓடி மறைந்தன. ஒரு நாள் என் தங்கை இறங்கினாள். "அக்கா! முப்பத்தொன்றுக்கு துடக்குக் கழிக்க வேண்டாமோ?" என்றாள். உடனே நான் அவசரமாக, "இதென்ன விசர்க்கதை இஞ்சை என்ன 'பொடி' கொண்டந்து வச்சதோ? எப்படி வந்தது துடக்கு? எனக்கெண்டால் சாந்தன் இப்பவும் எங்களோடைதான் அருவமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றான். ஆனபடியால எதையுமே செய்யிற எண்ணம் எனக்கில்லை"

ஒரே வார்த்தையில் எல்லோருடைய வாய்களுக்கும் பூட்டுப் போட்டு விட்டேன்.

காந்தனுக்கு வாறகிழமை பரிசளிப்பு விழாவாம். அவனுக்கு மூன்று பரிசுகள் கிடைக்க இருக்கிறது. அவன் பாவிக்கும் சப்பாத்துத் தேய்ந்து போய்ப் பழசாகிவிட்டது. அவனுக்குப் புதிதாக ஒன்றை வாங்கிக் கொடுக்க வேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டேன். அன்று மாலை

## சிறு கதை

**மலரன்னை**

பாடசாலையால் வந்ததும் காந்தனையும் அழைத்துக் கொண்டு நகரத்துக்குப் போகிறேன். புறப்பட்ட நேரம்தொட்டு என் மனம் போராடிக் கொண்டிருக்கிறது. எப்பொழுதும் இருவருக்கும் சேர்த்தே வாங்கிப் பழகிய கைகள் இன்று இவனுக்கு மட்டும் வாங்க வேண்டி வந்துவிட்டதே! என் மனம் அங்கலாய்க்கிறது. ஒருவாறு மனதைத் திடப்படுத்திக் கொண்டு விட்டேன்.

காந்தனின் சைக்கிள் பாரில் இருந்த நான், எதிரில் தெரிந்த உயரமான மதிலில் ஒட்டப்பட்டிருந்த சாந்தனின் உருவப்படத்தைக் கண்டு விடுகிறேன். என் கண்கள் பனிக்கத் தொடங்க, நான் கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொள்கிறேன். என் முதுகில் உஸ்ணமான நீர்த்துளிகள் விழுந்து சிதறுவதை என் உணர்வு புரிந்து கொள்கிறது. ஓ..... என் காந்தனும் அண்ணாவின் உருவப்படத்தைக் கண்டு கலங்குகிறான் போலும்! அடுத்த நிமிடம், நான் ஒன்றுமே தெரியாதது போல வேறு கதைகளைக் கதைத்து அவனது மனதைத் திசை திருப்ப முயலுகிறேன்.

காந்தனை வார்த்தைகளால் உற்சாகப்படுத்தி படிப்பில் கவனம் செலுத்த வைக்கிறேன். இரவு 'புலிகளின் குரல்' வானொலி நிகழ்ச்சியைக் கேட்டு முடித்த பின்னர் நான் படுக்கைக்குப் போகுமுன், என் சாந்தனின் படத்தின் முன் இரண்டு நிமிடங்கள் நின்று அவனுடன் மானசீகமாக உரையாடுவதை என் வழக்கமாக்கி விட்டிருந்தேன். அன்றும் அப்படித்தான், என்னை மறந்து சாந்தனுடன் ஒன்றிப் போய் நின்ற வேளை என் பின்னால் நிழல் தெரிகிறது.

"அம்மா!....." மெல்ல அழைத்தான் காந்தன். "என்ன ராசா?" கேட்கிறேன். "அம்மா, நீங்கள் மறந்து போனீங்களே! நாளைக்கு அண்ணாவுக்குப் பிறந்த நாள். அது தான்....."

எனக்குச் 'சுரக்'கென்றது. எப்படி மறந்தேன் என் பிள்ளையின் பிறந்த நாளை? இப்படித்தான் நாளடைவில் என் பிள்ளையும் என் எண்ணத்திலிருந்து மறைந்து போய் விடுவானோ என்றெல்லாம் என்னைக் கவலை ஆட்கொள்ளத் தொடங்கியது. என்னைச் சுதாகரித்துக் கொண்டு, "அதுக்கென்ன ராசா! பிறந்த நாளைக்கு அண்ணாவுக்கு விருப்பமானதாய் ஏதும் செய்ய வேணும். ம்...... என்ன செய்யலாம்?" சிந்தித்த எனக்கு மூளையில் ஒரு மின்னல் பளிச்சிட்டது.

மறுநாள் நான் பாடசாலைக்கு லீவு போட்டேன். காந்தனும் நானுமாக நகரெல்லாம் அலைந்து திரிந்து பரிசுப் பொருட்கள் வாங்கினோம்.

தொடர்ச்சி ௰ம் பக்கம் ....

# இந்துமாகடலில் காலூன்ற சீனா முயல்கின்றதா?

சோவியத் ஒன்றியத்தின் சிதைவுக்குப் பின்னர் தோன்றிய புதிய உலக ஒழுங்கில் அமெரிக்க தேசம், தட்டிக்கேட்க முடியாத தனிப்பெரும் வல்லரசாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுவிட்டது. இந்தத் தனிக்காட்டு ராஜாவுக்கு சவாலாக இஸ்லாமிய உலகம் அணிதிரளும் என்றொரு பயம், அமெரிக்காவுக்கு எழுந்திருந்தது. 'இது மேற்குலகம் வேண்டுமென்றே மிகைப்படுத்திக் காட்டிய பார்வை' என, சில அரசியல் அறிஞர்கள் அடித்துக் கூறுகின்றனர்.

ஆனாலும், அமெரிக்க வல்லரசுக்கு சவாலாக, அடுத்த நூற்றாண்டில், ஒரு புதிய வல்லரசு ஆசியாக் கண்டத்திலிருந்து எழுந்து நிற்கத் தயாராக உள்ளது என, இப்பொழுது அமெரிக்கா அஞ்சுகிறது. உலக சனத்தொகையில் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பகுதி மக்களையும், அரிய பல வளங்களுடன் கூடிய பிரமாண்டமான நிலப்பரப்பையும் கொண்ட சீன தேசமே அதுவாகும். டெங்சியாவோ -பிங் தலைமையில் தன்னை ஒரு போட்டி வல்லரசாக வளர்த்துக் கொள்ள, திரைமறைவில் சீனா பல முயற்சிகளை எடுத்து வருகின்றது. மேற்குலகின் பரமவைரியான இஸ்லாமிய நாடுகளை அரவணைத்தபடியும் கட்டுப்பாடில்லாத வகையில், உலகளாவிய ரீதியில் ஆயுத தளபாட வர்த்தகத்தில் ஈடுபட்டும், சீனா அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் தன்னைப் பலப்படுத்தி வருகின்றது. அதே வேளை தாராள பொருளாதாரக் கொள்கையை நாணயக் கயிற்றுடன் நாட்டிற்குள் உலாவ வரவிட்டு, மேற்குலக நாடுகளையும் தன் வசப்படுத்தி அவற்றிடமிருந்து தொழில்நுட்ப அறிவையும், பொருளாதார நன்மைகளையும் பெற்று, ஒரு பலமான தேசமாக மாற சீனா அமைதியாக வேலை செய்கின்றது.

வல்லரசாக வளரமுயலும் சீனாவின் இந்த முயற்சிக்கு முதற்களமாக, இந்துமா சமுத்திரம் உள்ளாகலாம் என்ற ஐயம் இப்போது எழுப்பப்பட்டுள்ளது.

இதுவரையிலும் பெரிதும் அனுபவிக்கப்படாது குவிந்துகிடக்கும் இந்துமா கடலின் மாபெரும் வளமும், இந்துமா கடலின் 'பிரதான வல்லரசான' இந்தியாவுடன் ஒப்பிடும்போது, சுலபமாக இராணுவ மேலாண்மையை நிலைநிறுத்த முடியும் என்ற நம்பிக்கையும் ஒன்று சேர்ந்து, இந்துமாகடலில் காலூன்ற சீனாவைத் தூண்டியுள்ளன.

71 கோடி சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட, உலகின் இரண்டாவது பெரிய சமுத்திரமாகிய இந்துமாகடலை, வரலாற்றில் முதன் முதலில் ஆதிக்கத்தில் வைத்திருந்தது சோழப் பேரரசுதான். கி.பி. பத்தாம் நூற்றாண்டில் இந்து சமுத்திரத்தில் கிழக்குப் பகுதியைக் கட்டுப்பாட்டில் வைத்தபடி, தென்கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் சோழப் பேரரசு வாணிபத்தில் ஈடுபட்டது. இவ்வாணிபத்தைப் பாதுகாக்கவும்; பேரரசைக் கட்டியெழுப்பும் நோக்குடனும்; தமிழரின் பெரியதொரு கடற்படை இம்மா கடலில் தண்டு வலித்துத் திரிந்தது.

சோழப் பேரரசின் வீழ்ச்சியின் பின் இந்துமாகடல், அராபியர் வசமாயிற்று.

அதன் பின் டச்சுக்காரர்களும், போர்த்துக்கேயர்களும், பிரஞ்சுக்காரர்களும் ஆதிக்கம் செலுத்தினர்.

இறுதியில், ஆங்கிலேயர் இந்துமா கடலை முழுமையாக ஆண்டார்கள்.

'பனிப்போர்'க்காலத்தில், அமெரிக்காவினதும் சோவியத்தினதும் போட்டிக் களமாக இருந்த இம்மாகடல், பனிப்போர் முடிவுடன் இராணுவச் சலசலப்பை இழந்தது. அதன்பின் இம்மா கடலின் காவல்காரனாக இந்தியா தன்னைத் தானே கருதிக் கொண்டது.




இந்து சமுத்திரம் ஆசிய, ஆபிரிக்க, அவுஸ்திரேலிய மற்றும் அன்டாட்டிக் கண்டங்களுக்கு இடையில் அமைந்துள்ளது. இம்மாகடலைச் சூழவுள்ள 48 நாடுகள் (தமிழீழம் உட்பட) இந்து சமுத்திர பிராந்திய நாடுகள் என அழைக்கப்படுகின்றன.

இவை ஐந்து புவிசார் அரசியல் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டு உள்ளன.

1. கிழக்கு ஆபிரிக்கப் பிராந்தியம்.
2. அவுஸ்திரேலியப் பிராந்தியம்.
3. தென் மேற்காசியப் பிராந்தியம்
4. தென் கிழக்காசியப் பிராந்தியம்
5. தென்னாசியப் பிராந்தியம்

இந்து சமுத்திர பிராந்திய நாடுகளில், சீனா அடங்கவில்லை. கடல் வழியாக இந்து சமுத்திரத்திற்கும், சீனாவுக்கும் நேரடித் தொடர்பு இல்லை.
சீனா ஒரு பசுபிக் பிராந்திய நாடாகும்.

இன்று சீனா முதலாளிய உலகின் போக்கிற்கு ஏற்ப வளைந்து கொடுக்கும் ஒரு பொருளாதாரக் கொள்கையையும், அதேவேளை மிகவும் கட்டுப்பாடான இறுக்கமான உள்நாட்டு அரசியல் கொள்கையையும் பயன்படுத்தி, அதிவேகமாக வளர்ச்சி கண்டு வருகின்றது.

இந்த வளர்ச்சியை மேலும் மேலும் உயர்த்தக் கூடிய வசதியும், வளமும், பாதுகாப்பும் பசுபிக்கில் இல்லை.

அத்துடன் தரையில் வளங்களைத் தேடி படைகள் போன காலம் போய், கடலில் வளம் தேடும் காலம் இது.

எனவேதான் அமெரிக்க, ஜப்பானிய, மற்றும் ரஸ்ய வல்லரசுகளின் ஆதிக்கத்தில் ஏற்கனவே இருக்கும் தனது சொந்த சமுத்திரத்தை விட்டு, வளம் நிறைந்ததும் அதன் இராணுவ பலத்திற்கு உட்பட்டதென அது கருதும் இந்துமா சமுத்திரத்தில் ஆதிக்கம் பெற விரும்புகின்றது.

இந்த நோக்குடன் தனது நாட்டுடன் தரை எல்லைகளைக் கொண்டதும் -இந்து மாகடல் நாடுகளுமான பர்மாவையும், பாகிஸ்தானையும் சீனா தன்வசப்படுத்தும் வேலைகளில் இறங்கியுள்ளது.

இந்துமா கடலில் உள்ள பர்மாவிற்குச் சொந்தமான இரண்டு தீவுகளில் பர்மாவுக்கென இரு இராணுவ நிலைகளை சீனா அமைத்துக் கொடுக்கின்றது.

ஒரு தீவில் சக்தி வாய்ந்த 'றாடர்' நிலையத்தையும், மறுதீவில் பாரிய கடற்படைத் தளத்தையும் சீனா அமைத்துக் கொடுக்கின்றது. அதேவேளை பர்மிய இராணுவத்திற்கு பெருமளவு இராணுவ உதவிகளையும் வழங்கி வருகின்றது. இத்தனைக்கும் பர்மா, வெளியில் இருந்து அச்சுறுத்தல் எதையும் இதுவரை சந்திக்கவில்லை. உள்நாட்டிலும் கெரில்லாப் போராட்டம் நடாத்தும் சாதாரண போராளிக் குழுக்களே அரச படைகளை எதிர்த்துப் போராடுகின்றன.

எனவே பர்மாவுக்கு இந்தப் பாரிய இராணுவ உதவிகளை ஏன் சீனா செய்து கொடுக்கின்றது என்ற கேள்வி எழுகின்றது. அத்துடன் பர்மிய -சீன எல்லையோரம் உள்ள பெரும் தெருக்களை புனரமைக்கவும் ரயில் போக்குவரத்துக்களை அபிவிருத்தி செய்யவும் சீனா உதவிகளைச் செய்து வருகின்றது.
இதேபோன்று முன்னர் பாகிஸ்தானுடன் சீனா புதிய தரைப் பாதைகளை அமைத்து வைத்திருக்கின்றது. அவசியம் ஏற்பட்டால் இந்தத் தரைப் பாதைகளைப் பயன்படுத்தி இந்துமா கடலை அடைய சீனா திட்டமிடுகின்றது என்றே கண்ணோட்டக்காரர்கள் கருதுகின்றனர். அதேவேளை பாகிஸ்தானின் அணுசக்தி முயற்சிக்கும் சீனா உதவிகளைச் செய்துவருவதாகக் குற்றச்சாட்டுகள் உள்ளன.

இந்தியப் படைபலத்திற்கு நிகராக, பாகிஸ்தானுக்கு இராணுவ தளபாடங்களைச் சீனா வழங்கியும் வருகின்றது.

இவையெல்லாம் உள்நோக்கம் வைத்துச் செய்யப்படும் வேலைகள் என்பதை, சீனத் தலைவர்களின் உள்ளக்கிடக்கையை புரிந்து கொண்டவர்களால் தெரிந்து கொள்ள முடியும்.

பர்மாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இந்துமா கடலில் இருக்கும் சட்டபூர்வ உரிமைகளைப் பயன்படுத்தி, அந்த நாடுகளுடன் இணைந்து இந்து மாகடலில் காலூன்ற சீனா முயற்சி செய்கின்றது. தேவையேற்பட்டால் பலத்தைப் பயன்படுத்தி ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் இலக்குடனேயே பர்மா, பாகிஸ்தானை இராணுவ மயப்படுத்தி வருவதுடன், பர்மியத் தீவுகளில் சக்தி வாய்ந்த கடல் தளங்களையும் நிறுவுகின்றது.

இது ஒருபுறம் இருக்க, சோவியத்தின் முன்னாள் குடியரசுகளில் ஒன்றான உக்கிரேனில் இருந்து ஒரு பாரிய கடற்படைக் கப்பலைக் கொள்வனவு செய்ய சீனா பெருமுயற்சி செய்தது. ஆனால் அது கைகூடவில்லை.

இவையெல்லாம் கடலாதிக்கத்தை மனதில் வைத்து சீனா செய்த முன் முயற்சிகள் ஆகும்.

இந்து மாகடலில் காலூன்ற முனையும் சீனாவின் எண்ணத்தை, 'வாசலில் ட்றகன்' என்ற தலைப்பிலான கட்டுரை மூலம் அண்மையில் வெளிவந்த ஏசியா வீக் சஞ்சிகை சுட்டிக் காட்டியுள்ளது.

சுருக்கமாகச் சொன்னால் இந்தியாவைப் பின்தள்ளிக் கொண்டு இந்துமாகடலில் ஆதிக்கம் செலுத்துவதற்காக, இந்தியாவின் இருமருங்கிலும் உள்ளதும், அதனுடன் பகைமை உணர்வும் கொண்டுள்ளதுமான இருநாடுகளையும் (பர்மா, பாகிஸ்தான்) சீனா பயன்படுத்திக் கொண்டிருக்கின்றது.

உலக சோசலிச முகாமில் பேரழிவை ஏற்படுத்திய 'மாற்றம்' எனும் ஊழிக்காற்றில் சீனாவைச் சிக்கச் செய்யாது, இலாவகமாகவும், புத்திசாதுரியமாகவும் சீனத் தலைமை செயற்படுகிறது.

"அடுத்த நூற்றாண்டில் இது பெரிய மாற்றத்தை உண்டுபண்ணும்" என்று, இந்தியப் பாதுகாப்புத் துறையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உறுதியான தேசியத் தலைமை இன்றியும், இன -மோதல்கள் அதிகரித்ததால் எழுந்து வரும் அரசியல் பூகம்பங்களினாலும் நிலை குலைந்துவரும் இந்தியப் பேரரசிற்கு, சீனாவின் சந்தேகத்துக்குரிய நிலைப்பாடுகள் மேலும் மேலும் அச்சுறுத்தல்களைக் கொடுத்தபடி உள்ளன.

இதனால் அண்டை அயல் நாடுகள் மீதான சண்டித்தனங்களில் ஈடுபடுவதை விடுத்து, தனது சொந்தப் பாதுகாப்புப் பற்றி சிந்திக்கவே இந்தியாவுக்கு இனி நேரம் இருக்கும். இல்லாவிடின் (வரைபட ரீதியாக) 'குறடு'க்குள் அகப்பட்ட விரல் போல எதிர்காலத்தில் இந்தியப் பேரரசு நசுங்கலாம்.

சில நூற்றாண்டுகளுக்கு முன் மாவீரன் நெப்போலியன் கூறினான்: "சீனா எனும் இராட்சதன் தூங்குகின்றான். தூங்கட்டும்; அவனைத் தட்டி எழுப்பி விடாதீர்கள்".

அப்போது சீனா இதற்குப் பதில் கூறவில்லை; பேசாதிருந்தது.

'உலகில் பெருவளர்ச்சி கண்ட நாடுகளில் சீனா மூன்றாவது இடத்திற்கு (அமெரிக்கா, ஜப்பானுக்கு அடுத்ததாக) வந்துவிட்டது என, அண்மையில் உலக நிதி நிறுவனம் ஒன்று சீனாவுக்குச் சான்றிதழ் கொடுத்தது.

உடனடியாகவே சீனா இதற்குப் பதில் அளித்தது. "இது மிகைப்படுத்தப்பட்டதொரு அறிக்கை. நாங்கள் (சீனா) இப்போதும் மூன்றாம் மண்டல நாடாகவே இருக்கின்றோம்" என்றது.

சீனா தனது வளர்ச்சியை மறைத்தபடி, மேன்நிலையை அடைய முயல்கின்றது. தூங்குவதுபோல் பாவனை செய்துகொண்டு உலக வல்லரசாக மாற முயல்கின்றது. ■

**நன்றி: விடுதலைப்புலிகள்**

## இதுவே நேரம்

இது ஒரு பொற்காலம் - நாம்
இழந்ததும் பெறும் நேரம்
புது வகை விதை தூவி - புலி
அறுவடை செய்யும் நேரம்.

விதியொடும் விளையாடும்
வாழ்வினி மணம் வீச
கதியிடும் புலியோடு - நீ
களம் புக எழும் நேரம்.

மயக்கிடும் கற்பனைகள்
மிதியிட்டு துவைபட
தயக்கமின்றி வாள் எடுத்தே -தலை
அறுத்திட விரைந்திடும் நேரம்.

அகிலமும் வியந்திடும் - புலி
அணிகளும் முடியிட
துயில் எழு தோழனே! - துன்பம்
மறைபடும் ஒளிமய நேரம்.

தலைவனின் ஆற்றலும் - தரும்
தமிழ் ஈழமென
தயங்காது நீ தோள் கொடுத்தே
தேடும் - சுதந்திர கால நேரம்.

நிலை கொள் தேசம் என - நீ
பிறந்த மண் நினைவுடனே
விலை கொடு உடல் பொருளை -வேண்டும்
விடுதலை வரவிடும் நேரம்.

- கவிஞன்

# தாய் மண்ணுக்காக.... தமிழ் மக்களுக்காக!

தண்ணீருக்கு நிறம் இல்லை, மணம் இல்லை, குணம் இல்லை என்று சொல்வார்கள். ஆனால் அந்தத் தண்ணீருக்கும் நிறம் உண்டு -சிவப்பு நிறம்; மணம் உண்டு -அது இரத்த வாடை; குணம் உண்டு -எந்த உண்மையையும் மறைக்க முடியாத தன்மையைத் தோற்றுவிக்கும் தன்மை.

தமிழர்களாய்ப் பிறந்தால், அதிலும் மானமுள்ள தமிழர்களாய் இனப்பற்றுடன் இருந்த காரணத்துக்காகக் கைது செய்யப்பட்டு, கும்புறுமூலையிலுள்ள விசேட அதிரடிப்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்படுபவர்கள் இந்தத் தண்ணீரைக் காண்பார்கள். ஒரு பீப்பாயினுள் சகிக்க முடியாத நாற்றத்துடன் இருக்கும் இந்தத் தண்ணீருக்குக் கிட்ட, இவர்கள் கொண்டு செல்லப்படுவார்கள்.

"இதுதான் வில்லியத்தப் போட்டெடுத்த தண்ணி".

இவ்வாறுதான் அது அறிமுகப் படுத்தப்படும். அதன் நிறத்தைப் பார்த்து அதன் வாடையை நுகர்ந்ததும், மறந்து போயிருந்த விடயங்களெல்லாம் நினைவுக்கு வரும். அவர்கள் தமக்குத் தெரிந்த உண்மைகளையெல்லாம் சொன்னார்களோ சொல்லவில்லையோ, அதிரடிப்படையினர் அதற்குள் போட நினைத்தால் போட்டெடுக்கத்தான் செய்வார்கள்.



**லெப். வில்லியம்**

**[கிருபைராசா ஜீவராசா]**

**04-11-1962 14-01-1987**

போட்டெடுத்து... போட்டெடுத்து... எதிர்பார்க்கும் தகவல் கிடைக்கவில்லையெனில் போக் காட்டி விடுவார்கள் உயிரை.

"வில்லியத்தப் போட்டெடுத்த தண்ணி" என்று விசேடமாகக் கூறுவதற்குக் காரணமென்ன? அவன் உயிரோடிருந்த காலத்தில் சிறீலங்காப் படையினரை கனவிலும் பயமுறுத்திக் கொண்டிருந்தான். அவனை உயிருடன் கைது செய்ய முடியுமென்று, அவர்கள் ஒருபோதும் நினைத்திருக்க மாட்டார்கள். அவன் மேற்கொண்ட தாக்குதல்களுக்கு அவர்களால் ஈடுகொடுக்க முடியாமலிருந்தது. அந்தத் தாக்குதல்களில் உயிர் தப்பியவர்களுக்கு தாம் உயிரோடிருப்பதையே நம்ப முடியாமலிருக்கும். தாக்குதல் முடிந்ததும் வில்லியம் காற்றாக விரைந்து விடுவான். அவன் போய்விட்டான் என்பதை உறுதிப்படுத்தியதும் இவர்கள் தமது அட்டகாசத்தைத் தொடங்குவார்கள். அப்போது இவர்களிடம் பிடிபடும் தமிழர்கள் ஏகோபித்த குரலில் கூறுவது இதைத்தான் -

"வில்லியம்தான் இதச் செஞ்சான்".

'எதிரிக்கு நிச்சயமாகத் தெரியும் என்ற தகவலை, அவனிடம் கைதியாக இருக்கும் போது மறைப்பதில் பிரயோசனமில்லை. எந்தளவுக்கு அவன் அறிந்து வைத்திருக்கிறான் என ஊகித்து அதற்கேற்ற மாதிரிச் சொல்லிவிடுவதே புத்திசாலித்தனம் -அதை மறைக்கப் போனால் எதிரி உயிர் போகும் வரை சித்திரவதை செய்து கொண்டேயிருப்பான். ஆகவே அதைச் சொல்லிவிட வேண்டும். அதைச் செய்வதன் மூலம் அவனுக்குத் தெரியாத பல ரகசியங்களைக் காப்பாற்ற முடியும். அத்துடன் கைதுசெய்யப்பட முடியாதவன் அல்லது மரணித்தவன் தலையில் எல்லாப் பழியையும் போட்டுவிட வேண்டும்' -இது கைது செய்யப்படுபவர்கள் கையாளும் பொதுவான தந்திரம். எனவேதான் கும்புறுமூலை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டவர்கள் எல்லோரும் இதைச் சொன்னார்கள்.

".... இத எல்லாம், வில்லியம் தான் செஞ்சான்..... அவனுக்குத்தான் எல்லாம் தெரியும்".

அப்போதெல்லாம் அவர்களிடம் படையினர் கேட்டார்கள், "நாங்கள் வில்லியத்தைப் பிடிச்சு உங்ககிட்ட கொண்டுவந்தா நீங்க என்ன செய்வீங்க....?"

அப்போதெல்லாம் அவர்கள் எவ்வித தயக்கமுமின்றிக் கூறுவார்கள்:

"அவனைக் கொண்டு வாங்கையா... அவன நாங்கள் நம்ம மடகையாலயே வெட்டிக் கொல்லுறம்..."

எந்தக் கட்டத்திலும் வில்லியம் உயிருடன் கைதாகமாட்டான் எனத் திடமாக நம்பியதாலேயே அவர்கள் அவ்வாறு கூறினார்கள். இதற்கு மேல் ஏதாவது கூறமுடியுமென்று தெரிந்திருந்தால் அதனையும் கூறியிருப்பார்கள். அவர்களைப் பொறுத்த வரை எதையாவது சொல்லி அந்தச் சித்திரவதைக் கூடத்திலிருந்து மீண்டு வரவேண்டும்.

அப்போதெல்லாம் அவர்களுக்குத் தெரியவில்லை, இந்த வார்த்தைகள் விபரீதத்தைக் கொண்டுவருமென்று.

* * * * *

வில்லியம்...!

வாழைச்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவனது இயற்பெயர் ஜீவராசா. மட்டக்களப்பில் நடந்த முதலாவது பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றவன் இவன். பயிற்சி முடிந்தவுடனேயே இவனுக்கு சிறீலங்காப் படையினருக்கெதிரான தாக்குதல்களில் பங்குபற்றவும், தனித்துத் தாக்குதல் நடத்தவும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. கிடைத்த வாய்ப்புக்களையெல்லாம் பயன்படுத்தினான். அவற்றை எந்த ஒரு காரணத்துக்காகவும் இவன் பின்போட்டதில்லை. உதாரணத்துக்கு ஒரு சம்பவம்...

11. 02. 1986 அன்று இவன் கல்குடா வீதியில் பேய்த்தாழை என்னுமிடத்தில் சிங்களப் படைகளை எதிர்பார்த்துக் காத்திருந்தான்; தனியாளாகத்தான் அங்கு நின்றான். அப்போது அந்த வீதி வழியாக அவனது தந்தை வந்து கொண்டிருந்தார். இவன் தனித்து அந்த இடத்தில் நிற்பதால் யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று நினைத்தார் அவர். இப்போதெல்லாம் வெகு ஆபூர்வமாகத்தான் இவனைக் காணக் கிடைக்கிறது. இயக்கத்திற்கு போன பின்பு, இவனுடன் கதைக்கும் போதெல்லாம், யாரோ ஒரு பொதுமகனுடன் இவன் கதைப்பது போலத்தான் உணர முடிகிறது. ஒவ்வொரு வார்த்தையையும் நிதானித்துத்தான் கதைக்கிறான். 'நம்மட புள்ளக்கி நாம துரோகம் பண்ணுவமா... ,ஏன் இப்பிடி ஒட்டாமப் பழகுறான்...' என்று அவர் பல தடவை நினைத்ததுண்டு -ஆனாலும் இவனிடம் எதையும் கேட்டதில்லை. கேட்டால் இந்தளவிற்கு இருக்கும் உறவைக்கூட, முறித்து விடுவான் என்று பயம்.

இன்று கண்டாயிற்று. தனிய நிற்பதால் கூடிய நேரம் கதைக்கலாம் என்றொரு ஆசை -பாசம் மிதிவண்டியின் வேகத்தை அதிகரிக்கின்றது.

இதோ கிட்ட... கிட்ட... மிகக் கிட்ட.

இதேவேளை பின்னால் கல்குடா பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சிங்களப் படையினரின் ஜீப் - அது இவரை முந்திவிட்டது. முன்னால் ஜீப் -பின்னால் தந்தை... பெற்று வளர்த்து... முத்தமிட்டு... தோளில் தூக்கி...

அதையெல்லாம் நினைக்க நேரமில்லை. தந்தைக்காக இந்தச் சந்தர்ப்பத்தை இழக்கத் தயாரில்லை அவன். எப்போது கழுத்தில் சயனைட் கட்டினானோ அந்தக் கணத்திலிருந்து அவன் இந்தத் தேசத்தின் புதல்வன். எனவே முடிவெடுத்து விட்டான். பயங்கரமான சத்தத்துடன் அந்தக் கண்ணிவெடி வெடித்தது. இதில் இரண்டு அதிரடிப்படை வீரர்கள் பலியாகினர். மூவர் காயமடைந்தனர்.

தாக்குதல் நடக்குமென்று படையினர் மட்டுமல்ல அவனது தந்தைகூட எதிர்பார்க்கவில்லை. எப்படியோ அதிர்ஸ்ட தேவதை அவருக்குக் கைகொடுத்தாள். இல்லாவிட்டால் அன்று அவர் உயிர் தப்பியிருக்க முடியாது. இதன்பின் அடிக்கடி கூறுவார் அவர்-

"என்னையும் பாக்காம, எண்ட மகன் இப்படிச் செஞ்சு போட்டான்".

இக் கூற்றில் ஒரு தந்தையின் தவிப்பும் மகனைப் பற்றிய பெருமையும் இணைந்திருக்கும்.

* * * * *

13. 01. 1987 அன்று, வில்லியத்தை எதிர்பார்த்து வாழைச்சேனைப் பகுதியில் காத்திருந்தனர் சிறீலங்கா அதிரடிப்படையினர். காட்டிக் கொடுத்தவன் ஒழுங்காகத்தான் தகவல் வழங்கியிருந்தான். அன்று வில்லியத்துடன் சங்கரும் வந்து கொண்டிருந்தான். வில்லியத்தைப் போலவே இவனும் பல இடங்களில் இவர்களுக்கெதிரான தாக்குதல்களில் பங்குபற்றியவன். இன்று இருவருமே தமது கொலை வளையத்தினுள் மாட்டிக் கொண்டதை நினைக்கச் சந்தோசமாக இருந்தது அவர்களுக்கு.

"பட்... பட்... பட்..." அவர்களது துப்பாக்கிகள் சரமாரியாகப் பொழிந்தன. சங்கரும் வில்லியமும் இதனைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

சங்கருக்கு தோளில் வெடி; வில்லியத்துக்கு முழங்காலில் வெடி வில்லியத்தால் ஓட முடியாது. அதற்காக அவனை அப்படியே விடமுடியாது. அவனைத் தோளில் போட்டவாறே ஓடினான் சங்கர். படையினர் துரத்தினர் ஆனால் சங்கர் தப்பிவிட்டான் -தனது நண்பனுடன்.

இப்படியே நீண்டதூரம் சங்கரால் ஓடமுடியவில்லை. அவனது காயத்திலிருந்து பெருந்தொகையான இரத்தம் வெளியேறி விட்டது. அவனுக்குச் சோர்வாக இருந்தது. அந்தக் கண்ணகி கிராமத்தில் சின்னச் சின்னப் பற்றைகள்தான் இருந்தன. அவற்றினுள் வில்லியத்தைக் கிடத்தினான். இப்போது தேவை வைத்தியம். இதற்கு ஏற்பாடு செய்யும் பொருட்டு ஒரு ஆதரவாளனின் வீட்டிற்குள் புகுந்தான் சங்கர்.



**"இப்படியா வெட்டுறது...? இந்தாபார் எப்படி வெட்டுறதெண்டு" அசுர வேகத்தில் இயங்கினான் அவன். எல்லோர் கண்ணெதிரிலும் வில்லியம் துடித்துத் .... துடித்து....**

படையினர் தேடினார்கள் - சங்கரும் வில்லியமும் மறைந்த வழி தெரியவில்லை: ஏமாற்றத்துடன் திரும்பிப் போய்விட்டார்கள். சங்கர் ஒரு வைத்தியரைச் சந்தித்தான். அவரையும் கூட்டிக் கொண்டு வில்லியத்தை நோக்கி விரைந்தான்.

இதற்கிடையில், 'வில்லியத்துக்கு வெடிபட்டுட்டுது' என்ற செய்தியறிந்து பலர் அவனைப் பார்க்கச் சென்றனர். இந்த இடத்தில் வில்லியம் இருப்பது ஆபத்தானது எனக் கருதிய அவர்கள், இன்னும் கொஞ்சம் தூரத்துக்கப்பால் பற்றை மறைவுக்குள் அவனைக் கிடத்தினார்கள். அவன் வேதனையில் முனகிக் கொண்டிருந்தான்.

மீண்டும் படையினர் வரலாம். அதற்குள் பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். இவனோ முனகிக் கொண்டிருக்கிறான். இந்த நிலையில் இவனுக்கு மயக்க ஊசி போடுவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை அந்த வைத்தியருக்கு. சங்கர் வில்லியத்தைக் கொண்டு செல்வதற்கான ஏற்பாட்டில் மும்முரமாயிருந்தான். ஆனால் அவனைவிட இனத்துரோகி சுறுசுறுப்பாயிருந்தான். பொதுமக்களுடன் பொதுமக்களாகச் சென்று வில்லியத்தைப் பார்த்த அவன், நேரே படையினரின் முகாமுக்குச் சென்று அவர்களை அங்கே கூட்டி வந்தான்.

வில்லியம் நினைவு திரும்பாத நிலையிலேயே கைது செய்யப்பட்டான். சங்கரால் எதுவும் செய்ய முடியவில்லை. யாரை நோவது? அன்றைய இரவு கண்ணீருடன் கழிந்தது.

* * * * *

சித்திரவதைகள் வில்லியத்தைச் சுயநினைவுக்குக் கொண்டு வந்தன. அவனது உடலில் மேலும் பல காயங்கள் உருவாகின. உடல் முழுவதும் இரத்தம். அந்த நிலையில் பீப்பாவிற்குள் போட்டெடுத்து தண்ணீர்தான் சிவப்பாகியதே தவிர, வில்லியத்தின் வாயிலிருந்து எந்த வார்த்தையும் வெளிவரவில்லை.

வில்லியம் கைதான மறுநாள்...

மீண்டும் கேட்டனர் கைதிகளிடம், "வில்லியத்தப் பிடிச்சுக் கொண்டு வந்தா என்ன செய்வீங்க?"

மீண்டும்...

"கொண்டு வாங்கையா, எங்கட கையாலயே அவன வெட்டுறம்; கொல்லுறம்".

அந்த முகாம் பொறுப்பதிகாரி முகத்தில் புன்னகை. அது மிகவும் குரூரமாகவிருந்தது. ஏனையோரிடம் கண்ணைக் காட்டினான் அவன். அவர்கள் வில்லியத்தைத் தூக்கி வந்தனர். கூடவே ஒரு கத்தியும் கொண்டுவரப்பட்டது.

"உம் வெட்டுங்க... வில்லியத்தை வெட்டுறதெண்டு சொன்னீங்களே...? வெட்டுங்க".

சிலையாகி நின்றனர் அனைவரும். இப்படியொரு நிலையை எவருமே எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்த்ததைவிட காட்டுமிராண்டியாக இருக்கிறானே இவன் என்று, ஆச்சரியத்துடன் விழி பிதுங்க நின்றனர். இரத்த ஓட்டமே நின்றுவிடும் போல் இருந்தது.

"உம் வெட்டுங்க..."

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

# இலங்கைக்கு ஏற்ற ஆயுதங்களே கொள்வனவு செய்ய வேண்டும்!

## ஊழலைத் தடுக்க வழி இதுதானாம்

இனி அரசு புதிய ஆயுதங்களையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்யும்போது இலங்கையின் நிலைமைகளுக்கு ஏற்றவகையிலானவற்றையே கொள்வனவு செய்யும். இதன் மூலம் இராணுவத்தினுள்ளேயே இருக்கும் லஞ்சப் பிரிவுகளுக்கு இலாபம் கிடைப்பதை தடுக்க முடியுமென ஆய்வாளர்களை மேற்கோட்காட்டி, கொழும்புத் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சில சக்திவாய்ந்த பிரிவினர், தாம் கமிசன் பணம் பெறும் முகமாக குறிப்பிட்ட சில நிறுவனங்களிடமே ஆயுதக் கொள்வனவு செய்ய முயற்சிக்கின்றனர். இந்த ஆயுதங்கள் இராணுவ நடவடிக்கைகளுக்கு உகந்தவையாக இல்லை எனவும் அந்த ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இராணுவத்தையும் கடற்படையையும் மீள அமைப்பதற்கு அவர்களது மனநிலையை ஊக்குவிக்க அரசு புதிய முயற்சிகளில் இறங்கியுள்ள இச் சந்தர்ப்பத்தில், புலிகள் கிழக்கில் மீண்டும் படையினரைத் தாக்குகின்றனர். தொலைத்தொடர்பு சாதனங்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுவதாக, இங்குள்ள கனிஸ்ட அதிகாரியை மேற்கோள் காட்டி அப்பத்திரிகை மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பிற்கென ஒரு அமைச்சரின்மையே, நிலைமையை மேலும் மோசமாக்குவதாகவும், அரசியல் தலைமைப்பீடத்திற்கும் பாதுகாப்புப் படைகளுக்குமிடையே எந்தத் தொடர்பும் இல்லையெனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மறைந்த ரஞ்சன் விஜயரத்தின போன்றவர்களே எமக்குத் தேவையென, படைவட்டாரங்கள் கூறுவதாக அப்பத்திரிகை குறிப்பிடுகிறது. ■

# சிட்னியில் மாவீரர் தினம்

சிட்னி ஈழத்தமிழர் கழகத்தினரால், மாவீரர் தினவிழா சிட்னியில் BURWOOD மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 04-12-93 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு மாவீரர்களுக்கு தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

இவ்விழாவில் சிறுவர் நிகழ்ச்சிகளாக 'யமதர்பார்', 'மறவர் படை' ஆகியவையும், காலத்தின் கோலங்கள், நடன நிகழ்ச்சிகள் ஆகியனவும் மிகவும் சிறப்பாக இருந்தன.

'பூ ஒன்று புலியாகி' என்ற நாடகம் பெண் விடுதலைப் புலிகளைப் பற்றி எழுதப்பட்ட ஒரு நாடகமாக இருந்தது. இந்நாடகம் தென் தமிழீழத் தமிழ் மக்களின் துயரங்களையும் அம் மக்களின் தமிழீழ விடுதலைக்கான பங்களிப்பினையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தது.

இதில் செல்விகள் ஜனனி, கிறிஸ்ரின் ஆகியோரது நடிப்பு பலரையும் கண்கலங்க வைத்தது. இவர்கள் தென் தமிழீழத் தமிழ்ப் பேச்சில் பேசி நடித்தது மிகவும் இயல்பாக இருந்தது.

செல்வன் சோதி, செல்வி அபிராமி ஆகியோரது பேச்சுக்கள் மக்களைச் சிந்திக்க வைக்கக் கூடியதாக இருந்தது.

கலை நிகழ்வின் இறுதியாக தமிழீழத் தயாரிப்பான 'இது எங்கள் தேசம்' படக்காட்சி காண்பிக்கப்பட்டது.

இறுதியாக நடைபெற்ற மாவீரர் படங்களுடனான இறுதி அஞ்சலி மிகவும் உணர்ச்சிகரமாக இருந்தது. ■

## இந்தியாவின் உள்.....

மக்கள் விடுதலை முன்னணி' கலைக்கப்பட்டது. இச் சமயத்தை ஏற்ற தருணமாகக் கருதி "மாத்தையா" அவர்களை இந்திய ஆராய்ச்சி பகுப்பாய்வுப் பிரிவு தனது கருவியாக்க முடிவெடுத்தது.

### வவுனியாவுக்கு ஒற்றன்

மிகக் கவனமாகச் சதிவலையைப் பின்னிய இந்திய ஆராய்ச்சி பகுப்பாய்வு பிரிவு, மாத்தையாவுக்கு நெருங்கிய ஒருவரை மாத்தையாவைச் சந்திக்கவென தமிழீழத்திற்கு அனுப்பி வைத்தது. இவர் சிறீலங்கா அரசாங்கத்தின் அனுமதியுடன், சிறீலங்காப் பாதுகாப்புப் படையின் துணையோடு, கொழும்பினூடாகச் சென்று மாத்தையாவைச் சந்தித்து அவரை இச் சதிப் பின்னலுக்குள் இழுத்து விட்டுள்ளார்.

### விசாரணையில்.....

ஆயினும், தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறையின் திறமைமிகு செயற்பாட்டால், இந்திய ஆராய்ச்சி பகுப்பாய்வுப் பிரிவின் சதி பற்றிய தகவல்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கிட்டியதும், சதி முயற்சியை மிகக் கவனமாக அவதானித்து சதியில் சம்பந்தப்பட்ட அனைவரையும் தடுத்து வைத்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

### 'தலைவருக்கு' இலக்கு

இவ்விசாரணைகளின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களையும், மேலும் சில முக்கிய விடுதலைப்புலி உறுப்பினர்களையும் அழித்தொழிப்பதற்கான முயற்சிகளில் இந்திய ஆராய்ச்சி பகுப்பாய்வுப் பிரிவினர் ஈடுபட்டு வந்துள்ளனர் என்பதற்கு சான்று ஆதாரங்கள் கிடைத்துள்ளன. விசாரணைகள் தொடர்வதாகத் தமிழீழத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இச்சதி முயற்சி அதியுயர் தண்டனைக்குரிய தேசத்துரோகக் குற்றமாகக் கருதப்படுகிறது. ■

## சர்வதேச நிவாரண...

யேற்றப்படுது இதுவே முதல் தடவை என்பதும் 'கின்னஸ்' புத்தகத்தில் இடம்பெறக்கூடிய சிறீலங்காவின் சாதனை என்பதும் குறிப்பிடத்தக்கது.

விவசாய உள்ளீடுகள், அத்தியாவசியப் உணவுப் பொருட்கள், எரிபொருள்கள் என்பவற்றை எடுத்துச் செல்லும் வாகனத் தொடர்களுடன் துணைசெல்லும் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுக்கும் 'பாஸ்' வழங்க வவுனியா இராணுவ அதிகாரிகள் மறுத்து வருகின்றனர்.

இத்தகைய சிறீலங்கா அரசின் செயற்பாடுகளால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பணிகளும் தமிழீழப் பிரதேசத்தில் சிறீலங்காவால் தடுக்கப்பட்டு வருகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு போதிய நிவாரணப் பொருட்களை ஒதுக்கீடு செய்து அனுப்பாத காரணத்தால், தமிழீழப் பிரதேசத்தில் கடமையாற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் ஆணையாளர் அலுவலர்கள் சேவையை இடைநிறுத்தியமை குறிப்பிடத்தக்கது. ■

## நிகழ்வும் நினை......

முயற்சியில் வெற்றி காண்பது சாத்தியப்படாத விடயமே.

பூநகரித் தோல்வியின் பின், ஆயுதப் படையினர் மத்தியில் ஏற்பட்டுள்ள சோர்வு இன்னும் நீங்கியபாடாய் இல்லை. எத்தகைய தந்திரோபாயத்தின் அடிப்படையில் இராணுவ நடவடிக்கையினை மேற்கொள்வது என்பது குறித்த தெளிவான நிலைப்பாடு படையினரிடம் இன்னும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

இத்தகைய சூழலில், 1994 இன் மாசி -பங்குனிப் பகுதிகளில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றினை மேற்கொள்ள அரசு எடுக்கும் முயற்சி, நிச்சயமாக விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்படும். தரை நகர்வு முயற்சிகள் சாத்தியப்படாத போது மிக மோசமான குண்டு வீச்சுத் தாக்குதல்கள், எறிகணைத் தாக்குதல்கள் போன்றன படையினரால் மேற்கொள்ளப்படும்.

எனவே 1994, சிறீலங்காவினைப் பொறுத்தவரை தேர்தல் ஆண்டாகவும் தமிழீழத்தைப் பொறுத்தவரை யுத்த ஆண்டாகவும் அமையும். வடக்கிலும் கிழக்கிலும் சிறீலங்கா ஆயுதப்படையினரின் ஆக்கிரமிப்பு முயற்சி, விடுதலைப் போராளிகளின் தாக்குதல்களினால் முறியடிக்கப்படும். 1994 ஆம் ஆண்டின் யுத்த முஸ்தீபுகளில் சிறீலங்கா அரசு தோல்வியினைக் காணும் போது, அதன் நிலை மேலும் பலவீனப்பட்டுப் போகும். அரசின் நிலை பலவீனமடைந்து, இராணுவ ரீதியில் எதுவும் சாதிக்க முடியாத போது காலத்தினைத் தாழ்த்தும் தந்திரோபாயத்தின் (TIME BUYING TACTICS) அடிப்படையில் போலிச் சமாதான முயற்சியில் அரசு ஆர்வம் காட்டலாம். எனது கணிப்பின்படி, 1994 ஆம் ஆண்டின் இறுதியில் அல்லது 1995 இன் ஆரம்பத்தில் இது நடைபெறலாம். இப் போலிச் சமாதானத்தினை அம்பலப்படுத்தி, அடுத்த கட்டத்தினை நோக்கி தமிழீழம் நடைபோடுவது எமது இராஜதந்திரத்திலேயே தங்கியுள்ளது.

எனவே ஒட்டுமொத்தமாக நோக்கின் 1994 உம் எமக்கு ஒரு வெற்றி ஆண்டுதான்! ■

# மீண்டும் இந்தியா...

### இந்தியாமேல் அக்கறை.

இதனால் சர்வதேச நாடுகளை விட, இந்தியாவின் நேரடி உதவிகளை இராணுவ -அரசியல் ரீதியாகப் பெறுவதொன்றே தனது போர்த்தன்மையான போக்கிற்கு ஏற்புடையதாக அமையுமென சிறீலங்கா அரசாங்கம் கருதத் தொடங்கியுள்ளது. அதேவேளை அரசியல் உறுதியின்மையாலும் 860 மில்லியன் பவுண்ஸ் தரகுச் சந்தை ஊழல் போன்ற பல ஊழல்களாலும் தடுமாறும் இந்திய மத்திய அரசு, தமிழ்த் தேசியத்துவத்தின் எழுச்சியை நசுக்குவதைத் தனது இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. மத்திய அரசின் வட இந்திய நலன்பேணும் நடவடிக்கைகளாலும் இந்தி மொழி வெறியினாலும் தமிழ் நாடு மாநிலத்தில் ஏற்படும் தாக்கங்களிற்கு, தமிழீழ தமிழ்த் தேசிய எழுச்சி புதிய பரிணாமத்தை ஏற்படுத்திவிடுமென இந்திய மத்திய -மாநில அரசுகள் அஞ்சுகின்றன. இதனால் தமிழ் நாட்டுத் தமிழரை அடிமை கொள்வதற்காக 35 இலட்சம் தமிழீழத் தமிழரின் நியாயமான ஆயுத எதிர்ப்பை மத்திய அரசு அழித்தொழிக்கத் துடியாய்த் துடிக்கிறது. இந்த அரசியல் சூழ்ச்சி நிலையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்த முனையும் சிறீலங்காவின் பௌத்த சிங்களப் பேரினவாதம், இந்தியாவின் இராணுவத் தலையீட்டிற்கு 'தலைவாழை இலைவிரித்து' வரவேற்பு நல்கக் காத்திருப்பதாக அறியப்படுகின்றது.

அமைதிப்படை என்ற பெயரில் வந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தர்ம யுத்தத்திற்கு முன்னால் எதிர் நிற்கமுடியாது 6000 இற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களைத் தனது இராணுவக் கொலைக் கருவிகளுக்கு இலக்காக்கி, பலத்த இராணுவ இழப்புகளுடன் இந்தியாவிற்கு திரும்பியோடிய இந்திய இராணுவம் மீண்டும் நேரடித் தலையீட்டை விரும்பாத நிலையில், தலையீட்டுக்கான புதிய வடிவங்களை மத்திய அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகத் தெரிகிறது. கூட்டுரோந்து, இராணுவ வழிகாட்டல், இராணுவ ஆயுதவழங்கல் போன்ற வழிகளின் ஊடாகவே இந்தியா தனது தலையீட்டை ஆரம்பிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு நியாயப்படுத்தலாக ராஜீவ் காந்தி கொலைவழக்கு விவகாரத்தை இந்தியா சிருஸ்டித்து வருகிறது என சர்வதேச சட்ட அவதானிகள் கருதுகின்றனர்.

அதேவேளை பனிப்போரின் முடிவால் பாகிஸ்தான், சீனப்பிரச்சினைகளில் இராணுவ தந்திரோபாய மாற்றங்களைச் செய்யவேண்டிய நிலையிலுள்ள இந்தியா, தனது இராணுவ பயிற்சிக்களமாக தமிழீழ மண்ணை மாற்றக்கூடும் என்ற கருத்தும் அரசியல் அவதானிகளிடையே நிலவுகிறது. சிறீலங்காவுடனான இந்தியாவின் உறவுமுறைகளில் ஏற்படும் மாற்றங்கள், தென்னாசியாவின் அமைதிக்கு சவாலாக மாறிவருகின்றன. இன்று தமிழீழப் பிரச்சினை ஒரு உள்நாட்டுப் பிரச்சினையல்ல. உலகிலுள்ள முக்கியமான 37 பிரச்சினைகளுள் ஒன்றாகத் திகழ்கிறது. எனவே சர்வதேசப்பிரச்சினையாக மாறிவரும் தமிழீழப் பிரச்சினையிலேற்படும் இந்தியா எனும் வெளிநாட்டின் தலையீடு, தென்னாசியாவின் அமைதியைக் குலைத்து சர்வதேச அமைதியின்மைக்கு மேலும் வலுவூட்டக் கூடும். எனவே சர்வதேச அமைதியைப் பேணக் கடமையுடைய ஐக்கிய நாடுகள் சபை, தமிழீழப்பிரச்சினையில் தலையிடுவதன் மூலம் சர்வதேச அமைதியின்மை எதிர்காலத்தில் தோன்றும் சூழ்நிலையை மாற்றியமைக்க வேண்டுமென இலண்டனிலுள்ள உலக அமைதிபற்றிய ஆய்வாளர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

### தேர்தலுக்காக 'சத்திரசிகிச்சை'

இதற்கிடையில் பங்குனி மாத நடுப்பகுதியில் சிறீலங்காவில் தேர்தல்களை நடாத்தத் திட்டமிட்டு வரும் சிறீலங்கா அரசாங்கம், சிங்கள பௌத்த பேரினவாதிகளைத் திருப்திப்படுத்துவதற்காக மாசி மாதத்தில் தமிழீழத்தின் மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடாத்துவதற்கான வேலைகளில் அதி தீவிரமாக ஈடுபட்டுள்ளது. சிறீலங்கா ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்காவின் இத்திட்டம் மிகக் கவனமாக அவதானிக்கப்பட வேண்டியதொன்று.

இதன்படி முதலாவதாக, இராணுவ ஆக்கிரமிப்பிற்கு உள்ளாகியுள்ள தமிழீழப் பிரதேசங்களான மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தல்களை முதலில் நடாத்துவது. இதன் மூலம் தமிழ் -முஸ்லீம் பகைமை உணர்வுகளைத் தூண்டிவிடுவது. பிரதேச உணர்வை மீண்டும் தலைதூக்க வைப்பது. அதேவேளை இராணுவ ஒடுக்குமுறையின் கீழ் நடக்கும் சுதந்திரமற்ற தேர்தலில் சிறீலங்கா அரசாங்கத்தின் 'எடுபிடிகளை' நிறுத்தி, அவர்களைத் தேர்தலில் வெற்றிபெற்ற தமிழ்ப் பிரதேச பிரதிநிதிகள் எனும் ஒரு போலி அமைப்பாக மாற்றுவது.

இரண்டாவதாக, இந்தப் போலியமைப்பை தமிழீழ மக்களின் அரசியலமைப்பாகக் காட்டி, அவர்களுடன் அரசியல் தீர்வு நாடகம் ஆடுவது.

மூன்றாவதாக, மறுபுறத்தில் முழுப் பலத்தையும் சேர்த்து கூடுமானால் இந்திய உதவியையும் பெற்று தமிழீழ மக்களின் மேல் பாரிய இராணுவ ஆக்கிரமிப்பொன்றை நடாத்தி, தமிழீழ மக்களின் தேசிய பாதுகாப்பிற்கான அரசு நோக்கிய அரசாகத் திகழும் விடுதலைப் புலிகளை அழித்தொழித்து தமிழீழ மக்களை அரசியல் நிர்வாணிகளாக்கி அவர்களை அடிமை கொள்வது.

இந்த மும்முனைத் திட்டத்தின் செயலாக்கமே தேர்தல், இந்தியத்தலையீடு, பாரிய யுத்தம் என்ற மூன்றுவழிகளாகும். இதற்கு சிறீலங்கா ஜனாதிபதி 'ஒப்பரேசன்' என்னும் குறியீட்டைக் கொடுத்துள்ளதாகவும் உள்ளூராட்சித் தேர்தல்களின் பின்னர் சிறீலங்காவிலுள்ள பயங்கரவாதப்பிரச்சினைக்கு வடக்கில், 'ஒப்பரேசன்' சிகிச்சை செய்யப் போவதாக அறிவித்து வருவதாவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

## தாய் மண்ணுக்காக...

"மெல்ல வெட்டாதீங்க... ஒரேயடியா வெட்டுங்க..."

அவரால் இயல்பாக இயங்க முடியவில்லை. இதைப் பார்த்ததும் படையதிகாரிக்கு கோபம் வந்தது.

"இப்படியா வெட்டுறது...? இந்தா பார் எப்பிடி வெட்டுறதெண்டு".

அசுர வேகத்தில் இயங்கினான் அவன். எல்லோர் கண்ணெதிரிலும் வில்லியம் துடித்துத்... துடித்து...

அன்றைக்கும் இலங்கை வானொலி "பயங்கரவாதியொருவர்" கொல்லப்பட்டதாகத்தான் தெரிவித்தது.

அன்று மாலையும் ரூபவாகினி, புத்தர் சிலைக்கு முன்னால் வணக்கம் செலுத்தப்படும் காட்சியை ஒளிபரப்பியது!! ■

# நிகழ்வும் நினைவும்

— திலீபன் —

# 1994 சிறீலங்கா — தேர்தல் ஆண்டு தமிழீழம் — யுத்த ஆண்டு

நாளை புதுவருடம் பிறக்கின்றது. புதுவருடம் மிழீழ மக்களின் வாழ்வில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும்? இந்த வினாவினை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் நிலையிலேயே தமிழீழ மக்கள் உள்ளனர்.

392 உடன் ஒப்பிட்டு நோக்கும் போது 1993 இல் தமிழீழ விடுதலைப் போராட்டம் முன்னேற்றகரமான வளர்ச்சியினை அடைந்திருக்கின்றது. சிறீலங்கா அரசினைவிட விடுதலைப் புலிகள் வெற்றிகளைச் சாதித்திருப்பதனை, சர்வதேசச் செய்தி நிறுவனங்கள் வெளிப்படுத்தியுள்ளன. தமிழீழ மக்கள் தமது போராட்டத்தில் முன்னேறியிருக்கின்றனர் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. 1994 ஆம் ஆண்டு எப்படி அமையும்?

1994 ஒரு தேர்தல் ஆண்டு. 1994 இன் இறுதியில் ஜனாதிபதித் தேர்தலும் 1995 இன் ஆரம்பத்தில் பாராளுமன்றத் தேர்தலும் நடாத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இறுதியாகக் கிடைத்த தகவல்களின்படி 1994 இன் முற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடாத்தப்படலாம் என்ற எதிர்பார்ப்பும் எழுந்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல் வருட முற்பகுதியில் நடாத்தப்படுமானால், பாராளுமன்றத் தேர்தல் வருட இறுதியில் நடாத்தப்படலாம். இத்தேர்தல் எப்போது நடாத்தப்படும் என்பது நிச்சயமில்லாவிடினும் 1994 ஆம் ஆண்டு, ஒரு தேர்தல் ஆண்டாக அமையும் என்பது நிச்சயமாகவே இருக்கும் என்று கணிக்கப்படுகின்றது.

சிறீலங்காவின் இத் தேர்தல் ஆண்டு தமிழீழ மக்களுக்கு எப்படி அமையும்? சிறீலங்கா அரசு, தமிழீழ மக்கள் தொடர்பாக எத்தகைய நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கும்? இத்தகைய கேள்விகள் இயல்பாகவே மனதில் எழுகின்றன.

இன்றுள்ள நிலைமைகளை வைத்து நோக்கும் போது, 1994 இல் தமிழீழ மக்கள் இராணுவ ஆக்கிரமிப்பு முயற்சியினை எதிர்த்து, விட்டுக் கொடுப்பற்ற ஒரு போராட்டத்தை நடாத்த வேண்டியவர்களாக இருப்பார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

சிறீலங்கா அரசு, இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணும் முயற்சியினை 1994 இலும் தொடரவே செய்யும். இது இரு முனைகளில் நடைபெறலாம்.

1. கிழக்கினைச் 'சுத்தப்படுத்தி' அங்கு ஒரு போலி நிர்வாக அமைப்பினை ஏற்படுத்த முயலல்.
2. வடக்கில் கொடூரமான முறையில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள முயலல்.

இவ் இரு முனைகளிலான நடவடிக்கைகளையும் 'முயலல்' எனும் பதம் கொண்டே நான் குறித்துள்ளேன். சிறீலங்கா அரசு தனது இராணுவத் தீர்வு குறித்த இரு முனைச் செயற்பாடுகளில் வெற்றியடையப் போவதில்லை என்பதனை வலியுறுத்தவே இப் பதத்தினை இங்கு பிரயோகித்துள்ளேன்.

இங்கு, கிழக்கினைச் 'சுத்தப்படுத்தல்' என்பது சிறீலங்கா அரசின் நீண்ட நாட் கனவாகும். சிறீலங்கா ஆயுதப்படையினரும் கிழக்கில் விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க பகீரதப்பிரயத்தனம் செய்து வருகின்றனர். புவியியல் ரீதியிலும் குடிப்பரம்பல் ரீதியாகவும் தமக்கு உள்ள சாதகமான நிலைமைகளை முழுமையாகப் பயன்படுத்திப் பார்த்தும் படையினர் இம் முயற்சியில் வெற்றியடையவில்லை. போராளிகளுக்குரிய விநியோகங்களைக் கட்டுப்படுத்தி, தமது இலக்கினை அடைந்து கொள்வதற்கு கிழக்கின் பல தமிழ்க் கிராமங்களை மனிதரற்ற பிரதேசங்களாக்கியும் (NO MAN ZONE) தமது முயற்சியில் படையினர் தோல்வியினையே தழுவியுள்ளனர். கிழக்கின் பல கிராமப் பகுதிகளும் காட்டுப் பிரதேசங்களும் இன்றும் போராளிகளின் கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளது. கிழக்கின் எந்தப் பாகத்திலும் தாக்குதல் நடாத்தக்கூடிய தகைமையினைப் போராளிகள் கொண்டுள்ளனர் என்றும் கணிக்கப்படுகின்றது.

இத்தகைய ஒரு சூழலில், கிழக்கிலும் வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்த அரசு முயன்று வருகின்றது. இம் முயற்சிக்கு இரு காரணங்களைக் கூற முடியும்.

1. கிழக்கில் தேர்தல்களை நடாத்துவதன் மூலம், 'பயங்கரவாதத்தினை' வடக்கிற்குள் மட்டுப்படுத்தி விட்டதாக ஒரு தோற்றத்தினை ஏற்படுத்தல், கிழக்கில் 'ஜனநாயக' நடைமுறையினை ஆரம்பித்து விட்டதாக உலகிற்குக் காட்டுவதற்கு இத் தேர்தல் பயன்படலாம்.

2. 1994 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாக இருப்பதனால், ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்களின் முன் வாக்காளர் நிலை குறித்து மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்ள, உள்ளூராட்சித் தேர்தல்களைப் பயன்படுத்தல். கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றினை நடாத்தி, வடக்கு -கிழக்கு இணைப்பினை நிராகரிப்பதற்கான சாதக, பாதக சூழ்நிலைகளை மதிப்பீடு செய்யவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் பயன்படலாம்.

எனவே தான் 1994 இல் கிழக்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடாத்த, அரசு அவசரப்படுகின்றது. கிழக்கில் இருந்து போராளிகளைச் 'சுத்தப்படுத்த' முடியாவிடினும், சுத்தப்படுத்தி விட்டதாக ஒரு தோற்றத்தினை ஏற்படுத்தவே அரசு முயல்கின்றது. சிறீலங்கா ஆயுதப் படையினரின் உளவுத்துறைத் தகவல்களின்படி, போராளிகள் எங்கிருக்கிறார்கள் என்பதனை அறிந்திருந்தும், எதுவும் செய்ய முடியாத நிலையிலேயே ஆயுதப் படையினர் உள்ளனர். 1992 உடன் ஒப்பிடும் போது, 1993 இல் கிழக்கில் ஆயுதப் படையினருக்கெதிரான போராளிகளின் நடவடிக்கை குறைந்தமைக்கு கிழக்கு 'சுத்தப்படுத்தப்பட்டமை' காரணம் அல்ல. யுத்த தந்திரத்துக்கமைய கிழக்கிலிருந்து போராளிகளின் படையணிகள் வடக்கிற்கு நகர்த்தப்பட்டிருந்தமையும், ஆயுதப்படையினர் தமது நடமாட்டத்தினை வெகுவாகக் கட்டுப்படுத்தியிருந்தமையுமே காரணங்களாக இருக்கலாம்.

தற்போது போராளிகளின் படையணிகள், கிழக்கு நோக்கி நகர்த்தப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழீழ மக்களின் தாயகப் பூமியினை வடக்கு -கிழக்கு என இரு கூறுகளாகப் பிரிக்க முயல்பவர்களுக்கு, இப் படையணிகள் தக்க பதிலை வழங்கும். எனவே சிறீலங்கா அரசு எண்ணுவது போல கிழக்கினை 'சுத்தப்படுத்திவிட்டதாக' ஒரு தோற்றத்தினை ஏற்படுத்துவது கூட சிறீலங்கா அரசால் முடியாத காரியமாகவே இருக்கும்.

கிழக்கினை விட, வடக்கில் அடைந்து கொள்ளும் இராணுவ வெற்றிகளின் தேவை இன்று சிறீலங்கா அரசினை அழுத்துகின்றது. 1993 இல் தொடர்ச்சியாக விடுதலைப் புலிகளிடம் பெற்று வந்த தோல்வி, சிறீலங்கா அரசினை ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளியுள்ளது. இலங்கைத் தீவில் இருப்பது இனப்பிரச்சினையல்ல; பயங்கரவாதப் பிரச்சினையே என்று கூறி அரசியல் தீர்வினை நிராகரித்த ஜனாதிபதி விஜயதுங்கா, இராணுவத் தீர்வு முயற்சியில் பாரிய தோல்விகளைத் தழுவியுள்ளமை அவரை இரண்டும் கெட்டான் நிலைக்குத் தள்ளியுள்ளது.

அண்மையில், ஐக்கிய தேசியக் கட்சியின் 39 ஆவது வருடாந்த மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி விஜயதுங்கா, "பயங்கரவாதத்தினை வடக்கிற்குள் மட்டுப்படுத்திய பின்னர் அதற்கு என்ன சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்பது எனக்குத் தெரியும்" எனக் கருத்து வெளியிட்டுள்ளார்.

கிழக்கில் சுத்திகரிக்கப்பட்டுள்ளதாக ஒரு தோற்றத்தினை ஏற்படுத்திக் கொண்டு, வடக்கில் மிகக் கொடூரமான இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிடல் என்பதே இக் கருத்தின் உட்பொருளாக இருக்கும்.

வடக்கில் இராணுவ வெற்றியினை அடைந்து கொள்ளத் துடிக்கும் விஜயதுங்கா அரசு, அம்

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

## போர் உலா....

காய்ச்சல், அதுதான் யோசிக்கிறம்".

"அப்படியேதும் அவசரம் என்றாள் பக்கத்து வீட்டு சின்னப்புவைக் கூப்பிடு. அவன் வருவான். நானும் சொல்லிட்டுப் போறன்". வீட்டுக்குள்ளிருந்து மருமகள் வெளிக்கிட்டாள்.

"இந்தாங்கோ சாப்பாடு".

"என்ன ஆக்கினனீ?" மகன் கேட்டான்.

"புட்டும் மீன் குழம்பும் இருக்கு. உங்களுக்குப் பிடிச்ச சாப்பாட்டத்தான் செய்தன்".

அன்புடன் மனைவியைப் பார்த்தான்.

"மெய்யேப்பா உவன் சின்னவனுக்கு காய்ச்சலும் மாறுதில்லை. கெதியா வந்தியள் என்றாள் ஒருக்கா முள்ளியவளைப் பக்கம் கொண்டு போகலாம்".

"அம்மா, தம்பி இப்பவும் வாந்தி எடுத்திட்டான்". இது மூத்த மகள்.

"நில்லப்பு வாறன்".

உள்ளே ஓடிச்சென்று குழந்தையைத் தூக்கிக் கொண்டான். அருகே மனைவி. முற்றத்தில் வைத்து முத்தமிட்டபின் கொடுத்தான்.

"நான் கெதியா வந்திடுவன். என்னைப் பாராமல் நீ மருந்தைப் போய் எடு".

"அப்பு இந்தமுறை எத்தினை ஆமியள் சுடுவியள்?" பேரன் இடுப்பில் கைவைத்தபடி கேட்டான்.

"உதுக்கெல்லாம் கணக்கோடா பொடி. வாற ஆமிக்காரனையும், காடையனையும் நான் உசிரோட இருக்கும் வரை சுடுவன்".

"உசிரில்லாட்டி?"

"நீ ஏன்ரா பொடி இருக்கிறாய்? நான் போனா நீதான் சுடவேணும். இல்லாட்டி எங்கட வீட்டில இருந்து, புலவுகளையும் உன்ர அம்மாச்சிப் பசுவையும் கன்றையும்கூட கொண்டு போயிடுவான்கள். பிறகு நீ அடுத்தவன்ர கொட்டி.. .லில தான் இருப்பாய்".

"அப்ப ஏனப்பு எனக்கு நீ காட்டித் தரேல்ல?"

"நீ இப்ப சுட்டா உன்னை துவக்கு இழுத்துக் கொண்டு போடும். நீ வளர்ந்தப் பிறகு பழகலாம். அப்ப, போட்டுவாறம். பிள்ளையள், பொடியக் காட்டி மருந்தை எடுங்கோ".

ஐயா மகனுடன் எம்பக்கம் விரைந்தார். "ஐயாவுக்கு கதையைக் குடு. தண்ணி வாங்கிக்கொண்டு வாறன் என்றேன்".

"அம்மா கொஞ்சம் தண்ணி". மூத்த மகள் கானைக் கொண்டு போனாள். சிறுமி ஓடிவந்தாள்.

"அம்மா பட்டியில அம்மாச்சிப் பசுவைக் காணேல்ல. மற்றதெல்லாம் நிற்குது".

ஒரு கணம் திகைத்து மறுகணம் குரலை உயர்த்திய மகனை இழுத்து வாயைப் பொத்தி உள்ளே இழுத்துச் சென்றாள். "கொப்பர் போற நேரத்தில் கத்தாதை, வா. இரண்டுபேரும் போய்ப் பார்த்து வருவம்". மெல்லியதாய்க் கேட்டது.

வீதியால் வந்து என்னைக் கடந்துகொண்டு வெள்ளைப் பசு ஒன்று கன்றுடன் புகுந்தது. "இங்க நிற்குது" -ஓடிவந்து கட்டிக்கொண்டு முத்தமழை பொழிந்தான். அதுவும் நாக்கால் நக்கியது. கன்று இவனைச் செல்லமாக இடித்தது.

இந்த அன்பிற்காக என்றாலும், இவன் தன் பிறந்த மண்ணைக் காக்க உறுதியோடு நிற்பான் என எண்ணியபடி, நீருடன் நடந்தேன். தமிழரின் சரித்திர பூர்வ வாழிடமான வடக்கு, கிழக்கை இணைத்து வரும் இப் புண்ணிய பூமியில், இவ்வாறான மக்களின் தேவையை எண்ணி வியந்தேன். பின்னாலிருந்து அப்புவின் குரல் தெளிவாகக் கேட்டது.

"50 ஆம் ஆண்டு காலத்தில் சிங்களவங்களுக்கு நல்லாக் குடுத்தனாங்கள். செம்மலைக்கு வந்தவங்கள். நல்ல வெளுவ கொடுக்க ஓடிப் போனாங்கள். பிணைச்சு வைச்சிருந்த எங்கடையாட்களையும் மீட்டு அவங்களின்ர வாடிகள் எல்லாத்தையும் கொளுத்திப் போட்டு வந்தனாங்கள். பிறகு பொலிசு வர நாங்கள் காட்டுக்க ஒளிச்சிட்டம். எங்கடயாக்கள் நாலு பேரை பிடிச்சிட்டுப் போய் வழக்காடி விட்டவனாம். பிற்பாடு ஆமி வந்தல்லோ சனங்கள கொடுமைப்படுத்தி கலைச்சவன். உதில் நிற்பாட்டுங்கோ நாங்கள் வாறம்".

இருவரும் வயல் வரம்பினூடாக நடக்கத் தொடங்கினர். நான் இதயனைப் பார்த்தேன். அர்த்தத்துடன் சிரித்துக் கொண்டான். நாங்கள் ஒரு புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்கும் முன்னர், எமது தாயக இணைப்பைத் துண்டாட முயன்ற சிங்களவரை எதிர்த்துக் கலைத்த மூத்தவர்கள் இவர்கள். எங்கட அரசியல்வாதிகள் இவர்களுக்கு போதிய ஒத்துழைப்பு வழங்கியிருந்தால், நிச்சயமாக ஒரு பெரிய மாற்றத்தை அடைந்திருப்போம். சிதறிக்கிடந்த இவர்களை புரட்சிகர நோக்குடன் வழிப்படுத்தியிருப்பின் எமது தேசம் விடிந்திருக்கும். அதை விட்டு வெறும் அரசியல் சதிகளுக்குள் இறங்கி, நாற்காலிக்குச் சண்டை பிடித்து, சனங்களையும் திசை திருப்பியதனால் ஏற்பட்ட காலப் பின்னடைவே இது என்றேன்.

இவ்விதம் எம் வாகனச் சில்லின் வேகத்தோடு என் சிந்தனையும் சுழன்றபடி, எம் பிரயாணம் தொடர்ந்தது. ■

(தொடரும்...)

## தாய் மண்ணுக்காக...

அவர்களை நெருங்கினான் அவன்... மூளையும் மனதும் ஒப்பாமலே ஒருவர் கத்தியை ஏந்தினார். ஏனையோரையும் வெட்டச் சொன்னான் அந்தப் படையதிகாரி.

'வெட்டுவதா... எதிரே கிடப்பவன் மனிதன்... உயிரோடிருக்கிறான்... துடிக்கிறான்... அதுவும் அவர்களால் நேசிக்கப்பட்டவன்.'

தமிழ்ச்சாதியின் விதியை நொந்தவாறே கத்தியை ஓங்கினார் அவர்... 'இவனை வெட்டுவதா...?' கத்தி மெதுவாகத்தான் தொட்டது வில்லியத்தின் உடலை. அந்தப் பெரிய கூர்க் கத்தியினால் ஏற்படுத்திய காயம், சவர அலகால் ஏற்படுவதைவிடச் சிறியதாக இருந்தது.


வில்லியம் துடித்துக் கொண்டிருக்கிறான். கீழேயிருந்து, வெட்டுபவரிடம் கூறுகின்றான்-


"மெல்ல வெட்டாதீங்க... ஒரேயடியா வெட்டுங்க".

இதற்கு மேலும் அவரால் இயங்க முடியவில்லை. படையதிகாரி அதட்டினான். மீண்டும் கத்தியை எடுத்தார்.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# எதிரிக்கு முடிவாக





விழிக்குள் கனவுகள் படர்ந்திடும் வயதில்—புதிய
விதி எழுதப் புறப்பட்டனர் — எம்மை
அழித்திட எண்ணும் எதிரிகதை முடிக்க
உளத்தில் எரிமலை சுமந்து நடந்தனர்

தேசம் மீட்டிட தீயுளும் கரைவோம் என
தீர்க்கமாய் முடிவு எடுத்தனர் — பந்த

பாச உறவுகள் நினைவுகளை மனதில்
பத்திரமாய் புதைத்துப் பக்குவ மனிதராகினர்.

ஊமைகளும் பேசிட உறங்கியவரும் விழித்திட
உயிர் உருகி ஒளி பரப்பிய — அவர்
நினைவுக்குள் கனன்ற இலட்சியத்தீ ஏந்தி
எதிரிக்கு முடிவாக உறுதியாக நடக்கின்றோம்.

—சத்தியா




**U.T.O**
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

**L.T.T.E**
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

**T.C.C**
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
Tel 03-4576347 F 5608224

**T.C.G**
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

**T.C.C**
Via Mariano Stabile - 34
90139 Palermo, Italy
T/F091-611 3179

**T.C.C**
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

**T.C.C**
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

**W.T.C.C**
HOF JECKLIN, 7415 RODELS
SWITZERLAND
Tel/Fax: 081-831797

**T.C.C**
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

**T.C.C**
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943


Printed by Observer Group Newspapers.